# அடுத்த இதழில்

**பெ. தூரன்**
(எழுத்தாளர் பேட்டி)

★

**தொல்காப்பியர் காலத் தமிழர்**
புலவர் குழந்தை

★

**மர்ம முகம்**
(துப்பறியும் கதை)
'சித்தார்த்தன்'

★

**மக்கள் மன்றம்**

★

**நஞ்சிலே நின்றவள் அஞ்சுகம்!**
காட்டூர்க் கண்ணன்

★

சாலமன் அப்பாத்துரை
ரா. பாலாஜி
பிலோ இருதயநாத்
சுலோசனு
டர்பன் ச. மு. பிள்ளை

ஆகியோர் எழுதுகிருர்கள்

# பொருளடக்கம்

வெண்ணிலவு / பொன்னி

| மலர் 7 | பிப்ரவரி 1, 1953 | இதழ் 1 |
|---|---|---|

திருவள்ளுவர் ஆண்டு 1983
தைத் திங்கள் 19-ம் நாள்


| | | |
|---|---|---|
| அடுத்த இதழில் | ... | 1 |
| பெரிய பிரச்னை | ... | 2 |
| புத்தாண்டு | ... | 3 |
| உலகக் கண்ணேட்டம் | ... | 8 |
| மலர் மணம் | ... | 11 |
| வானம்பாடி | ... | 13 |
| நிழல் | ... | 17 |
| காதல் கனல் | ... | 22 |
| காகிதப் படகு (சிறுவர் தொடர் கதை) | ... | 29 |
| பொங்காத பொங்கல் | ... | 33 |
| எச். ஜி. வெல்ஸ் | ... | 39 |
| மாட்டு வண்டியில் | ... | 41 |
| தாய்மை | ... | 46 |
| ஒற்றை ரோஜா (தொடர்கதை) | ... | 52 |
| பொழுது போக்கு | ... | 63 |


★

அட்டைப்படம்
**நிழல்**

# பெரிய பிரச்சினை!




ஆந்திரத் தலைநகராவதற்கு, ஆந்திராவில் உள்ள பல நகரங்கள் ஒன்றோடு ஒன்று போட்டி போடுகின்றன.

# புத்தாண்டு

“பொன்னி’யும், தமிழகமும் தம் வாழ்வில் ஒரு புத்தாண்டு புகுந்துள்ளன. அணிமையில் கழிந்த தமிழர் தனித்தமிழ் விழாவான பொங்கல் விழாவுடன் திருவள்ளுவர் ஆண்டு 1983 முடிவுற்று 1984 பிறந்துள்ளது. தமிழர் புத்தாண்டுப் பிறப்புக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகத்தான் மேனாட்டில் புத்தாண்டு எனப்படும் கிறிஸ்தவ ஆண்டு பிறந்தது. அதன்படி 1952 முடிவுற்று நாம் 1953 ல் புகுந்திருக்கிறோம்.

‘பொன்னி’யின் தமிழ்த் தொண்டில் தமிழகத்தில் தமிழார்வமுள்ள பல எழுத்தாளர், கவிஞர், கலைஞர் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு எம் நன்றியுடன் பாராட்டும் உரியனவாகும். பொங்கல் மலரைப் பாராட்டியும் அதன் இன் நலங்களை அன்புள்ளமீதூரப் புகழ்ந்தும் அறிவுரை தந்தும் வந்துள்ள அணிந்துரைகள் எண்ணில. அவற்றுள் சிலவற்றை வாசக அன்பர்கள் இவ்விதழில் காணலாம். இடநிறைவஞ்சி ஒருசிலவே தரப்பட்டுள்ளன. பொங்கல் மலரில் இடம்பெற முடியாது பொங்கி வழியும் சுவை தரும் பாடல்களும், கதைகளும் பிறவும் இதுபோல இவ்விதழை அணிசெய்கின்றன.

## நாணல்நகர் காங்கிரஸ்

புத்தாண்டை ஒட்டி ஹைதராபாது நாணல் நகரில் மாநிலத்தின் 58-வது காங்கிரஸ் பேரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்திய மக்கள் ஆரவாரத்தையோ, விடுதலை பெற்ற இந்தியாவில் தொடக்க ஆண்டுகளில் ஏற்பட்ட காங்கிரஸ் தலைமைப் போட்டிப் பூசல் ஆரவாரத்தையோ இவ்வாண்டில் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் காணமுடியவில்லை. இரண்டும் ஓய்ந்துவிட்டன. மாநாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒரு பாதிப்பேர்கூட வரவில்லை. மீந்தவருள்

ளும் முன்னுளேய காங்கிரசின் பொதுநோக்கமோ, குறிக்கோள் ஒற்றுமையோ இல்லே. வெள்ளியார் ஆட்சியை எதிர்த்த இயக்கத்தின் அமைப்பாகிய காங்கிரசில், அவ்வாட்சி அகன்றபின் அத்தகைய குறிக்கோள் இருக்க முடியாது. அது இப்போது ஒரு திட்டவட்டமான கொள்கையுடைய அரசியல் கட்சியாக நிலவ்வில்லே. கட்சியாக இன்னும் உருவாகாத பல கருத்துக்களேயுடைய திட்டமில்லாத பல குழுக்கள், பல சாதி, மத, மொழி சார்ந்த குழு நலங்கள் ஆகியவற்றின் முரண்பாடு மிக்கதொரு கும்பலாகவும், ஆட்சியின் ஒரு நிழலாகவுமே அது விளங்குகிறது. இந்நிலேயில் இக் காங்கிரசின் ஒரே கவர்ச்சி மக்கள் மனங்கவர்ந்த சொல்லின் செல்வரும் மாநில ஆட்சியின் முதல்வருமான ஜவஹர்லால் நேருவாக இருந்தது இயல்பே. அவர் மாநிலத்தின் அரசியல்மா மன்றத்திலும் பொதுக் கூட்டங்களிலும் பேசுவதையே காங்கிரஸ்மாநாட்டிலும் பேசியதும் எதிர்பார்க்கத்தக்கதே.

முதல்வர் நேரு காங்கிரஸில் இப்போது ஆருவது தடவையாகத் தலேமையுரை யாற்றினர். ஒரு ஆண்டின் தலேவர் மறு ஆண்டிலும் தலேவராய் இருக்கலாமா, நடுவாகிலும் தனியாகிலும் காங்கிரஸ் தலேவ்ரே முதல்வராயிருக்கலாமா என்ற பிரச்சினேகள் காங்கிரசில் அடிபட்டன. நேருவின் தலேமையுரையில் ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய விளக்கமே பெரும்பகுதியாயிருந்தது. அதன் பெருஞ்சாதனேகளேயும் அதுபற்றிய தம் கனவார்வங்களேயும் அவர் விரிவாக எடுத்துரைத்தார். பிந்தியபகுதியே சுவைகரமானது என்பதில் ஐயமில்லே. வழக்கம்போல உலகத்துக்கே அறிவுரை தரவல்ல உயர்கருத்துக்களர்கிய முத்துமணிகளே அவர் இப்பகுதியில் வாரி இறைத்துள்ளார். ஆங்காங்கே கவிதை அலேயெடுத்தாடும் உணர்ச்சிப் பெருக்கமும், நகைச்சுவை பெருக்கும் சொல் துணுக்குகளும் நேரு அவர்களுக்கே உரிய படைவீரன் வாள் வீச்சுக்களும் மின்னிச் சுடர்வீசுகின்றன.

"சாதி வேறுபாடு கண்டிக்கத்தக்கது; அது நீடித்து நிலவுவதனுல் நாட்டு வாழ்வு நலிவது உறுதி."

"ஒரு நாட்டின் அடிப்படைவலு அதன் அரசியல் நிகழ்ச்சிகளேப் பொறுத்ததன்று. அதன் பொருளியல் வாழ்வையே பொறுத்தது. அதன் முன்னேற்றமும் உண்மையான பாதுகாப்பு வ்லுவும் அதுவே. அரசியல் வலிமை அதன் பயனே"

"ஜமீன்தாரி, ஜாகீர்தாரி முறைகள் எவ்வளவு விரைவில் ஒழிக்கப்பட முடியுமோ, அவ்வளவு விரைவில் ஒழிக்கப்படவேண்டும். நில உடைமை உரிமைக்கு ஒரு உச்ச எல்லே வகுப்பது இன்றியமையாதது. கூட்டுறவுப் பண்ணேகள் ஊக்கப்பெறவேண்டும்"

ஜவஹரின் மூளேயிலும் உள்ளத்திலும் இடம்பெறும் இத்தகைய சமதருமக் கருத்துக்கள் இந்திய வாழ்வில் இடம்பெற

இந்தியாவின் சூழ்நிலை இடம் தரவில்லை என்றுதான் கூற வேண்டும்.

## ஆந்திர, தமிழகப் பிரச்னைகள்

நாணல் நகர்க் காங்கிரசின் உயிர்த்துடிப்பற்ற அமைதியைக் கெடுத்த ஒரே பிரச்னை மொழிவாரி மாகாணம் பற்றியதாகும். தூங்கி வழிபவருக்கிடையில் ஒரு சிறு பாம்பு புகுந்தால் ஏற்படும் பரபரப்பையும் குழப்பத்தையும் இது ஏற்படுத்திற்று. மாநிலமெங்கும் மக்களும், மக்கள் உயிர்நாடி அறிந்து அவர்கள் ஆர்வத் துடிப்பில் கலந்த மக்கள் தலைவர்களும் மொழி மாகாணத்தை நோக்கி ஏங்குகின்றனர் என்பதில் தடையில்லை. ஆனால் காங்கிரசில் வலுப்பெற்றுவரும் புதிய தலைவர்களும், முன்பு மக்கட் போராட்டத்திலிருந்து ஒதுங்கி 'அறவுரை' கூறிநின்ற சில பழந்தலைவர்களும், மதவாதத் தலைவர்களும், மொழிவாரி மாகாணக் கொள்கைப் பத்தாம்பசலிக் கொள்கை என்றும், பிற்போக்கானது என்றும், விடுதலைப் போராட்டக்காலக் காய்ச்சல் கோளாறு என்றும் கருதுகின்றனர்.

மொழிவாரி மாகாணக் கொள்கையில் தலைவர்களும் மக்களும் ஒருமுகப்பட்டு நிற்கும் பகுதியாக ஆந்திரம் விளங்குகிறது. ஆனால் தலைவர்கள் ஆதிக்கவெறி மக்கள் நாட்டார்வத்தைப் பிற நாட்டு மக்கள் உரிமைகள்மீது, சிறப்பாகத் தமிழர் உரிமைகள் மீது தாண்டிவிடுகிறது. ஜஸ்டிஸ்கட்சி பிறக்கு முன்பே, ஆந்திரத் தலைவர்களின் ஆதிக்கப்போக்குணர்ந்த வெள்ளை ஏகாதிபத்தியம் அவர்களுடன் கள்ள உறவுபூண்டு, பழய வட ஆற்காட்டின் ஆறு தமிழ் வட்டங்களையும் அயலிலுள்ள ஆந்திர மாவட்டத்தின் வட்டங்களுடன் 1911 லேயே சேர்த்து, சித்தூர் என்ற இருமொழி மாவட்டமாக்கினர். அதுமட்டுமா? தமிழகத்தில் தமிழர் தெலுங்கருடன் சரிசம உரிமையுடன் வாழ்வதுபோல், சித்தூர்த் தமிழரை வாழவிடாமல் அவர்கள் உரிமைகளை நாற்பது ஆண்டுகளாக நயத்தாலும் பயத்தாலும் நைப்பாசைகளாலும் சிதைத்துவந்துள்ளனர். இச் செயலை மறைக்க, சென்னை 'மனதே,' செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர் 'மனதே' என்ற கூக்குரல்கள் எழுப்பிவந்தனர். நடுவரசில் இன்னும் மணிதருள் மாணிக்கமாக நிலவும் ஜவஹர் போன்றவர்கள் இந்த ஆதிக்கக் குரலுக்கு முழுதும் செவிதராவிட்டாலும், அகப்பட்டமட்டும் தமிழர் உரிமைகளைச் சூறையாட அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்தியாவிலேயே சமரச உணர்ச்சிக்குத் தலையூற்றாக விளங்குவது தமிழகம். இச் சமரச உணர்ச்சியின் நிழலாகவே இந்தியாவின் தேசியம் விளங்கிற்று. ஆனால் தமிழருக்குப் பிறவிப் பண்பாகவும் இயற்கைக்கூறாகவும் உள்ள இத் தேசியம் பிறருக்கு ஒரு அழகுக் குறிக்கோளுணர்ச்சியாகவே நிலவுகிறது. 'கோவணம் உடுத்தாதவன் நாட்டிலே, கோவணம் அணிந்தான் பைத்தியக்காரனாக'க் கருதப்படுவதுபோல, தேசிய உணர்ச்சியில் ததும்பித் தன் தனித்தன்மை மறந்து நின்ற தமிழன் உரிமைகளை

மற்றப் பலரில் மாகாண உரிமைகள், குழுநல உரிமைகள் சுரண்டுகின்றன. ஆனால் நல்லகாலமாக ஆந்திரரின் அடாக்கூக்குரல் தூங்குகின்ற தமிழகத்தைத் தட்டி எழுப்பியுள்ளது. தமிழரின் 'சென்னி' யாகிய சென்னைப்பட்டினத்தையும், தமிழகத்தின் தலைச் சூட்டாகிய திருப்பதியையும் சித்தூர்த் தமிழக வட்டங்களையும் மீட்கத் தமிழகம் கிளர்ந்துள்ளது.

வணிக நிலையங்களும் கலை நிலையங்களும், ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழக வட எல்லை உரிமையைக் காக்க முனைந்துள்ளது. வீட்டுமொழி அல்லது சாதிக் குறியீடு காரணமாகத் தெலுங்கர் என்று அழைக்கப்படும் தெலுங்குச் சாதுச் செட்டிமார்போன்ற வகுப்பினர் தம் நாட்டு மொழியாகிய தமிழ் காக்க முனைந்து முன் வந்துள்ளனர். ஆந்திரர் இதிலிருந்தாவது பாடம் கற்றுக்கொள்வார்களா? சித்தூர்த் தமிழகத்தில் சிலர் ஆட்சிக் காரருக்குப் பயந்து ஆந்திரருக்கு இடைக்காலத்தில் அடங்கி நடந்திருக்கலாம். சிலகாலம் ஆந்திரர் என்ற பெயரால் தங்களுக்கு ஆந்திரர் புது நலம் வழங்கிவிடுவார்கள் என்று கருதி ஏமாறலாம். ஆனால் இறுதியில் தமிழகத்திலுள்ள தெலுங்கரின் நாட்டுமொழிப்பற்று அவர்களுக்கு வழிகாட்டுவது உறுதி.

ஆந்திரர்—மீந்து நிற்கும் சென்னை மாகாணம் ஆகியவற்றிடையே நேர்மையான பிரிவினைக்கு வழிகோல வந்துள்ள வாஞ்சு அவர்கள் சுற்றுப்பயணம் முடிவடைய இருக்கிறது. சென்னையில் இம்மாதம் 24–25 தேதியில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த தமிழ் இலக்கிய மாநாடும், வேலூரில் 25–26 தேதி பழந்தமிழ் நாவலர் திரு. சோமசுந்தரபாரதியார் தலைமையில் நடைபெற்ற தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாடும் தீர்மானங்கள் நிறைவேற்றித் தமிழகத்தின் குரலை எழுப்பியுள்ளன. பல கட்சித் தலைவர்களும், மக்கள் தலைவர்களும், அறிஞர்களும் இக்குரலுக்குத் தமிழகத்தின் முழுவலுவும் தந்துள்ளனர்.

ஆந்திரநாடு விரைவில் அமையுமென்றும், விரைவில் தமிழர் உரிமைகளுக்கும் தமிழ்மொழி ஆட்சிக்கும் உரிய பாதுகாப்புக் கிடைக்க காங்கிரஸ் மேலிடமும் சென்னை அரசியலும் வழி வகுக்குமென்றும் நம்புகிறோம்.

**காரைக்குடியில் ராதாகிருஷ்ணன்.**

பொங்கல் விழாவன்று நடைபெற்ற தமிழக நிகழ்ச்சிகளிடையே குறிப்பிடத் தக்கதொன்று சென்னை மாகாண ஆட்சித் தலைவர் திரு. சிர்ப்பிரகாசர் அவர்கள் திறந்துவைத்த மின்சார ரசாயன நடு ஆராய்ச்சி நிலையமாகும். இயல் நூலறிவிலும் அது சார்ந்த தொழில் மேம்பாட்டிலும் வரலாற்றில் முந்தி நின்று உலகுக்கு வழிகாட்டிய இந்தியா இன்னும் அப் பழம்புகழை அடைய முடியுமென்றும், அறிவுத்துறைக்கு உதவாமல் அதனை ஆக்கத் துறைக்கும், முதலாளித்துவத் தன்மைப் போட்டிகளுக்கு உதவாமல் கூட்டுழைப்புக்கும் தேசிய சரிசமவாழ்க்கை நலத்துக்கும்

அதைப் பயன்படுத்த வேண்டுமென்றும் இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தமிழகத்துக்கு நினைவூட்டினார்.

"மதத்தில் சிலருக்கு எவ்விதம் மிகுதியான ஆர்வம் இருக்கிறதோ அதைப்போன்ற ஆர்வம அறிவு நூலிலும் இருக்கவேண்டும்"

டாக்டரின் இப்பொன்னுரை இந்தியாவின் மதவாழ்வையும் தேசியவாழ்வையும் பொன்மயமாக்க உதவத்தக்கது. மடமைகளையும், கொடுவெறித்தனத்தையும் வளர்க்கும் இந் நாட்டுக் கோயில்கள், மடங்கள், அறிவுநூலையும் கல்வியையும் வளர்த்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? கோயில்களைக் கட்டி வீண்புகழ்த் தம்பட்டமடிக்கும் செல்வர்கள் தொழிலாளர்களுக்கு நலந்தரும் நிலையங்கள், கல்வி நிலையங்கள், சமூகச் சீர்திருத்தம், சமூகசேவை ஆகியவற்றில் பணம் செலவு செய்வதே உண்மை அறம் என்பதை அறிஞர் உணரவைத்தால் இந்தியா எவ்வளவு சிறப்படையும்? சாதி ஒழிக்கச் சாதித்தலைவர்களும் சாதி அமைப்புக்களுமே முன் வந்தால் அது தமிழர் மரபில்வந்த சாதிகளுக்கே பெரும்புகழ் அல்லவா? மேனாட்டு அழிவாற்றல்மிக்க விஞ்ஞானத்தையும் கீழ்நாட்டுச் செக்குமாட்டு ஆராய்ச்சிகளையும் ஒரேபுடத்திலிட்டு அன்பு அறிவு ஆராய்ச்சியாக்கத் தமிழகம் முனையுமா?

புத்தாண்டில் இவைபற்றித் தமிழகமும், 'பொன்னி' எழுத்தாளரும் வாசகரும் சிந்திப்பார்களாக! கட்சிமத மாற்சரியம் விடுத்து, சாதிகுழு நலன்கழகம் அடிப்படை உரிமைகளைக் காத்து தாழ்த்தப்பட்ட பிற உலக இனங்களுக்கு வழிகாட்ட முந்துமாக!

## சென்னைத் தமிழ் எழுத்தாளர் மாநாடு

கடந்த ஜனவரி 18-ம் நாள் நடைபெற்ற சென்னைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. கி. சந்திரசேகரன் அவர்கள் தமிழ் எழுத்தாளர்கட்கென ஒரு சகாய நிதி சேர்க்கவும், கூட்டுமுறைப் புத்தக வெளியீட்டுப் பண்ணை அமைக்கவும் வேண்டிய திட்டங்களை வலியுறுத்திப் பேசியமை குறிப்பிடத் தக்கவையாகும்.

'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கி. அவர்கள் வரவேற்புரைக்குப் பிறகு மாநாட்டைத் திறந்துவைத்த தமிழ்த்தென்றல் பெரியார் திரு. வி. க. அவர்கள தம் அறிவுரையில் எழுத்தாளர்மாநாடு நாட்டின் உயிர்போல என்றும், எழுத்து வழிபட்டுப் போற்றிப் புகழுதற்குரிய தொன்றாகும் எனவும், எழுத்தாளர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டிப் பரப்ப உழைத்தல் இன்றியமையாததென்றும் கூறினார்.

மற்றும், திரு. பெ. தூரன், திரு. சாண்டில்யன், திரு. ரகுநாதய்யர், திரு. டி. கே. சண்முகம் ஆகியவர்களின் பொருள்மிக்க பேச்சுகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இம்முறை கூடிய எழுத்தாளர் மாநாட்டின் விளைவாக வேனும் எழுத்தாளர் வாழ்வு வளம்பெற்று, நிலைபெற்று வளர ஆவன செய்யப்படுமென்று பெரிதும் நம்புகின்றோம். ★

# உலகக் கண்ணோட்டம்



'வில்லன்'

## யுத்த பயம் ஒழிய...!

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் கொரியா நிலைமைபற்றி அமெரிக்க அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்த அமெரிக்கா சென்றிருக்கிறார். தம் கட்சி பதவிக்கு வந்தபின் யுத்தபயம் மேன்மேலும் பின்னடைந்துவிட்டதென அவர் பெருமைப்பட்டுக்கொள்கிறார். ருஷிய சர்வாதிகாரி ஸ்டாலின், அமெரிக்காவும் சோவியத் ருஷியாவும் ஏன் பரஸ்பரம் சமாதானமாக இருக்கமுடியாது, யுத்தம் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதற்குக் காரணமேயில்லையே, என்கிறார். அப்படியானால் உலகத் தலைவர்கள் ஏன் வாய்விட்டுப் பேசி யுத்த பயத்தை அடியோடு விலக்கிவிட முடியாது என்று கேட்கிறோம். யுத்த பயத்தை ஒழிக்க வேண்டுமானால் முதலில் அமெரிக்கா முன்வந்து இரண்டு விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். ஜனாதிபதி பதவியேற்கப் போகும் ஐஸன்ஹோவர் கொரியா யுத்த முனையைப் பார்வையிட்டு வந்துவிட்டார். கொரியா யுத்தத்தைச் சீக்கிரத்தில் முடித்துவிட சீனாவைத் தாக்குவதும், அமெரிக்காவின் கையாளான ஷியாங்கே ஷேக்கு உதவியளித்து சீனாவை மற்றொரு புறமாகத் தாக்குவதும் ஐஸன்ஹோவரின் திட்டத்தில் இருக்கலாமோ என்ற ஐயம் இருந்துவருகின்றது. இவ்விதம் செய்தால் மூன்றாவது உலக மகாயுத்தம் நிச்சயம் வந்துவிடும் என்று இப்போது ஜனாதிபதியாயுள்ள ட்ருமனே எச்சரிக்கை செய்திருக்கிறார். ஐஸன்ஹோவர் கொரியா முனையைப் பார்வையிட்டதற்குப் பதிலாக சோவியத் ருஷிய மார்ஷல் ரோடியோன் மாலினோவ்ஸ்கியும் சமீபத்தில் கொரியா யுத்தமுனையைப் பார்வையிட்டாரென்று தெரிகிறது. இந்த நிலையில் அமெரிக்கா முன்வந்து ஷியாங்கே ஷேக்கைத் தூண்டிவிடவோ, கொரியா யுத்தத்தை விஸ்தரிக்கவோ போவதில்லையெனத் தெளிவுபடுத்திவிட வேண்டும். சீனா, ஆசியாவில் வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. 45 கோடி மக்கள் ஒரே அரசாங்கத்தின் கீழ் கூட்டாக வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் வலிமையையும் அந்தஸ்தையும் உணர்ந்துவிட்டனர். அவர்கள் உழைப்பாளிகள். இனியும் மேலை நாட்டு வல்லரசுகள் சீனாவை அலட்சியம் செய்யமுடியாது. இன்று சீனா, சோவியத் ருஷியாவுடன் சேர்ந்துள்ளது எனில், அதற்கு அமெரிக்கா தன் செல்வாக்கைப் பிரயோகித்து ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திலிருந்து அதை ஒதுக்கிவைத்திருப்பதே காரணம். அமெரிக்கா இத் தவறை உணர்ந்து சீனாவை ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தில் சேரவிடவேண்டும். நம் நேரு இதை வெகுகாலமாக வலியுறுத்தி வருகிறார். சீனாவைத் தீண்டாத நாடாகப் பாவித்து ஆசியப் பிரச்னைகளைத் தீர்க்க முயல்வது அசட்டுத்தனமெனப் பலதடவை கூறிவருகிறார். அமெரிக்கா துணிந்து முன்வந்து சீனாவை அங்கீகரிக்க வேண்டும். யுத்தபயம் ஒழிய இதுவே வழி.

## பாகிஸ்தான் யுத்த கோஷம்!

பாகிஸ்தானுக்குக் காஷ்மீர் இன்றியமையாததாம். பாகிஸ்தான் சம்பூரணமடைவதற்கு காஷ்மீர்வேண்டுமென பாகிஸ்தான் மந்திரியொருவரே சொல்லிவிட்டார். சர்வஜன வோட் மூலம் காஷ்மீர் பிரச்னை தீரவே பாகிஸ்தான் கோருகிறது என்பதெல்லாம் பித்தலாட்டம் என்பது பலதடவை தெளிவாக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பெண்மணிகள் காஷ்மீர் தங்களுடையதென ஏற்கெனவே தீர்மானித்துவிட்டதாக பேகம்லியாகத் அலியும் சொல்லிவிட்டார். நிலைமை இவ்வளவு தெளிவாயிருந்தும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அக்கிரமமான தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பது மிகவும் கண்டிக்கத்தகுந்தது. இந்தியாவைச் சேர்ந்த ராச்சியம் ஒன்றின் மீது படையெடுத்து வந்த பாகிஸ்தானைச் சம அந்தஸ்துடன் பாவிக்க வேண்டுமாம். தென்கொரியாவைத் தாக்கின வடகொரியாவின் அக்கிரமத்தைக் கண்டித்த அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானைக் கண்டிக்கப் பின்வாங்குகின்றனர். என்? அதில்தான் ரகசியம் உள்ளது. தனக்குச் சாதகமான இத்தீர்மானத்தைக் காட்டி, இந்தியா இணங்காவிடின், போர் மூளும் எனப் பாகிஸ்தான் பத்திரிகைகள் கோஷமிடுகின்றன. பாகிஸ்தானிகள் ஆயுதம் தாங்கி ஓயாமல் எல்லையிலுள்ள காஷ்மீரின் கிராமங்களைத் தாக்கிச் சூறையிட்டு வருகின்றனர். கொரியா விஷயத்தில் நியாயம் பேசும் அமெரிக்கா இந்தியாவுக்கு விரோதமான இந்த அநீதியிலிருந்து முதலில் விலகிக் கொள்ளுமாறு கேட்கிறோம். பாகிஸ்தானை ஆதரிக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் நட்பை இழந்துவிடுவர் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

## நம் சிக்கல்கள் தீர......

நம் இந்திய அரசாங்கம் பெருமுயற்சிகள் செய்து தேசிய அபிவிருத்தித் திட்டமொன்று போட்டுள்ளது. நம்மிடமுள்ள வசதிகளையும் பிறநாட்டினர் அளிக்கக்கூடிய வசதிகளையும் ஒன்று திரட்டி நம் பொருளாதார சமுதாய நிலைமை குறுகிய காலத்தில் முன்னேற்றமடைவதற்கானதொரு திட்டமே இது. மக்கள் வாழ்க்கைத் திட்டம் உயரவேண்டுமென்பதே நம் விருப்பம். வாழ்க்கைத் திட்டம் உயர, நம் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி இவை துரிதமாக அபிவிருத்தியடைய வேண்டும். இவ்வபிவிருத்தியைச் சாதிக்கவே இது போடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குரிய வேலைகளைச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்பேயாயினும், மக்கள் உற்சாகமுடன் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால்தான் பலனேற்படும். எந்த பெரிய முயற்சியிலும் தவறுகள் சில ஏற்படலாம். அவற்றைப் பொருட்படுத்தாமல் அரசாங்கத்திற்குப் பக்கபலமாக இருப்பதே முறை. நம் கடமை இங்ஙனமாக இருக்க, குறுகிய நோக்கமுடையவர் நேருவின் முயற்சிகளுக்குத் தடைபோட்டு வருகின்றனர். வகுப்புவாதிகள் குழப்பம் செய்து நிலைமையைச் சிக்கலாக்கி வருகின்றனர். கிழக்கு வங்காள இந்துக்களின் நிலை மிகச் சிக்கலானதொரு பிரச்னையாகும். பாகிஸ்தானின் கொடுங்கோன்மைக்கு அஞ்சி லட்சக்கணக்கான இந்துக்கள் அகதிகளாகி மேற்கு வங்காளத்தில் குவிந்துள்ளனர். கிழக்கு வங்காளத்தில் எஞ்சியுள்ள லட்சக்கணக்கான இந்துக்கள் பலவிதக் கொடுமைகளுக்காளாகி வருந்துகின்றனர். இந்திய அரசாங்கம் ராஜரீக முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. வகுப்புவாதக் கோஷ்டிகள் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டுமென்கின்றனர். நேருவைத் எனத் தூற்றுகின்றனர். போர்

உண்மையாகவே மூண்டால் கஷ்டப் படப்போகிறவர்கள் இந்த வகுப்பு வாதிகள் அல்லர், ஏழை மக்களே. பாகிஸ்தான் வெறியர் படுநாசம் விளைவிப்பர். நாமும் அவர்களைப் போல் நாச வழியில் இறங்க நேரும். இதனால் மக்கள் துன்பப்படாமலிருக்க, நியாயமான வழியில் ஏதேனும் செய்துபார்க்க முடியாதாவென இந்திய அரசாங்கம் பார்க்கிறது. பாகிஸ்தானிகள் வெறியராக இருந்தால் நாமும் வெறியர் ஆக வேண்டுமா?

காஷ்மீர் மற்றொரு சிக்கலான பிரச்னை. பாகிஸ்தான் அநீதியாக இந்தியாவைச் சார்ந்த காஷ்மீர்மீது படையெடுத்தது. நாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்குத் தாவா செய்தோம். ஆனால் துரதிருஷ்ட வசமாக அமெரிக்கரும் அவர்களின் செல்வாக்கின் கீழ் உள்ளவர்களும் பாகிஸ்தானை ஆதரித்து வருகின்றனர். பாகிஸ்தானின் அநீதியைக் கண்டிக்காமல், அதையும் இந்தியாவுடன்சரிசமமாகப்பாவித்து இந்தியாவுக்கு விரோதமாத நடந்துவருகின்றனர். கூடிய வரையில் நம் தரப்பை அமைதியான முறையில் எடுத்துச் சொல்லியும் ஆட்சேபணை தெரிவித்தும் வருகிறார் நேரு. காஷ்மீர் சர்வதேச விவகாரத்திற்குட்பட்டிருப்பதால் நாம் அவசரப்பட்டு யாதொன்றும் செய்வதிற்கில்லை. அன்றியும், பாகிஸ்தான், ஷேக் அப்துல்லா இந்தியா அரசாங்கத்தின் கையாள் என்று பழிக்க இடங்கொடாமலிருக்கவும், சர்வதேச ஸ்தாபனத்தில் தாவாவில் இருக்கும்போது திடுமென யாதொன்றும்செய்வதற்கில்லை என்ற காரணத்திற்காகவும் காஷ்மீரை ஓரளவு தனிப்பட்ட முறையில் நடத்தவேண்டியிருக்கிறது. ஷேக் அப்துல்லா மற்றெல்லா ராச்சியங்களைப் போல காஷ்மீரையும் இந்திய அரசாங்கத்தின் பூரண ஆதிக்கத்திற்கும் இணைப்புக்கும் உட்படுத்தத் தயங்குகிறார் என்பது உண்மையாயினும், இந்தியா தன் சுயநலனுக்காகக் காஷ்மீரைக் கபளீகரம் செய்ய விரும்புகிறது என்று பாகிஸ்தான், செய்துவரும் பிரசாரத்தின் முழுத் தவறை அம்பலப்படுத்த காஷ்மீரைத் தனி முறையில் நடத்தித்தானே ஆக வேண்டியிருக்கிறது? சிக்கல் தீர்ந்துவிட்டால், காலாகாலத்தில் காஷ்மீரம் இந்தியாவுடன் பூரணமாக இணைந்துதானே ஆகவேண்டும் நிலைமை தெளிவடையுமுன் அவசரப்படுவானேன்? இவற்றையெல்லாம் வகுப்புவாதிகள் உணராமல், நேருஜியின் நிதானத்தைக் கண்டித்தும் நிலைமையைக் குழப்பியும் வருகின்றனர். ★


## BIRTH CONTROL

| GENTS: | PER DOZ. | Rs. | As. |
|---|---|---|---|
| *Velvet F. L.* | ,, | 3 | 0 |
| *Marina F. L.* | ,, | 3 | 12 |
| *Washable F. L.* | ,, | 7 | 8 |
| *Prevax English* | ,, | 8 | 4 |
| *Nevo Nia U. S. A.* | ,, | 10 | 0 |
| *American Tips* | ,, | 5 | 8 |
| *Crocodile Paragans* | ,, | 13 | 0 |

| LADIES: | EACH | Rs. | As. |
|---|---|---|---|
| *Check Pessary* | ,, | 2 | 0 |
| *B. C. Jelly* | ,, | 1 | 12 |
| *Peton Tablets* | ,, | 2 | 0 |
| *Sponge Ball* | ,, | 1 | 0 |

**V. P. STORES. (P. I. M.)**
KHUNI PUL - MEERUT.

# ... மலர் மணம் ...

### இலக்கியச் சுவை

'பொன்னி' பொங்கல் மலர் இலக்கியச் சுவையுடன் அழகாக அமைந்துள்ளது.

இராஜ அரியரத்தினம்,
ஆசிரியர் : 'ஈழகேசரி', சிலோன்.

★

### சிறந்தது !

இவ்வாண்டு பொங்கல் மலர் சிறப்புற அமைந்திருக்கின்றது.

வாணிதாசன்,
சேலியமேடு.

★

### குறைந்த விலையில் நிறைந்த பொருள் !

என்றும்போல் இவ்வாண்டு மலர் மகிழ்ச்சியூட்டுகிறாள். குறைந்த விலையில் நிறைந்த பொருள்களைத் தந்திருக்கிறாள்.

பெரி. சிவனடியான்,
சிதம்பரம்.

★

### பலே ஜோர் !

மலர் பலே ஜோர் !

நா. சீ. வரதராசன்,
சென்னை—2.

★

### அழகு மலர்

பொன்னி மலர் கண்டு மகிழ்ந்தேன்; மகிழ்ந்து கொண்டே இருக்கிறேன். அந்த அளவில் மலரை அழகுற அமைத்துத் தந்திருக்கின்றீர்கள். திரு. 'கல்கி'யின் பேட்டிக் கட்டுரை மிகப் போற்றுதற்குரியதாக இருக்கிறது. 'பாலா'வின் 'ஊஹூம், சிரிக்காதே!' என்னைக் கவர்ந்தது. அதில் உள்ளடங்கியிருக்கும் விஷயங்கள் 'சிரிக்காதே' என்ற தடையை மீறி என்னைச் சிரிக்க வைத்துவிடுகின்றன.

பி. எஸ். ராமகிருஷ்ணன்,
அறந்தாங்கி.

★

### உயிர்ப் படைப்பு

1953 பொன்னி மலர் பார்த்தேன். மலர் உயிர்ப்படைப்பு; உன்னதச் சித்திரம்! 'பாலா' எழுதிய 'ஊஹூம் சிரிக்காதே!' கட்டுரை ஏ ஒன்! மற்றும் எஸ். ஆறுமுகம், தி. ஜானகிராமன், பீஷ்மன் இவர்களது நாடகம், கதை களும், 'கல்கி' பேட்டியும் சுவையுள்ளன.

கே. விஜயலட்சுமி,
மாங்குடி.

★

### கருத்துக் குவியல்

மறைக்கப்பட்ட, மறந்துவிட்ட திராவிடரின் பண்பைத் திருத்தும் எண்ணங்களிலே கருத்தைச் செலுத்துவதாக உள்ளது மலர்.

கே. ஏ. அருள்,
ஆமதாபாத்.

★

### இன்சுவை

பொன்னி மலர் தந்த புதுச்சுவை இன்னும் எங்கள் உள்ளத்தில் நின்று இன்சுவை தருகிறது.

சு. கி. வெங்கடபதி,
சுல்தான்பேட்டை.

★

## சிங்களத் தீவிலும்....!

பொங்கல் மலரெனப் பொன்னி—தந்த தமிழ்
பூங்காவில் கொய்த புதுமலரில்
தங்க முருக்கித் தமிழ்த்தாய் அணியாய்த்—
தைப்பொங்கலுக்கெனவே பூண்டுவிட்டாள்.

சிந்தைக்கினிய தமிழ் விருந்தென்று—நல்ல
சிங்களத் தீவிலும் போற்றுகின்றார்.
செந்தமிழ்க் கவிஞர் சிங்கங்களும்—மிக
சிறப்போடு பூரித்துப் பங்குகொண்ட

நந்தமிழ்த் தேனோடு செங்கரும்புக் கட்டியும்
நாவுக்கினிய நல்முக்கனியும்
பைந்தமிழ் பொங்கிப் படைத்திட்ட—
பொன்னிக்குப் பல்லாண்டு கூறியே
வாழ்த்துகின்றோம்.

அழியாநிலை ஆ. முந்தையா,
கொழும்பு-13

★

## மலர் மிக நேர்த்தி

வழிப்போக்கன்,
சென்னை-2.

★

## விருந்து

பொன்னி பொங்கல் மலர் கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளிக்க இனிய படையலாக இருந்தது. ஒவ்வொரு எழுத்தாளரைப்பற்றியும் சிறுசிறு விமரிசனம் செய்திருந்த முறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நா. ஜகந்நாதன், எம். ஏ.
சென்னை-3

★

## தெவிட்டாத மலர்

'கல்கி' பேட்டிக் கட்டுரை, 'வைகாசி' 'கருப்ப இசிவு' 'ஊஹூம் சிரிக்காதே!' 'மனத்தெளிவு' 'கள்ளும் காமமும்' ஆகியவற்றுடன், அங்கங்கே தோன்றும் அறிவுத் துணுக்குகள் முதலியவற்றை வாசிக்க என்றும் தெவிட்டாததாக இருக்கின்றது மலர். இந்தியாவில் எத்தனையோ அருமையான தீபாவளி மலர்களும், பொங்கல் மலர்களும் எத்தனையோ பாஷைகளில் வெளியாயிருக்கின்றன. ஆனால் 'பொன்னி' பொங்கல் மலருக்கு அவை ஈடாகுமோ என்பது சந்தேகம்தான்!

பிலோ இருதயநாத்,
சென்னை-4.

★

## புதுமை!

இவ்வாண்டு பொன்னி பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றேன். புதுமுறையிலே பூரித்திருக்கிறாள். தமிழரின் உள்ளத்தைத் தட்டி எழுப்பியிருக்கிறாள். விலை குறைவு.

கே. எஸ். கணபதி,
புதுக்கோட்டை

★

## மலரிலே...!

பொன்னி மலர் வாசகர்களுக்கு அரிய கருத்துக்களை, எளிய நடையிலே பதிய வைத்திருக்கிறது. தயாரிப்பு அபாரம்; குறைவு விலையில்.

வை. அ. நடராசன்,
சென்னை-21

★

## சாலச் சிறந்தது

பொன்னி பொங்கல் மலர் கிடைத்தது; மகிழ்ச்சி; மலர் சாலச் சிறந்திருந்தது. வளர்க; வாழ்க!

நே. ஆர். கௌசல்யா,
சென்னை-5

★

## அழகுப் பூங்கா!

இவ்வாண்டு பொன்னி பொங்கல் மலர் அழகுத் தமிழ்ப் பூங்காவாகத் திகழ்ந்திருக்கிறது.

மு. அடைக்கலம்,
ஆலங்குடி

★

## புதுமையின் மலர்ச்சி

காணக் கண் குளிர, சிந்தித்த மனம் குளிர, இதழ் பல தள்ளியும், அள்ளியள்ளிக் குவிந்த காவியக் கதை பல சூழ, மலர்ச்சி தருகிறது மலர்.

மதுரூஸ் சோமசுந்தரம்.

# வானம்பாடி

முதலாசிரியர்: **கவிஞர் ஷெல்லி.** தமிழாக்கம்: **கா. அப்பாத்துரை**

**வா**ழி வானம்பாடி, வான்
அணங்குநீ! புள் அல்லவே!
சூழ் ஒளித்தடத்தில்நின்று
பண் இசைப்பாய் மெல்லவே;
தூய நெஞ்சுருக்கி மஞ்சுருக்கி வையம் வெல்லவே!

உயர்ந் துயர்ந்து வானகம்
அயர்ந்து வையம் நீங்கியே,
வயங்குவாய்; பொன்அழல் முகில்
கீற்றுப்போலத் தேங்கியே,
வானின் மிசைபண் வேய்ந்திசை மிதந்துவானில் ஓங்கியே!

ஆழும் தங்கக்குடத் தின்மீது
பொன்னின் மின்னல் வெளியிலே,
சூழும் மேகப் பொற்படாம்
தவழ்ந் தயர்வாய் ஒளியிலே,
தூயவ்வானில் ஆவியாய் மெய்த் துயராறுக்கும் அளியிலே!

ஒளிகொள் உருவைச் சூழவே
ஒளிக்கண் சிதறி யேகவே
வெளிறுபகல் விண் மீனென
ஒளிக்குள் ஒளியாய்ப் போகவே,
விழிகட்கொளித்தாய் செவிகளுக் காரா இசைத்தேனாகவே!

வெள்ளித் தகடாம் வெண்ணிலா
வீசும் கணையின் கூர்மையெலாம்
அள்ளும் விடியல் ஒளியினால்
மங்கி மறைந்தபடி யெனலாம்
ஆடி ஒளித்தும் ஒளிதிகழ அளிக்கும் உன்றன்
அரும்பொன் மூலாம்!




இரவின் பரந்த ஆட்சியிலே
எழிலார் முகிலில் உள்ளிருந்தே
பரவும் ஒளிக்கால் மிளிர்ந்தென்னப்
பால்வார்த் தொளிரும்
நல்மருந்தே
படரும் மோனவெளி யெல்லாம்
பாங்காம் உன்றன் இசைவிருந்தே!


உன்றன் இயல்பை யாமறியோம்,
உனக்கோர் உவமை உண்டுகொலோ?
துன்றுமழை வில் மழைநீரே
பொழியும், இசைவில் உண்டுகொலோ?
தோன்று உருவோர் மழைவில்லோ தூயஇசை
மாமுகில் கொல்லோ?

கவிஞன் கொல்லோ, கவிதையங்
கனவார் ஒளியின் நடுநின்று
குவிந்த கருத்தின் ஆற்றலினுல்
குவலய மெங்கும் திரைகொண்டு
குளிர்வித்தாய்! எம் நடுக்கமெலாம் நீர்ந்தோம்,
உன்தேன் அமுதுண்டு!

கனகக் குன்றின்மிசை கனக
மாடத் திருந்து கடலலையே
கனியக் காதல் கவிபாடும்
கன்னிகொலோ, நீ? காதலையே
கனியாய்ப் பிழிந்து பொழிந்து தவிர்க்கின்ருய்
உயிரின் நோதலையே!

பனிமென் திரையின் ஊடாகப்
பவளக் குகையின் உள்ளிருக்கும்
தனி மின்மினியின்
தளிரொளியோ?
அறியோம்! இனிய கள்ளிருக்கும்
சாதிமலரும் புல்லிதழும் துளங்க
உன்றன் ஒளிஉருக்கும்!





முல்லைப் புதரின் தழையிடையே
முறுவல் முத்தாய்
முகிழ்க்கின்றாய்!
மல்லல் மணமும் மலரொளியும்
மகிழ எங்கும் அவிழ்க்கின்றாய்!
மறைக்கும் தழையும் மணங்கமழ
மகிழும்தென்றல் உகுக்கின்றாய்!

பசும்புல் நுனிதொறும் இளவேனில்
பைந்துளி மணிகள் பதிக்கின்றான்!
விசும்பு தண்பனித் துளிகளினால்
விரிமலர் இதழ்கள் அவிழ்க்கின்றான்!
மேல்நின்றி சைத்துளி சிந்திஉயிர் அளித்தே
எவரையும் நீ வென்றாய்!

பறவை, அணங்கு, கவிஞன், நங்கை
பரவும் வேனில் எவையுமே
உறநின் இனிமைக் கிடாமோ?
உயிரின் இசைகள் அவையுமே
ஒருங்கே கொண்டாய்; உயிர்த்தெளிவும்
ஒளிகொள் இன்பச் சுவையுமே!

காதல், மது, கன்னியர் நாடிக்
கலப்பில் இனிமை கண்டறியோம்!
நோதல் கொண்ட எமக்கின்ப
நுட்பம் அளிப்பாய்! கலைவறியோம்!
இன்ப இசையின் வெள்ளத்தே எழுந்து
மிதக்கும் வகையறியோம்!



கோயில் கொண்ட இறைக்கீதம்
கோக்கள் கண்ட புகழ்க்கீதம்
வாயில் கொள்ளப்படா ஏதம்
உடையன! கொள்ளேம்,
அவைஏதும்!
வேதநாதம் தீராது, தீர்க்கும்
துயர்உன் மெய்க்கீதம்!

எந்த இனிய பொய்கையிலே
வயல்கள், மலைகள், வானிலே
சந்தப் பொழில்கள், நிலவிலே
சாதி மலரின் தேனிலே
இந்த இனிமை ஊற்றெடுத்தாம், இளமெல்
எழிலின் ஊனிலே!

களிப்பில் குளித்த உன்னளியில்
களைப்பும் இளைப்பும் காணகிலேம்!
ஒளித்தும் சோர்வுஉன் இசைத்தளியில்
ஒண்டாது. இதனைப் பேணகிலேம்!
ஒள்ளிய அன்பு புகட்டிஅது தெவிட்டா
வகையும் செய்முகிலே!

கடைவரு துயிலின் கருப்பொருளே
கனவிலும் நனவிலும் ஓர்ந்திடுவாய்!
இடைவரு சோர்வும் குலைவுமெலாம்
இல்லாத் தெளிவில் சேர்ந்திடுவாய்!
எங்குறுகவலை வீங்குதுன்பம் இல்லாப்
பளிங்கொளி தூங்கிடுவாய்!

முன்னும் பின்னும் நோக்குகின்றோம்,
முடியாதனவே முயல் கின்றோம்!
மின்னும் களிப்பின் ஒளிமுகட்டில்
விரியும் துன்பம் பயில்கின்றோம்!
விரிதுயர் அயர்ந்தே தூங்குமின்பம் தொடர்ந்தோம்;
சிறுமை துவள்கின்றோம்

துன்பம் தொடரா இன்பமிலாச்
சிறியேம் எமது தாழ்வெங்கே?
துன்பம் தொடரா இன்பமே
உடை நினது வாழ்வெங்கே?
தூயநினது வானிசையாம் தொடர்ந்து
பயிலும் அவ்வாஎங்கே?

இசையின் இன்ப அலைகளெலாம்
எங்கே, உன்றன் இசைமுன்னே?
நசைகொள் கவிஞன் கற்பனையின்
நயங்கள் எங்கு, உன்நகைமுன்னே?
இசைஞர் கவிஞர் ஒருகோடி என்னுவார் உன் கலைமுன்னே?

வானார் உன்றன் கலையமுதின்
தேனார் ஒருதுளி நீ தரினே
கானார் கற்பனைக் கடல்பொங்கும்
கவிதை வெள்ளம் போதரவே
கானோர் கவிஞன் எனக்கவிதை உலகாள்விக்கும்
உன் ஆதரவே! ★

# நிழல்

நாடகம் :
**பி. எல். சாமி**

## காட்சி 1

[இடம்: காவிரிப்பூம்பட்டினம். காவிரி கடலோடு கலக்கு மிடத்தில் மாமரங்களும், புன்னைமரங்களும் அடர்ந்துள்ள கானலஞ் சோலை. அருகே நீலநிறக் கடற்கழி ஒன்று ஓடுகிறது. கரிகாலன் அத்தை மகனான அத்திமல்லனும், மருதியும் அன்றாடம் சந்திக்குமிடம் அது. புன்னை பூத்துத் தாழைமடல் விரிந்து மணம் கமழுகிறது. மருதி கீழே விழுந்துகிடக்கும் புன்னைக் காய்களை எல்லாம் பொறுக்கிக் குவித்துவைத்து ஒவ்வொன்றாய் எண்ணிக்கொண்டிருக்கிறாள்.]

மருதி : ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு...நூறு. அப்பாடா! நூறு ஆய்விட்டது. அவர் இன்னுமா வருகிறார்?

அத்தி : (அவள் பின்னாலிருந்து கவனித்துக்கொண்டிருந்தே) வந்து கொண்டே இருக்கிறார். நீ எண்ணிக் கொண்டேயிருந்தால்...மருதி! நாளை உள்ளிவிழா...

மருதி : இப் பச்சைப் புன்னைக் காயைப் பாருங்கள். எதுபோலிருக்கிறது, பச்சைக் கோலிபோலில்லையா? (அம்மானை ஆடத் துவக்குகிறாள்.)

அத்தி : இப் புன்னைக்காய் கிளியின் தலைபோல் அதே அளவில் இல்லையா? நாளை உள்ளிவிழா. நீ அரண்மனையில் ஆட எல்லா ஏற்பாடுகளும் செய்தாய்விட்டது. ஆதிமந்தி பார்த்து 'ஆ' வென்று வாயைப் பிளக்க வேண்டும், தெரியுமா?

மருதி : நான் என்ன இசைக்கூத்தியா, அரங்கில் ஆட்டமாட? மீன் பிடிக்கும் குட்டிக்கு எதற்கு ஆடரங்கப் புகழெல்லாம்.

அத்தி : இல்லை மருதி. நீ என்னிடம் கற்றதெல்லாம் அரங்கேறினாலல்லவா என் வித்தை சித்திபெறும்.

மருதி : நீங்கள் என்னென்னவோ கற்றுக்கொடுத்தீர்கள்! (கண்ணைச் சிமிட்டி சிரிக்கிறாள்) அதெல்லாம் அம்பலமானால்?

அத்தி : (கன்னத்தைப் பிடித்துத் திருகுகிறான்; சிவந்துவிடுகிறது.) செக்கர்வானமென்ன உன் கன்னங்கள் சிவக்க தரையில் பட்டதோ படவில்லையோ எனப் பந்துபோல் பஞ்சுப் பாதங்கள் தெறிக்க......

மருதி : போதும் போதும் உங்கள் வர்ணனை. எனக்கென்னவோ அரண்மனையில் ஆடுவதற்குப் பயமாயிருக்கு.

அத்தி : உன்னைப் போல்பேடியை நான் பார்த்ததே இல்லை. இப்பொழுது கூச்சம் போனால்தானே இந்திர விழாவில் ஆட முடியும்.

மருதி : நானா பேடி. பேடித்தனமெல்லாம் அரண்மனைக்காரி அந்த மந்தி ஆதியிடமல்லவா அடைக்கலமடைந்திருக்கிறது. அவள் மந்தி. நீங்கள் கடுவன் குரங்கு (அடிக்கப் போகிறான். ஓடுகிறாள்) அப்பா வர நேரமாச்சு, நான் போகிறேன்......

அத்தி : மருதி, நாளை இரவு எட்டாம்பக்கத்துத் திங்கள் கானலஞ் சோலை; அந்தப் பெட்டை அன்றில் கூவும் நேரம் காத்திருப்பேன். வரத் தவறாதே...

[சழியோரமாக மருதி செல்கிறாள். பக்கவாட்டத்தில் அவள் தோழி பாடிக்கொண்டே வருகிறாள்]

சுமதி : (பாட்டு)

"அன்னம் துணையோ டாடக்கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
மானேர் நோக்கம் மறப்பாரல்லர்"

மருதி: என்னடீ? கண்ணைச் சாய்த்துச் சாய்த்து எங்கேயோ பார்த்துக் கேலியாப் பாடறே?

சுமதி: இல்லே மருதி, இப்படியே வந்தேன்ஞ? அங்கே ஒருத்தர். மான் நிறம், அகன்ற மார்பு. அது வலது காலை மடக்கி, கால்மேல் ஊன்றி கை முட்டியை கால்முட்டியால் தாங்கிக் கொண்டு (நடித்துக் காட்டுகிறாள்) அந்த இரு அன்னப்பறவைகள் விளையாடுதே அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு பித்துப் பிடித்தாப்போல நின்றுகொண்டிருந்தது. பெருமூச்சுக் கூட. பார்க்கிறதுக்குப் பாவமாயிருந்தது.

மருதி: பரிதாபமாயிருந்ததாக்கும். போடி உன் குறும்புத்தனமெல்லாம். (விரைவாக் வீடுநோக்கிச் செல்கிறாள்)

## காட்சி 2

[இடம்: கரிகாலன் அரண்மனை. மந்திரிகள், அத்தி, அரசன் ஆதிமந்தி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். உள்ளிவிழா நடனம்]

முடிக்கூத்தர்: அரசே, இன்று மருதியெனும் மங்கை உங்கள் திருமுன் ஆடப்போகின்றாள். ஆடல்வல்லோரே, கூர்ந்து கவனிக்கவும்.

[இசைக்கூத்தன் ஒருவன் மருதியை அழைத்து வருகின்றான். இசைக்கூத்தன் பாடித் துவக்க மருதி நடனம் ஆடுகின்றாள். கரிகாலன் ஆகியோர் வியப்போடு பார்க்கின்றனர். நடனநடுவில்]

ஆதிமந்தி: (மெதுவாக) இவள் யார்? நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்த காட்டியங்கள்போலிருக்கின்றனவே. இக்காட்டுக் குறத்திக்கு யார் கற்றுக்கொடுத்தார்கள்?

அத்தி: அவளா? கானமயில். காட்டில் வளரும் மணிப்புறாவிற்கு நடனம் மனிதன் கற்றுத்தரவேண்டுமா? கானாற்றங் கரையில் ஆடும் மயிலுக்கு ஆடவல்லோன் ஆட்டம் பயில்விக்க வேண்டுமா. ஏட்டில் எழுத முடியா அவள் அழகும் ஆட்டமும் நாட்டில் காண முடியாது. குன்றில் வளரும் கோங்க மலருக்கு ஓவியன் வர்ணம் தீட்ட வேண்டுமா?

ஆதி: ஏது கண்டவுடன் கொண்டு விட்டீர்களா, என்ன?

அத்: கண்டதும் விண்டுவிட்டது. உன்னையும் மறந்தேன். சு! சு! இரையாதே. (மௌனம். ஆதி முகத்தைச் சுளித்துக்கொண்டே மருதியின் முகத்தையே உற்று நோக்குகிறாள். ஆடிக்கொண்டே வந்த மருதியின் பார்வை அத்தியின் விழியில் பட்டுத் தெறிக்கின்றது. அவளுடைய இதழ்க் கடையில் ஒரு புன்னகை மொட்டு கட்டுவிடுகிறது. அத்தி குற்றம் செய்தவனைப்போல ஆதியைப் பார்க்கிறான். அவளும் உணர்ந்து கொள்கிறாள்)

கரிகாலன்: இப் பெண் யார்? யாரிடம் கற்றாள்?

இசைக்கூத்தன்: சேரநாட்டிலிருந்து வணிகநோக்கோடு காவிரி முகத்தில் குடியேறியுள்ள பரதவர் பெருமகள் இவள். (மருதியிடம் திரும்பி) கற்றது யாரிடம்?

(மருதி மௌனம் சாதிக்கின்றாள்)

சுமதி: அரச குமரனிடமிருந்து. (இசைக்கூத்தன் காதில் ஏதோ கூறுகின்றாள்)

இசை: அரசே, இளவரசர் அத்தியிடம் வித்தை கற்றாளாம்.

கரி: அத்தியிடமாகவா! (அத்தியைப்பார்க்கிறார். ஆதியும் அவனையே கோபத்தோடு பார்க்கிறாள். இதோ எம் பரிசு. (கொடுக்கிறான்) மல்லன் அத்தி, நீ ஆட்டன் அத்தியானது இன்றுதான் தெரிந்தது.

[வெளியேறுகிறார். கலைகிறது]

## காட்சி 3

[இடம்: அரண்மனையில் வசந்த மாளிகை, திறந்த அறை]

அத்தி: (ஏதோ எழுதிக்கொண்டே) ஆதா! ஆதா!

ஆதி: என்னை எதற்குக் கூப்பிட்டீர்கள்? அந்தப் பட்டியைக் கூப்பிடுங்கள். நாடகமா ஆடுகிறீர்கள் என்னுடன்?

அத்தி: ஆதனையல்லவா கூப்பிட்டேன். (ஆதனைத்தேடிப் போகிருன். ஆதியும் வெளியே சென்று தோழியை உளவறிய அனுப்புகிருள். அத்தி அலுவலை முடித்துக்கொண்டு உள்ளே வந்து அமருகிருன்)

ஆதிம: அரண்மனையில் வாழ்வோர்க்கு ஆட்டக்காரியிடம் என்ன ஆர்வம். நாடாள்வோர்க்கு நாட்டக் கூத்தியிடம் என்ன நட்பு? என்ன ஓலை? என்ன காதல்? நமக்குத்தான் என்ன கண்ணியம்?

அத்தி: போதும் உன் சொற்பொழிவு. உளறுகிருயே! சேரநாட்டில் நான் சிறுபிள்ளையாயிருக்கும்போதே இவளை எனக்குத் தெரியும். எத்தனை பருந்தின் ஓடும் கரு நிழலைக் கண்டு அஞ்சும். நட்டமாடும் நல்லநாட்டுப் புரு மேலேவட்டமிடும் வல்லூறு நிழலைக் கண்டு அஞ்சும். மிதமிஞ்சிய கடவுள் பக்தன் பெண்ணின் நிழலைக் கண்டு அஞ்சுகிருன். அரசர்கள் செங்கோல் நிழல் வளைந்தால் அஞ்சுவார்கள். பணக்காரன் கள்ளன் நிழலைக் கண்டு அஞ்சுவான். காமுகி கணவன் நிழலைக் கண்டு அஞ்சுவாள். உண்மைக்காதலி பிரிவின் நிழலைக் கண்டு அஞ்சுவாள். பிஞ்சு நெஞ்சினன் தன்னிழலையே கண்டு அஞ்சுவான். அஞ்சாநெஞ்சன் பழியின் நிழலைக்கண்டு அஞ்சுவான். என் நிழலை நீயே கற்பித்துக்கொண்டு அதைக்

## நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| அத்திமல்லன் | : | சேரநாட்டு அரசன் |
| மத்தி | : | அத்தியின் தோழன் |
| மருதி | : | சேரநாட்டுப் பரதவர் குலமகள் |
| ஆதிமந்தி | : | சோணுட்டு அரசன் மகள் |
| சுமதி | : | மருதியின் தோழி |
| ஆதன் | : | அரண்மனைக் குற்றேவலன் |

நாட்கள் தாழைச் சோலைகளில் ஓடியாடி யுளளோம். அன்று காவிரி முகத்தில் கண்டேன். நாட்டியமாட ஏற்பாடு செய்தேன்.

ஆதிம: சேரநாட்டுச் சிறுக்கியா சோணுட்டிலும் உங்களைத் துரத்தி வந்துவிட்டாள். உங்களை விட்டு நகராது ஒட்டியிருக்கும் நிழலா அவள்?

அத்தி: ஆதி? பாதையோரத்திலே அப் பைத்தியத்தைப் பார். (எட்டிப் பார்க்கிருள்) தன் நிழலைத் தானே காய்கின்ருன். காதலும் பைத்தியம்தானே. அதனுல்தான் நிழலைக் கண்டு பயப்படுகிருய். ஆழ் கயத்து மீன் ஆடும் நாணலைக்கண்டு அஞ்சும். குஞ்சுக் கருகிலுள்ள கோழி கண்டு அஞ்சுகிருய். என்ன பேதமை!

ஆதி: குலமகளிர் கணவனை நெருங்கும் பிற மகளிர் நிழலையே கண்டு அஞ்சுவர். உங்கள் நிழல் உங்களுக்குப் பயன்படுமா? உங்கள் நிழலான அவளும் அப்படித்தான் நிலைத்திருக்க முடியாது. மேகம் தரும் நிழல் போல் மறைந்துபோய்விடுவாள்.

அத்தி: போகட்டும். அவள் மறைந்து தொலையும் எந்நிழலாய் இருக்கட்டும். நீதான் குளிர்தரும் உயர் தரு நிழலாய் இரேன்.

[குற்றேவலாளன் வருகிருன்]

குற்றேவலாளன்: இளவரசே, மன்னன் அழைக்கிருர்.

[அத்தி வெளியேறுகிறான்]

## காட்சி 4

[இடம்: காவிரித்துறை. இந்திர விழா நடைபெறுகிறது. நுங்கும் நுரையுமாகக் காவிரிப்புதுப் புனல் ஓடுகின்றது. வெண் மணல் பரப்பி மேலே நீலத் திரை கட்டிய ஒரு துறையில் கரிகாலனும் அவனுடைய மகள் ஆதிமந்தியும் பிறரும் அமர்ந் துள்ளனர். எதிரே அகன்றுள்ள காவிரியில் கயிற்றால் கரையோடு கட்டப்பட்ட படகுகள் மூன்று உள்ளன. நடுவில் உள்ள படகு அன்னம் போன்ற உருவினதாய் அகலமாகவும் அழகாகவும் உள்ளது. அதில் ஒரு மூலையில் உள்ள தட்டில் மருதியும் மறுதட்டில் ஆட்டன் அத்தியும் அமர்ந்துள்ளனர். பொதுமக்கள் இத் தண்ணீர் நாட்டியத்தைக் காணக் குழுமியுள்ளனர். நடனம் ஆடும்போது ஊன்றும் கால், நெளியும் உடல், வீசும் கை. படகை ஒருபுறமும் சாய்த்துவிடாதபடி பார்த்துக் கொள்ளும்படி இருக்கவேண்டும். நாட்டிய மாடுவோருக்குப் படகின் நிலைப்பிலும் கவனம். நாட்டியக்குறிப்பிலும் கவனம், இதுதான் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த நடனம். ஒரு சிலருக்கே கைகூடுவது. மருதியும் அத்தியும் ஆடுகிறார்கள்]

கரிகா: இம்முறையான சிறந்த நடனத்தை நாம் இதுவரை கண்டதில்லை. மருதி! அரசியல், நாட்டைப் பற்றினவையும் என் தனிக்காரியங்களைப் பற்றினவையும் தவிர, பிற எப் பரிசு எதைக் கேட்டாலும் நாம் தர இசைவுகொண்டுள்ளோம். கேள்!

மருதி: அரசே! நான் வேண்டுவது நாடல்ல. மனம்! அதாவது இளவரசர் அத்தியின் மனம் என்பால் நாடியுள்ளது. அதற்கு விடுதலை அளிக்கவேண்டும். (அத்தி தலை குனிகின்றான். கரிகாலன் திகைக்கின்றான். ஆதி கனல்கக்கும் விழிகளோடு அத்தியையும் மருதியையும் மாறி மாறிப் பார்க்கின்றாள். பொதுமக்கள் வியப்புக்குறி முகத்தில் மிதக்க நிற்கின்றனர். மருதி பெருமிதத்தோடு ஏளனப் புன்னகை உதட்டில் வட்டமிட நிற்கின்றாள்)

கரி: (உறுதிக் குரலோடு) மருதி, அரசர் முன் எது பேசுவதென்று தெரியாது. சிறு பிள்ளைபோல் பிதற்றுகின்றாய். அத்தி இளவரசன் ஆதலின் இது நாட்டைப்பற்றிய மற்றும் அரசியல் பற்றிய செய்தி ஆதலின் இதுபற்றிப் பேசுவதுபேதமை. அதைவிட்டு வேறு ஏதாவது கேள்.

மருதி: அரசே, மன்னிக்கவேண்டும். வேறெதுவும் வேண்டாம்.

கரி: பேதைப் பெண்! சரி போகலாம்.

[விழாக்கூட்டம் கலைகிறது. பொதுமக்கள் இதையே பேசிக் கொள்கிறார்கள்]

## காட்சி 5

[இடம்: தொண்டைமண்டலம். கூடாரத்தில் அத்தி எண்ணத்தில் ஆழ்ந்து அமர்ந்துள்ளான். சூழவும் சேனைகளும் காடுவெட்டும் ஆட்களும். தூதுவன் வந்து சிந்தனையைக் கலைக்கிறான்]

தூதுவன்: இளவரசே, ஓலை.

அத்தி: கொண்டுவா. (பிரித்துப் பார்க்கிறான்) (மெதுவாக) இப்பொழுது தெரிகிறது அரசரின் சூழ்ச்சி. என்னையும் மருதியையும் பிரிக்க காடு வெட்டிக் குடியேற்றம் என்று தொண்டைமண்டலத்திற்கு அனுப்பியது. ஆ! மருதி, நீ சேரநாடு போகும் பொழுதாவது எனக்கு இந்த ஓலை எழுதினையே அதுவே போதும். அன்றைய நிகழ்ச்சிக்கு பிறகு.

(தூதுவன் பேச்சைக் கலைக்கிறான்)

தூது: அரசே, இளவரசியார் காவிரிப்பூம் பட்டணத்திலிருந்து வந்துள்ளார்கள். தங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். (போகிறான்)

(அத்தி உடனே வாளை உருவி வெளி

யில் வைத்து மருதி அனுப்பிய ஓலையை வாளின் உறையுள் செலுத்துகிறான்.

ஆதிமந்தி : அத்தான்! அத்தான்! (கட்டித் தழுவிக்கொள்கிறாள்) என் அத்தான்! என்மேல் கோபமா? என்னுடன் சொல்லாது புறப்பட்டு வந்துவிட்டீர்கள். இன்னுமா கோபம்?

அத்தி : (உணர்ச்சியற்ற தொனியில்) இல்லை ஆதி! என்னவோ நினைத்துக்கொண்டிருந்தேன்... சரி, அப்பா எல்லோரும் நலமா? நீ இங்கே எதற்கு இப்பொழுது வந்தாய்?

ஆதி : போங்க...அத்தான். வரக்கூடாதா. திரும்பிப்போய் விடுவேன். உங்களைப்பிரிந்து பட்டபாடுபோதும். கோடைவெயில்கூட அப்படி...

அத்தி : பாவம் குளிர்ந்த நீரோடும் காவிரிதான் ஓடுதே, இன்னும் என்ன?

ஆதி : உங்க மனம் என்ன கல்லா. இப்படி என் எரிச்சலை ஊட்டுகிறீர்கள்.

அத்தி : தூரத்தில் இருந்தாலும் எரிக்குது. பக்கத்தில் வந்தாலும் எரிக்குது. காதல்தீ பொல்லாதது.

ஆதி : போங்க அத்தான், உங்க பரிகாசமும் நீங்களும். அடுத்த மதியத்திலே இந்திரவிழா. நீங்க எனக்குப் படகு நாட்டியம்கற்றுத்தரவேண்டும். நாம் இருவரும் ஆடவேண்டுமென்பது அப்பா ஆணை. அடுத்த நாள் நமக்கு திரு...

அத்தி : சரி, சரி போதும். நீ போய் குளித்து விட்டுச் சாப்பிடு. எனக்கு அலுவல் இருக்கிறது. (போகிறாள்)

[அத்தி இங்கும் அங்கும் உலவிக் கொண்டே தனக்குள்ளே மெதுவாகப் பேசிக்கொள்ளுகிறான்]

இந்திரவிழா; அடுத்துத் திருமணம். மருதி! ஆதிமந்தி! இருபக்கமும் இடி. உள்ளம் மருதியை நாடுகிறது. அரசபீடமோ ஆதியைமுன்னிறுத்துகிறது. கலையோ மருதியைத் தேடுகிறது. நிலையோ ஆதியை ஆதரிக்கிறது. காதலோ மருதியை மருவுகிறது. கடமையோ ஆதியை விடக்கூடாதென்கிறது. கலைக்காக வாழ்க்கையா? இருக்கும் நிலைக்காகவும் மதிப்புக்காகவும் வாழ்க்கையா? ஆதியோ என்மேல் அளவற்றகாதல் கொண்டுள்ளாள். 'அருமை அத்தான்' அவளுக்கு. அவளோ கலைக்கோயில். என்? கலைக்கோயிலில் வீற்றிருக்கும் கலைத்தெய்வம். என்ன சங்கடம்? பிரியும் இருபாதைகள். எதில்செல்வது? பொற்றேரில் மகர தோரணங்கள் கட்டப்பட்டு ஆடம்பரமாய் விளங்கும் அரச வீதியிலா, அல்லது அன்னப்படகில் நீலப்பூ விழிகள் நீலவானை நோக்க, சோலை மலர்கள் சொரிய இலங்கும் நீலக் கழியிலா! (ஓலையை எடுத்துத் திரும்பப் படிக்கிறான்)

தூதுவன் : அரசே! உணவு வட்டித்தாய்விட்டது. இளவரசியார் காத்திருக்கிறார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)


## மாதவிடாய் நின்றுவிட்டதா?

மேன்ஸ்டோவின் — அபூர்வமான மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. மாதவிடாய் நின்று போயிருந்தாலும், தாமதித்திருந்தாலும், 24 மணி நேரத்திற்குள் குணப்படுத்துகிறது. விலை 5—0—0, தபால் செலவு 0—14—0, மேன்ஸ்டோவின் ஸ்பேஷல் – மாதவிடாயை ஒழுங்குபடுத்தக் கைகண்ட மருந்து. Special Rs. 10/

**MERCIAN TRADERS (P-1)**

Post Box 70 MEERUT. U. P.

# காதல் கனல்

பி. வி. இராமசாமி

புதுவகைப் போர் — காதலுக்காகக் காதலி நடத்திய போர் சிதையில் மணம் — ஏன்? காதலைத் திருத்தியது யார்? — எந்த 'வில்லனு'மல்ல — சமுதாய 'வில்லன்', நம் தமிழ்ச் சமுதாய 'வில்லன்' தான்! அந்த 'வில்லன்' அழித்த — அழித்து வருகிற — அழிக்கும் அழிவுக் கேடுகளுக்கு ஒரு சான்று இக்கதை.

அந்நாடு— தமிழ்நாடு—மூவளத்தின் தாவளமாகிய பாண்டிநாடு—முத் தமிழ்நாடு... அதன் அரசன் அவன்.

பாய்ந்தது, அத்தமிழக வீரனின் மார்பகத்திலே வேல்!- சாய்ந்து. விழுந்தனனு அவன்? இல்லை...வேல் பாய்ந்த மார்பகம் நிமிர்ந்தது.

அவ் வீரனின் மார்பிலே குபுகுபு எனப் பெருகி வடிந்துகொண்டிருந்த அந்த உதிரம், அவனுடைய வெற்றி கண்டு களிபேருவகை பொங்க, அவனுடைய மனமுண்ட மனோகரி பூசி மகிழ நினைத்த செஞ்சந்தனக் குழம்பை, குங்குமத்தைக் கேலி செய்வதுபோலிருந்தது.

இந்தத் தமிழக வீரனின் வரலாறு, இம் மறத்தமிழ்நாட்டை ஆளும் அவனுடைய எழில், வீரம், தீரம் அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. சிலிர்சிலிர்த்தது உடல். பூரித்தது, மனம் மலர்ந்தது, அக் கோதை முகம் தென்றல் கண்ட மல்லிகைபோன்று.

அவன் பாண்டியநாட்டின் பார்த்திபன். மாவீர பஞ்சபாண்டிய சகோதரர்களில் மூத்தவன்—குலசேகர பாண்டியன்!

அவள் மைசூர் மண்டலத் தலைவன் கெம்புராயனின் திருக்குமரி— கமலம்ம!... கனிந்த கன்னி. அழகுடன் அறிவும் பின்னிப் பிணைந்த அரசினர். செல்வி வீரமடந்தை உள்ளத்திலும் உடலிலும் ஒரு தனிமலர்ச்சி கருவுயிர்த்து நின்ற காரிகை அவள்.

தமிழக வீரனுடைய வரலாறு அவளுடைய கன்னிமை யுள்ளத்தை ஆட்கொண்டது. "மணந்தால் மணப்பேன் இத் தமிழேந்தலை! அன்றேல், கன்னியாக உயிர்விடுவேன்" என்று சூளுரை கொண்டாள். வெளிப்படையாக, தன் தந்தையரான கெம்புராயனிடமும் தெரிவித்தாள் இதனை.

"இது எப்படி முடியும் மகளே! பாண்டியனே வேறினம். வேற்று மொழியான். எதிராளியும் கூட" என்று தடைவிளக்கம் செய்தான் தந்தை.

அவன்—குலசேகரன் வேறுஇனம்— தமிழன். வேறுமொழியான்; தமிழ் மொழி பேசுபவன். வேறுநாட்டான், தமிழகத்தான், வேறுபண்பினன்!

அவள்—கமலம்ம நாச்சியார் வடுக இனம். பேசும் தாய்மொழி கன்னடம். பழக்க வழக்கப் பண்பாடுகளும் வேறு இருந்தன!

காதல் காட்டாற்று வெள்ளமாயிற்றே! சாதி, இன, மொழி வேறுபாடுகள் இக் காதல் வெள்ளத்தின் முன் ஈடுகாட்டி, தடைகட்டி நிற்க வியலுமோ?

"உறுதி. உறுதி. மணப்பேன், மணப்பேன் அப்பாண்டியசிங்கத்தை.

இன்றேல் மாய்வேன்" என மடலேறு நீதமிசைத்தாள் மங்கை.

வேறு வகை இல்லையெனத் திட்டமாக உணர்ந்தான் தாதை. எனவே மணத்தூது போக்கினன் அக் குலசேகர பாண்டியனிடம்.

மணமகள் பெண் பேசுவது மன்னர் மரபாயிருக்க, இப்போது மணமகனே நாடுகின்றான். கன்னடிய மன்னன் வலியவந்த இப்பேரம் கண்டு பாண்டியப் பார்வேந்தனின் தனித் தமிழ் இரத்தம் கொதித்தது. அன்னிய இனக் கமலம்மாவின் இரத்தத்துடன் தனித் தமிழ் (குலசேகரன்) இரத்தம் கலப்பதை அவன் விரும்பவில்லை. எனவே கன்னடிய மணத் தூதருக்குக் கிடைத்தது பாண்டியனின் மறுப்பு.

கன்னடியக் காரிகைக்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டது. தளர்ந்ததா அவளுடைய மனம். இல்லை

"சென்றரெனக்கை விடுதலுண்டோ,
நெஞ்சேயாம்—
உற்றல் உறுஅ தவர்"

எனத் திருவள்ளுவனார் செப்பிய பொய்யாமொழியைப் பொய்யா மொழியாக்கினாள் அவள்.

"இன்னாது இனநெண்ணி வாழ்தல்
அதனினும்
இன்னாது இனியார் பிரிவு"

என்று நெஞ்சுரத்தையும் வலியுறுத்தினாள்.

"மணவேன், மணவேன். அப்பாண்டிய பார்த்திபனை விடுத்துப் பிறிதொருவரை" என மீட்டும் உறுதிச் சபதம் கூறிக்கொண்டனள்.

இது கண்டு, செய்வகை வேறறியர். மைசூர் மன்னனும் இரண்டாம் முறையும் வலிய மறு தூது போக்கினன். மீண்டும் கிடைத்தது மறுப்பு! மறுப்பு!

நயவுரை நல்கா பலனை, வாள்முனை கொண்டு சாதித்துக்கொள்ளச் சீறினன் கெம்புராயன். போர் முரசு கொட்டப்பட்டது. கன்னடியம் படைவெள்ளம் பாய்ந்தது பாண்டியநாடு நோக்கி.

இப் படையெடுப்புச் செய்தி கேட்ட குலசேகர பாண்டியனின் வீரத் தோள்கள் தினவுகொண்டன—பூரித்தன.

"வினைவலியுந் தன்வலியும் மாற்றான்
வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்"

என்ற அறிவுரையை நினைவுகூர்ந்தனள். ஆராய்ந்து பார்த்தான் தன் படை வலிமையையும், படையெடுத்து வந்துள்ள கன்னடியப் படை வலிமையையும் போர்த் துறையின்படி ஒப்பிட்டுப்பார்த்தான்.

ஐம்பெரும் சிங்கங்களான பஞ்ச பாண்டியர்கள் தலைமைத் தளபதிகள் இருந்தும் என்னசெய்ய?

பாண்டிப் படை, உட்குழப்பங்களால் சிதைவுற்று நலிவுற்றுளதே. எண்ணிக்கையிலும் உள்ள வலிவிலும் எதிரிப் படையைவிடச் சிறத்துளதே. மாபெருங் காட்டு யானைத் திரள்போல் பல்லாயிரவரிருந்தனர் மைசூர் படையில்.

மந்திரிகளின் யோசனைப்படி குலசேகரனும் தன் தலைநகரை வள்ளியூருக்கு மாற்றிக்கொண்டிருந்தான்.

வீரமங்கை கமலம்மாவும், தன் மனமுண்ட மனோகரனுக்குப் போர்க்களத்திலே மணமாலை சூட்ட எண்ணமிட்டு, தன் தந்தையுடன் போர்க்களம் வந்திருந்தாள். வள்ளியூர் கோட்டை முற்றுகையிடப்பட்டது.

ஆனால், கன்னடியர் கைச்சமர்த்து எளிதில் விலையாகவில்லை. ஓராண்டுக்கு மேல் இந்த முற்றுகைப் போராட்டம் நீடித்தது. வட்டப்புதூரில் நடந்த போரில் மைசூர்ப் படை படுதோல்வி கண்டு வடுகச்சி மலையிலே பதுங்கவேண்டியதாயிற்று. பாண்டியப் படை தொடர்ந்தது. இதிலும் கன்னடியருக்குக் கிடைத்தது தோல்வி. அத்துடன் ஏராளமானவர் நந்தமிழரின் வீரவாட்களுக்குப் பலியாயினர்.

வீரபாண்டியனை எப்படியும் வசமாக்கிக் கொண்டுவந்துவிடுவோர் என மனப்பால் குடித்தபடி மங்கை நல்லாளும் படைவீட்டிலே தவம் கிடந்தனள். அவளுடைய தவமோ—ஆசையோ மும்முறையும் அவமாயிற்று. எனவே பதறினாள். கதறினாள். கண்ணீர் பெருக்கினாள். 'உயிர்விடுவேன்—உயிருடன் தீப்பாய்வேன்' என அரற்றினாள்.

கெம்புராயனுடைய மனம் தவித்தது, செய்வகையறியாது. பெற்ற மனம்—உயிருடன் தன்மகளை தீயில் பொரிந்து கைவிடத் துணியுமா? எனவே, சொல்லும் வழக்கத்திலே சொல்லிவைத்தான் தன் குழந்தைக்கு வழக்கமான ஆறுதல் மொழிகள்பல:

"மகளே, கவலை விடு. எப்படியும் அந்த வீரபாண்டியனைக் கொண்டு வந்து உனக்கு மணவாளனாக்குகிறேன்" என வாய்வழி ஆறுதல் கூறியபடி இருந்தான். ஆனால்...இயலுமா? அந்த வீரத் தமிழனுடைய வாள் வீச்சினால் வாழைக் கன்றுகள் போல் சாய்கின்றனரே கன்னடிய வீரர்கள்!

"மகளுடைய உயிர்?...உயிருடன் தீயில்விழுந்து துடிதுடித்துப்பொடிச் சாம்பலாவதா அந்த எழிலார் ஆகம் தான் பெற்று வளர்ந்தது ஆளாக்கிக் கண்டு மகிழும் அப்பூங்கொடி? அய்யோ! சோரக்கூடாது. இதற்கு வழி?...எனினும், அந்தத் தமிழக மாவீரனின் கூர்வாள்... பயங்கரம் பயங்கரம்! நடுங்கும் உடலும் உள்ளமும் அதனை எண்ண எண்ண! நேர்முகம் போராட்டமா? சாத்தியமில்லையே...! பனங்காய்களைச் சீவுவது போல் சீவி எறியப்பட்டுவிடுமே மாபெரும் மைசூர்படை"

திகைத்தனன், தடுமாறினன், துவார சமுத்திரமன்னன் இவ்வாறாகப் பலப்பல எண்ணியெண்ணி.

அப்படியாயின் வழி...? வழி...? விழிக்கத்தான் வேண்டியதாயிற்று, நல்வழி யறியாது!

பஞ்சபாண்டியர்கள்...? ஐம்புவனங்களும் திணறுகின்றன. அவர்களுடைய வீரத்தைக் கண்டு, பஞ்சதந்திர முறைகளோ பஞ்சாகப் பறந்துவிடுமே. தாய்நாட்டுப் பற்றிலே மிக்க தமிழரிடத்தில், அடுத்துக் கெடுத்துச் சிரித்துச் சிதைத்தல் சதிகள் விலை போகாவே...!

பிறிது...? பிறிது...? இத்தடுமாற்றத்தால் கெம்புராயனின் மெய்யறிவொளி குருடாயிற்று. அறியாமை அறியாமையிருட்டிலே தடுமாறிற்று. இருட்டிலே தடுமாறும் புத்திக்குப் புலப்பட்டது ஓர் இருட்டு முறை—குருட்டு நம்பிக்கைத் துறை—மந்திர சூன்ய வசியமுறை.




மைசூரியர் படைவீட்டிலே பூசைகள், ஆடு கோழி இரத்தபலிநடந்தன. "சூமந்திரக் காளி-ஜக்கம்ம. வசி

யம் வசியம்''—மந்திரங்கள் ஒலித்தன. பாண்டியனை வசியம் செய்தனவா, இந்த இந்தப் பூசைகளும்,மந்திர ஒலி களும்?

ஒற்றர்கள் மூலம் அறிந்தனன் வீர பாண்டியன். இந்த வசிய மந்திர ஜபங் கள் பற்றி அஞ்சினனு? குருட்டு நம்பிக்கையிலே நம்பிக்கையும் திகி லும் கொண்டு வாளில் நம்பிக்கைக் கொண்ட மெய்வீரனவன்! மாய மந் திரங்களின் விளைவுகளிலே நம்பிக்கை கொள்ளவில்லை அவன் மனம்.

மனம் விட்டு வீரச் சிரிப்புச் சிரித் தான்; கைகொட்டி நகைத்தான்; கன்னடிய மன்னனின் மூட நம்பிக் கையைக் கண்டு தன் படைகளுக்குப் பணித்திட்டான், "பாயுங்கள் அந்த மந்திரவீரர்கள் மீது" என்று.

மந்திரங்கள் காக்கவில்லை கன் னடிய வீரர்களை. மந்திரகாளிக்குக் கன்னடிய மன்னன் பலியிட்டது ஆடு கோழி. இப்போது பாண்டிய வாள் களால், இக் கன்னடிய வீரர்கள் பலிக்கடாக்களாயினர். எஞ்சியோர் சிதைந்துச் சின்னபின்னப்பட்டு மருண்டோடினர், திக்கெங்கும் புக விடம் தேடி! தன் படைகளடைந்த இந்த அலங்கோலம் துவார சமுத்திர மன்னனுக்கு அறிவு கொளுத்தவில்லை. வசிய மந்திர நம்பிக்கையிலே வசிய மாகி மனம் மயங்கி அமர்ந்திருந்தான். தன் படைவீட்டுப் பூசைக்களத்தில் அந்தப் பூசையிலும் பாண்டிய வீரக் கரடிகள்—போர்வீரர்கள் புகுதல் கடினமல்லவே.

ஆனல், வள்ளியூர்க் கோட்டை, நெடுநாள் தாக்குதலால் பழுதுற் றிருந்தது. சோரிமுத்தன் பாறைக் கோட்டைக்கு மாறும்படி மந்திரிகள் யோசனை கூறினர். ஆயினும் குலசே கரனின் மெய் வீரமனம் இதற்கு ஒருப்படவில்லை. தன் குடும்பத்தாரை யும், பொக்கிஷத்தையும் மாத்திரம் சோரிமுத்தன் பாறைக் கோட் டைக்கு அனுப்பிவைத்தான். குடும் பம்—பொருள்பற்றி கவலை இவ்வா ருக நீங்கியதும் குலசேகரன் நேர் முகமாகப் போரில் ஈடுபட வசதிப் பட்டது.

ஆறுமாதங்கள் அமைதியில் படை களைப் புதுப்பிப்பதில் இருசாரின ரும் கழித்தனர். பின் முற்றுகைப் போர் துவக்கமாயிற்று. இருகட்சிப் படைகளும் முதலைப்பிடியிலே கடும் போர் நடத்தின.

மெய்வீரன் குலசேகரன்—கோட் டைக் கதவுகளை இறுக மூடிக்கொ ண்டு கரடிப்போர் நடத்த விரும்ப வில்லை. கோட்டைக்கதவுகள் திறந்து விடப்பட்டன. கைகலந்த கோரச் சண்டை; கன்னடிய மன்னன் மக னும் இதில் பலியாயினன்.

தங்கள் இளவரசன் மாய்ந்தது கண்டு கன்னடியப் படைகள் மிரண் டோடின. பாண்டியனும் அவர்களை வீரவநல்லூர்வரைப் பின்தொடர்ந்து விரட்டியடித்தான்.

மந்திரிகள் பேச்சைக் கேட்டுக் குலசேகரன் சோரிமுத்தன் பாறைக் கோட்டைப் பகுதியில், முகாம் செய் தது தவருயிற்று. இங்கு நடந்த போரில் பாண்டியப் படைக்கு ஈடு கட்ட முடியாத ஓர் நஷ்டம் ஏற் பட்டது. பஞ்ச பாண்டியர்களில் ஒருவரான திக்கெல்லாம் புகழும் பெருமன், தன் தாயக மானம் காக் கும் இப்போரில் வீர மரணமடைந் தான். இதுகண்டு குலசேகரனின் மனம் ஓரளவுக்குச் சஞ்சலமடைந் தது.

இதேபோல் பெருஞ் சேதமுள்ள கன்னடியப் படைகளும் போரை நிறுத்தி மலையான்குள வட்டாரத் தில் தங்கி ஓய்வு கொண்டன.

சஞ்சலமுற்ற துவார மன்னன், பாண்டியன் கைவிட்டுப் போன பாழடைந்துகிடக்கும் வள்ளியூர்க் கோட்டையிலேதான் தம்பி உதச்சி ரானை, பொம்மைக் காவலனுக — அரசப் பிரதிநிதியாக இருக்கச் செய்துவிட்டுத் தன் நாடு திருப்பி னன்.

உதச்சி தன் தமையன் மகள் படும் காதல் அவதிகளை மறக்கவில்லை. அவளைப் பலன்படாக் கனியாக




வாடி வதங்கி மடியவிட அவனுடைய உறவுரத்தம் இடம் விடவில்லை. எனவே பாண்டியனின் புதிய தலைநகரான தொவ்வாலைக் கோட்டையை முற்றுகையிட்டான். முதலில் கிடைத்த வெற்றி அவலமாயிற்று. இறுதியில் படுதோல்வி கண்டு வன்னியூர் வட்டாரத்தை விட்டு ஓட நேரிட்டது. பாண்டின் மீண்டும் வன்னியூரை அடைந்தான்.

பிடித்த நாட்டை இழந்த செய்தி கேட்டு ஆவேசம்கொண்ட கெம்புராயன், பெரும் படையுடன் பாண்டி நாடு வந்தான்.

மாணுங்குளத்தில் இரு படைகளும் சந்தித்தன.

இது உயிர்ப் போராட்டமென்பதைக் குலசேகரனும் தம்பிகளும் உணர்ந்தனர். இப்போரில் பச்சைப் பெருமான், பெரிய உடையார் என்ற இரு தம்பிகளும் வீரமரணமுற்றனர். தொடர்ந்து நடந்தது. கோரப்போர்! ரத்த வெள்ளப் பெருக்கெடுத்தது. வீண் ரத்தப் பெருக்கை விரும்பாத குலசேகரப் பாண்டியன் படைகளைப் பின்வாங்கச் செய்து வள்ளியூர்க் கோட்டையை அடைந்தான்.

ஆயினும் குலசேகரன் மந்திரிகள் தூண்டுதலினால் வேற்றிடம் சென்றான். வள்ளியூரில் நடந்த மறு போரில் எஞ்சியிருந்த இரு பாண்டிய சோதரர்கள் மாண்டனர்.

இதுகண்டு குலசேகரனின் மனம் தளர்ந்தது. தன் ஏழு மனைவிகளையும் நீராடு வாவிக் கரைக்கு அழைத்தான். போரின் நிலவரத்தையும் தான் இறுதிப் போருக்குச் செல்வதையும் விளக்கி, தான் வரும் வரை மனத்திடத்துடன் இருக்கும்படி தெரிவித்தான்.

ஆயினும் அவ்வறிவுச் செல்வியர் யூகித்துக் கொண்டனர், நிகழப் போகும் நிகழ்ச்சியை — தங்கள் தலைவனுக்குப் போர்க்களத்திலே ஆபத்து நேரிடலாமென்பதை.

தங்களுடைய அடுத்த கடமையென்னவென்பதை அந்தக் கற்பணி மாதருக்குச் சொல்லித் தரவா வேண்டும்! தலைவனிடம் அனுமதி பெற்றனர். அந்த நீராடு வாவியிலே குதித்து மூழ்கி, நீர்ச்சமாதியடைந்தனர்.

அதன்பின் குலசேகரன் அவர்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்துவிட்டு, வீரவாளேந்திப் பாய்ந்தனன் சமர்க்களத்தில்.

தமிழ் வீரசிங்கம் ரணகளமுற்ற செய்தியை கன்னடிய மன்னன் அறிந்தான். அவ்வீரனுடைய உயிருக்கும், உடலுக்கும் பழுது நேராதபடி தந்திர முறையில் அவனைக் கொண்டுவரும்படித் தன் படைகளுக்குக் கட்டளையிட்டனன்.

மானமிழந்து வாழாக் கவரிமான் பண்பினனாயிற்றே இத் தமிழக மன்னன். சிறைப்பட ஒருப்படுமா

[illegible]வன் மனம். ஆயினும் தம்பிகளையும் தளபதிகளையும் இழந்து தனி மரமாக நிற்கிறானே...? கொந்தளிக்கும் பெருங்கடல் போன்ற பகைப் படையுடன் தனித்துப் போராடி எத்தனை காலம் சமாளிக்கமுடியும்! தந்திரப்போரிலே மிக்க மலைக் கரடிகளாயிற்றே கன்னடியர்...?எவ்வித உபாயத்தாலோ பாண்டிய மாவீரனை உயிருடன் கைப்பற்றி விட்டனர்.

தங்கள் மன்னனுடைய மாப்பிள்ளையாகப் போகிறவனை மரியாதையுடன் பல்லக்கில் அமர்த்தி மன்னனும் அவனுடைய 'காதல்' மகளும் தங்கியுள்ள கூடாரத்திற்கு வெற்றி முழக்கங்களுடன் சுமந்து சென்றனர்.

காதல் மங்கையும் அறிந்தாள் தன் காதலன் பல்லக்கு ஊர்ந்து வரும் செய்தியை. மகிழ்ச்சி பொங்கிற்று. விரைந்து மணக்கோலம் பூண்டுகொண்டாள் — ஆசைக்காதல் மணாளனைத் தழுவ.

மணமகள் கோலத்தில் கமலம்ம, வீரபாண்டியன் இருந்த சிவிகையை அடைந்தாள். தட்டித் தயங்கித் திரையை விலக்கிப் பார்த்தாள்— வீரமணாளனைத் தன்னிரு ஆர்வக் கண்களைக் கொண்டு.

கண்பாய்ந்த நொடியில், அவளுடைய வாயிலிருந்து ஒலித்தது — மகிழ்ச்சிக் குரலன்று — ஆனால் அலறல்...என்...? வாள் பாய்ந்தது போலிருந்தது அவளுடைய காதல் நெஞ்சில்?

அந்தக் காதல் கன்னிகை ஆர்வம் பொங்கத் தழுவ வந்தாளே அந்த வீரனுடைய மார்பகத்தை — மணக் கூட்டு சந்தனக் குழம்பு பூசி மகிழ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாளே அந்த மலைய மார்பகம் — அதிலே பரந்திருந்தது, செஞ்சந்தனக் குழம்புபோல, வீரத் தமிழ்க் குருதி! ஆம்! அந்தத் தன்மானப் பாண்டிய மன்னனுடைய சொந்தத் தனித் தமிழ் உதிரம்தான் குபுகுபுவெனப் பொங்கி வடிந்துகொண்டிருந்தது — அவனுடைய சொந்த உடைவாள் பாய்ந்த புழையிலிருந்து. அந்த வீரமுகத்திலே சோகக் களையில்லை. வீரச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்தது — உடலை விட்டு உயிர் பிரிந்திருந்தும் கூட மணமகன் பிணமகனாகத் தோற்றமளித்தான். அறிந்தாள் அக் காதல் காரிகையும்.

ஏமாற்றம் — துக்கம் — அலறல்— கண்ணீர் சில நொடிகளே நீடித்தன. பெண்மையுள்ளத்தைப் உறுதிப்படுத்திக்கொண்டாள். மணவாளன் உயிருடன் மணவரையிலமர்ந்திருந்தால் எத்தகைய மனநிலைமையும் முகத்தோற்றமும் கொள்வாளோ அதனை வருவித்துக்கொண்டாள்.

கண்ணீர் வடித்து நிற்கும் தன் தந்தையை வீரவிழி பாய்ச்சி நோக்கினாள்.

"அப்பா! சந்தனக் கட்டைகளை அடுக்கச் செய்யுங்கள். என் மணவாளனுக்கு மங்கல நீராட்டி மணமகன் கோலமணிவித்து அமர்த்துங்கள். அதில் அந்தப் புனிதத் தீயில் அமர்ந்து நான் அவரை மணக்கப் போகிறேன். நடக்கட்டும் ஏற்பாடுகள் விரைவில்" என உறுதி தொனிக்கப் பணித்தாள்.

மகளுடைய மனவுறுதியை உணர்ந்தான் கன்னடியக் காவலன். வேறு வகையில்லை என்பதையும் கண்டான். சிதையடுக்கப் பட்டது. வீரபாண்டியன் மணக்கோலத்தில் அமர்த்தப்பட்டான்.

புது மணவரையில் புகும் புது மணமகளைப்போல் அந் நங்கையும் சிதையில் ஏறியமர்ந்தாள். தன் காதல் கட்டழகனை — வீரச் சடலத்தைத் தன் மார்போடு சாய்த்து அணைத்துக்கொண்டாள்.

சிதைக்குச் சூழத் தீ மூட்டப்பட்டது. மூண்டன, மூண்டன — சுடர் விட்டன சந்தனக் கட்டைகள்...!

* * *

மாலைக் கதிரவனின் பொன்னிறக் கதிர்களும் ஒடுங்கலாயின. ★




## 3. தேடிவந்த பாக்கியம்

நடு நிசி. காலையிலிருந்து இடைவிடாது பெய்துகொண்டிருந்த மழை சற்று முன்புதான் சற்றே ஓய்ந்திருந்தது. உத்தமபுரம் ரஸ்தாவிலே மரங்கள் அடர்ந்த இடத்திலே பெரிய மரங்கள் இரண்டின் நடுவே இருந்த சிறு குடிசையின் முன்புறத் திண்ணையிலே சிறுவன் ஒருவன் சிறு மூட்டைபோலச் சுருட்டி முடக்கிக்கொண்டு படுத்துக்கிடந்தான். அவனுக்கு இந்த உலகத்துப் பிரக்ஞையே சிறிதுகூட இல்லை. முந்நாள் மாலையிலே அங்கே தள்ளாடி வந்து விழுந்த அவனைச் சிறிது நேரத்திலே கடுமையான ஜுரம் பற்றிக்கொண்டது. அதுமுதல் அவனுக்கு நினைவு தவறிவிட்டது. இன்னமும் ஜுரமும் விடவில்லை; நினைவும் தெளியவில்லை. மரக்கட்டைபோல ஏனென்று கேட்பாரற்றுக் கிடந்தான். அவன் வேறு யாரும் இல்லை. நம் கோபாலன்தான்.

பொழுது புலரும் நேரம். உயிர்ப் பிராணிகளின் நடமாட்டம் மெல்ல ஆரம்பமாயிற்று. அப்போது வடக்கேயிருந்து வெகு வேகமாகக் கார் ஒன்று வந்தது. அதனுள் மாதவபுரம் வியாபாரி மாணிக்க முதலியாரும் அவர் மனைவி கல்யாணியம்மாளும் அமர்ந்திருந்

தனர். வயதான அந்தத் தம்பதிகளுக்கு ஏராளமான செல்வம் இருந்தது; அதை ஆளப் பிறந்த மகன்தான் அவர்களைத் தவிக்கவிட்டுக் கண்மூடி விட்டான். அன்று முதல் விரக்தி மேற்பட்ட அவர்கள் வியாபாரம் முதலியவற்றை அறவே விட்டு இருக்கிற சொத்தைத் தான தருமம் முதலிய நல்ல வழிகளிலே செலவிடுவதும், புண்ணிய ஸ்தலங்களைச் சுற்றி வருவதுமாக ஒருவாறு காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தனர். இப்போதும் எங்கோ யாத்திரை போய்விட்டுத்தான் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

ரஸ்தாவிலே ஒரு எக்கச்சக்கமான திருப்பம். டிரைவர் காரின் வேகத்தை அடக்கி வெகு சாதுரியமாக அதைத் திருப்பிக்கொண்டிருந்தான். அப்போது மாணிக்க முதலியாரின் பார்வை தற்செயலாகச் சற்று தூரத்திலிருந்த பாழுங் குடிசை முன் கிடந்த சிறுவன் மீது விழுந்தது. "டிரைவர், காரை நிறுத்து" என்று கூவினார் முதலியார். வண்டி நின்றது. முதலியார் இறங்கி ஓடினார். சிறுவனைத் தூக்கிக்கொண்டு திரும்பி ஓடிவந்தார். சிறுவன் உடல் நெருப்பாய்ச் சுட்டது. அவனை வசதியாக வண்டிக்குள் படுக்க வைத்துவிட்டுக் காரை விடும்படி டிரைவருக்குக் கட்டளையிட்டார் முதலியார். கார் புறப்பட்டது.

"யாரோ என்னவோ, நீங்க பாட்டுக்குத் தூக்கிக் காரிலே போட்டுக்கிட்டு வந்துட்டீங்களே?" என்றாள் கல்யாணி. முதலியார் லேசாகச் சிரித்துவிட்டு, "அவ்வளவுதான் கல்யாணி உன் யோசனை. பதினறு வ்ருஷகாலமா நாம் படும் பாட்டைப் பாத்து மனசு இரங்கி ஆண்டவன நமக்குக் கொடுத்த பரிசு இது. யாராயிருந்தா என்ன? நடு ரோட்டிலே கிடந்து உசிரை விட இருந்த புள்ளெயெ எடுத்துக் காப்பாத்தின அதுலே தப்பு இல்லையே?" என்றார்.

"அது சரி, ஆபத்துக்கு உதவ வேண்டியதுதான் ... ... ஆன ...... ஒடமெக்காரங்க புள்ளெயெக் காணுமேன்னு தேடி அலெஞ்சா? அவங்க வேதனைப் படறது நமக்குப் பாவம் இல்லீங்களா?" என்றாள் கல்யாணியம்மாள்.

"பையன் கிடந்த நிலைமையைப் பார்த்தா அப்படியெல்லாம் அக்கறையோட தேடக்கூடிய ஒடமெக்காரங்க யாரும் இருப்பாங்கன்னு எனக்குத் தோணல்லே. பார்க்கலாம். எல்லாத்துக்கும் வீட்டுக்குப் போய் டாக்டரை அழைச்சுப் பையனைக் கவனிக்கலாம். அவன் நல்லபடியாக் கண் விழிச்சு எழுந்திரிக்கட்டும். அவனையே விசாரிப்போம். சரியான தகவல் கெடச்சா பையனெச் சேக்க வேண்டிய எடத்துலே சேத்துடுவோம்" என்றார் முதலியார்.

கல்யாணியம்மாளுக்கும் அது சரி என்று பட்டதால், அதற்கு மேல் அது சம்பந்தமாக எதுவும் பேசவில்லை. இருவரும் பையனின் தோற்றம், அவன் முகத்திலே தோன்றிய களை, அவன் அக்கதிக்கு உள்ளாக நேர்ந்ததற்குக் காரணம் என்ன



வாயிருக்கும் என்பனபோன்ற விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

கார் ஒன்பது மணிக்கு மாதவ புரத்தில் உள்ள மாணிக்க முதலியார் வீட்டின் முன் சென்று நின்றது. முதலியார் உடனே காரை அனுப்பி டாக்டரைத் தருவித்தார். அவர் பையனைப் பரிசிலனை செய்து தக்க மருந்துகளைக் கொடுத்து, "அநேகமாக மாலை நாலு மணிக்குமேல் ஜுரம் இறங்கிப் பையன் கண்விழிக்கக்கூடும். அப்படி அவன் பிரக்ஞை பெற்றால் அவனுடன் பேச்சுக் கொடுத்து யாரும் அலட்ட வேண்டாம்" என்று சொல்லிச் சென்றார். பையன் அவர் சொன்னது போலவே மாலை ஐந்து மணிக்குக் கண் விழித்து நாற்புறமும் நோக்கினான். அவன் உதடுகள் லேசாக, "...கா...கி... த...ப்...படகு......" என்று முணுமுணுத்தன. முதலியாருக்கு உடனேயே பையனிடம் பேசி அவன் விருத்தாந்தங்களைத் தெரிந்துகொண்டுவிட வேண்டும் என்ற ஆசை துடித்தது. 'பையன், தான் அநாதை என்று சொல்லமாட்டானா? நாம் வளர்ப்புப் பிள்ளையாக வைத்துக் கொள்ளலாமே' என்கிற ஆசையும் ஏக்கமும் மனசிலே நிறைந்தன. ஆயினும் டாக்டரின் உத்தரவை முன்னிட்டுத் தம் ஆவலை அடக்கிக்கொண்டார்.

பையன் சூழ்நிலையையும், புது மனிதர்களையும், தான் இருக்கும்

நிலையையும், தனக்கு நடக்கும் உபசாரங்களையும் கண்டு பிரமித்தான். தான் அங்கு எப்படி வர நேர்ந்ததென்று யோசித்தான். படிப்படியாக அவனுக்குப் பழைய நினைவுகள் மனத்தில் தோன்றின. குடிசைமுன் தடுமாறி விழுந்து கிடந்த தன்னை யாரோ எடுத்துவந்து காப்பாற்றுகிறார்கள் என்று உணர்ந்தான். '...உடம்பு குணமானதும் துரத்திவிடுவார்கள். அல்லது மீண்டும் மாமாவிடம் கொண்டுபோய் ஒப்படைத்துவிடுவார்கள். மறுபடியும் அநாதையாகத் தெருத் தெருவாய் அலையவேண்டும்; அல்லது மாமன் மனைவியின் கொடுமைக்கும் அச்சுதனின் தீவினைகளுக்கும் உள்ளாக வேண்டும். மாமாவுக்குக்கூட முன்புள்ள அத்தனை பிரியத்தைக் காணோம். இருந்தால் பேயறைவது போல அப்படி அடிப்பாரா? போயும் வந்தும் ராதை ஒருத்திதான் அங்கே அன்பு உடையவள். அவள் மனமும் என்று மாறிவிடுகிறதோ!......'

இப்படியெல்லாம் ஓடிற்று அவன் சிந்தனை. ஆகவே இனி பிச்சையெடுத்து வயிறு வளர்த்தாலும் வளர்ப்பது, இனிமேல் மாமா வீட்டுக்குச் செல்வதில்லை என்று மனசுக்குள் தீர்மானங் கொண்டான். அதனால் அவன் மறுநாள் மாணிக்க முதலியார் விசாரித்தபோது, தன் பெயர் பாலன் என்றும், தான் அநாதையென்றும், முதலியார் வகுப்பை சேர்ந்தவனென்றும் சுருக்கமாகப் பதில் கொடுத்தான். முதலியாருக்கும் கல்யாணிக்கும் பதினறு ஆண்டுகளுக்குமுன் இறந்துபோன தங்கள் குமரனே பிழைத்து வந்துவிட்டாற் போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. "உனக்கு இங்கேயே எங்களிடமே இருக்க விருப்பமா?" என்று முதலியார் கேட்டார். கோபு பலமாகத் தலையாட்டினன். அவன் முகத்திலே தோன்றிய மகிழ்ச்சி அவர்களைக் குளிர்வித்தது. அன்போடு அவனை அணைத்துக் கொண்டார்கள்.

அன்று முதல் அநாதைச் சிறுவன் கோபாலன் மாதவபுரம் மாணிக்க முதலியாரின் அபிமானப் புதல்வன் பாலனுக ஆனுன். வெகு செல்லமாக வளர்ந்தான். அவனுடைய புத்திசாலித்தனம், நற்குணங்கள், படிப்பிலே உள்ள அக்கறை, நேர்மையான போக்கு, மனிதர்களிடமும் ஒட்டிப் பழகும் தன்மை ஆகியவற்றைக் கண்ட முதலியார் வார்த்தையளவில் அவனை அபிமானப் புதல்வனுக ஏற்றுக்கொண்டிருந்ததோடு நில்லாமல் சடங்குகள் மூலமாகவும், சட்டபூர்வமாகவும் அவனைத் தம் புத்திரனுக்கிக் கொண்டார். கோபாலன் தன் பூர்வ நிலையை மறந்துவிடாமல் அடக்கமாக, எல்லோரும் மெச்சும்படி நடந்துகொண்டான். படிப்பிலே மளமளவென்று முன்னேறினன். மனம் மட்டும் அடிக்கடி பல மைல்களுக்கு அப்பால் எங்கோ இருக்கும் ஓர் அன்பின் உருவத்திடம் ஓடி ஓடி உறவாடிற்று. அது ராதை என்று சொல்லவும் வேண்டுமோ...?

(தொடரும்)

# குழந்தைகளுக்கு முக்கியமானது

## தாய்மார்களுக்கும் கூட



காரணமில்லாது குழந்தை அழுதால், அநேகமாக வயிற்று வலியால் தானிருக்கும். அஜீரணக் கோளாறுகளுக்கு பாரத் கிரைப்-டில்-வாடர் கொஞ்சம் கொடுத்தால் சீக்கிரத்தில் குணமுண்டாகும். பல் முளைக்கும்போது குழந்தைகளுக்கு உண்டாகும் பசியின்மை, வாந்தி, இருமல், இழுப்பு, வயிறு உப்புதல், வலி இவைகளுக்கு நல்ல ஔஷதம். தாய்மார்களே! கைவசம் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

# கிரைப்-டில்-வாடர்

குழந்தைகளின் ஆரோக்யத்தைப் பாதுகாப்பது.

தயாரிப்பவர்கள்:

**பாரத் ட்ரக் ஹவுஸ், மதுரை.**

ஹோல் டிஸ்டிரிப்யூடர்கள்:

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்.

கெமிஸ்ட்ஸ் மதுரை.

ஆம்; அந்தப் பொங்கல் பொங்காத பொங்கல்தான். அதற்குக் காரணம் உண்டு. அதுதான் கதை......!

# பொங்காத பொங்கல்!

வாசவன்

மூன்று கல் சேர்த்து, மண் நிறைத்துக் கூட்டிய அடுப்பிலே புதுப் பானை; அதைச் சுற்றி வளையமிட்டிருந்த மஞ்சள் கொத்து — அப்படி மூன்று புதுப்பானைகள். நடுவில் இருப்பது சர்க்கரைப் பொங்கலுக்கு. அப்புறமும் இப்புறம் இருப்பன வெண் பொங்கலுக்கு. அருகே அருகு முளைத்த பிள்ளையார் ஒன்று. அதன் நெற்றியென்ற நினைவில் எங்கோ வைத்த சந்தனப் பொட்டின் நடுவில் குங்குமக் கீறல். பக்கத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், உடைக்காத தேங்காய். தீபாராதனைக்கென்று புதுக்கோட்டை ‘அம்மஞ்சல்லி’ அளவில் கற்பூரம். அத்தனையும் காத்திருந்தன! சூடுற்ற பானை நீர் சூல்கொண்டு பொங்கி வழியவிருக்கும் சந்தர்ப்பத்தில் பக்திப்பொருள் தந்து அரிசியைப் பானையில் இடவழிக்காக ‘விழி’த்துக் கொண்டிருந்தன அத்தனையும்.

நீரைச் சூலாக்க, பொங்கிவந்த புகையைக் கண்ணீர்க் கருக்கலிட்டு, ஒதுங்கி விழுந்த நெருப்பை உள்ளே தள்ளி நீரைச் சூலாக்க முயன்று கொண்டிருந்தாள் தாயம்மா.

உள்ளத்தை மகிழ்ச்சியால் கோத்துக்கட்டி, புதுப்பானையிலே பொன்னையே பொங்கலாக வடிக்கப் படைக்கப்பட்டிருக்கும் அந்தப் பொங்கல் திருநாள், அவள் உள்ளத்தை என் சிலுப்பி விடவில்லை மகிழ்ச்சியால்?

பொட்டிருக்கும் இடத்திலே வெறும் வெள்ளைத் தழும்புமட்டும் விழுந்திருக்கிறதே அவள் நெற்றி, அது சொல்லுமே காரணம்?

எங்கோ பொங்கல் பொங்கியிருக்கவேண்டும். அடுத்தவீட்டிலோ, எதிர்த்த வீட்டிலோ தெரியவில்லை. “பொங்கலோ, பொங்கல்!” என்ற கூக்குரல்.

“பொங்கலோ, பொங்கல்!”— அந்த வார்த்தைகள் தாயம்மாவின் நெஞ்சிலே சம்மட்டியாய் அடித்தன. மூன்று ஆண்டுகளாகக் காதுகளை அடைத்துக்கொண்டு, புற உலகின் குரலையே கேட்காத செவிடாகி வாழ்ந்த அவள், மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் போனாள்.

“ஐயோ!”

அடிவயிற்றில் நெருப்புப் பிடித்து எரிந்தது. அந்த நெருப்பிலே



வாழ்க்கை சின்னப்பிள்ளைத் தனமாய் விளையாடி மருந்துக்கு அடங்காத காயங்களை எப்படியெல்லாம் கீறி விட்டு விட்டது?

அடுப்பிலே புதுப்பானை நீரைக் கனலாக்கிக்கொண்டிருந்தது.

அவள் உள்ளத்தைக் கனலாக்கி, செந்தாமரைக் கன்னத்தை உப்புக் கண்ணீரால் உலர வைத்துக்கொண்டிருந்தாள். நெஞ்சப் பாறையிலே எண்ண அலைகள் மோதி, மோதி மூளியாய் மூக்கறுபட்டு உருவமற்று அருவமாய் அழுது தீர்த்தன.

"அம்மா!......" பிஞ்சுக் குரலொன்று நைந்துபோய்க் கேட்டது உள்ளிருந்து.

உள்ளே ஓடினாள், "வந்துவிட்டேன் கண்ணு!" என்று கூறிக் கொண்டு.

உள்ளே :

பாயில் மெத்தென்றிருக்கக் கிழிசல் துணிகளைக் கீழே பரப்பி, அங்கொன்றும் இங்கொன்றுமாகயிருந்த இரண்டு மூன்று தலையணைகளுக்கு மத்தியில், 'வீடு கட்டுகிறோம்' என்ற நினைப்பில் நாலைந்து குச்சிகளை வரிசை புரண்டு கட்டி மகிழும் சின்னப் பிள்ளையைப்போல, 'மனித உற்பத்தி செய்து விட்டோம்' என்றபிரம்மனின் எண்ணப் பரப்பில் கிளர்ந்து எழுந்த ஏகமான தசையற்ற எலும்புகளின் சேர்க்கையல்லாத குவியலில் 'குழந்தை' யென்று மனிதர்கள் அதற்குப் பெயர் வைத்த விநோதத்தைக் கோரக் குரலெடுத்து அறுக்கும் தோரணையில் கிடந்தது 'அது'. காலக் கணக்கெடுக்கும் சோதிடனைப் போல, கணிதத்தில் பெரும் நேரம் தந்தால் அதற்கு வயது இரண்டு என்று குறிக்கலாம். 'யதாரித்த மரணம்' என்ற தோரணையில் அனுதைப் பிணத்திற்குப் பஞ்சாயத்தார் தீர்ப்பளிக்கும் தோரணையில் கூறுவதாகயிருந்தால் "வயது ஒன்றும் இருக்கலாம்; 'உத்தேசமாக' இரண்டும் இருக்கலாம்" என்று சொல்லவும் செய்யலாம்.

குழந்தைக்குப் பக்கத்தில் பாட்டி—தாயம்மாவின் அம்மா இருந்தாள். கூடிவராத எலும்புக் கூட்டில்—உடம்பு என்று பெயரா? அப்படியானல் அதில்—அழுத்தமாகத் தட்டினல் நொறுங்கிவிடுமோ என்ற பயத்தினல் மெல்லெனத் தட்டி, "ராஜா. அம்மா உனக்குத் தான் சர்க்கரைப் பொங்கலிடுகிறாள். சும்மா கூப்பிடாதே!" என்று கூறினாள்.

வேகமாக ஓடிவந்த தாயம்மா, படுக்கையில் ஒட்டிக்கொண்டு கிடந்த குழந்தையை அணைத்துக்கொண்டு கூறினாள்: "சர்க்கரைக் கட்டி, என் கூப்பிட்டாய்? அம்மா உன்னைவிட்டு எங்கே ஓடிவிடுவாள்? ஏதேடா போக்கிடம்?......"

"தாயி, குழந்தையிடம் என்னென்னவோ கூறுகிறாயே! நீ போ, நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றாள் தாயின் தாய்.

அதுவரை கண்களை மிரளமிரள உருட்டி விழித்துக்கொண்டிருந்த குழந்தை இரண்டு தடவைகள் வேகமாகக் கண்ணிமைகளை இழுத்து மூடிச் சிறிது நேரம் திறக்கவேயில்லை.

தாயம்மா பதறிப்போனாள்.

"ஐயோ, அம்மா! என் பிள்ளைக்கு ஒன்றும் வராதே. வருமா, அம்மா?"

"நாளும் கிழமையுமாய் கண்ணீர் வடிக்காதே"

"குழந்தை தீர்க்காயுசாய் இருப்பான். நாளும் கிழமையுமாய்க் கண்ணீர் வடிக்காதே!"

"நாளும் கிழமையும்! அது நாசமாய்ப்போக. என் வாழ்விலே எந்த நல்ல நாளும் கிழமையும் வந்திருக்கின்றன, ஒரு வாழ்த்துக் கூறியிருக்கின்றன? வராத ஒன்றுக்கு நான் வாழ்த்துக் கூற வேண்டுவா?"

"நடந்து போனது நாராயணன் செயல். இருப்பதை வைத்துக்கொண்டாவது 'ரணசிகிச்சை' செய்து கொள்ளவேண்டும். புதுப்பானை பொங்கி வந்துகொண்டிருக்கும். தீபாராதனை செய்யாமல் பால் பொங்கி

ஞல் குடும்பம் பொங்கிவராது. போ!" என்று கூறி மகளின் கண்ணீரை முன்றானையால் துடைத்தாள்.

"என் மகனைவிடப் பொங்கல் எனக்கு முக்கியமில்லை. பொங்கலுக்கு மதிப்புக் கொடுக்கத்தான் செய்தேன். பிரதியாக எனக்கு என்ன கிடைத்தது? உள்ளத்தைக் கொடுத்தேன்; என் கண்கள் தானே பிடுங்கப்பட்டன?..."

"நமக்காக வேண்டாம். உன் பிள்ளைக்காகச் செய். மூன்று வருஷங்களாக நம் வீட்டில் பொங்கவிடவில்லை. மங்களத் திருநாளைக் கொண்டாடாமல் விட்டால் தோஷம்!" என்று கூறி, தாயம்மாளைக் கரகரவென இழுத்துப் பொங்கல் பானைக்குப் பக்கத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்தாள் தாய்க்கிழவி.

நெருப்பு நீறுபூத்துக் கிடந்தது. பால் பொங்க இன்னும் நிறையச் சூடேற்றவேண்டும். சிறு சுள்ளிகளை எடுத்து ஒடித்துப் பக்குவமாக அடுப்பில் வைத்து, குனிந்து வாயால் ஊதினுள்.

நெருப்புப் பிடித்தது!




கண்ணன்! அவன் உடம்புக்கு இப்படி வருமென்று ஒரு மாதத்திற்கு முன்பு யாராவது நினைத்துப் பார்த்திருக்க முடியுமா'? 'ஆஸ்டர் மில்க்' விளம்பரத்தில் வரும் குழந்தையைப் போலக் குண்டாகயிருந்தான்; குதித்தான்; விளையாடினுன்; பாட்டியின் சம்புடத்தை எடுத்து அதில் இருக்கும் திருநீறையெல்லாம் கீழே கொட்டினுன்; வேப்பெண்ணெயையும், தண்ணீரையும் ஒன்ருகக் கலந்தான்; ஏதாவது சிறு துரும்பை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு "உப்பு, உப்பு" என்று வீடெங்கும் விற்றுத் திரிந்தான்.

அந்தச் சுட்டிக்கண்ணன் இப்பொழுது குதிக்க முடியவில்லை; விளையாட முடியவில்லை; பாட்டியின் சம்புடத்தை எடுக்க முடியவில்லை. அவன் ஆடாமல் வேப்பெண்ணெயும், தண்ணீரும் ஒன்ருகக் கலக்கவில்லை; உப்பு விற்கும் வியாபாரம் அந்த வீட்டில் நடக்கவில்லை.

அப்படித்தான் அவனுக்கென்ன தீராத வியாதியா வந்துவிட்டது? கார்த்திகை முழுதும் குன்றக்குடி முருகன் சந்நிதி விளக்குப்போலச் சுடராடித்தானே திரிந்தான்?

மார்கழி பிறந்தது. தாயம்மாவின் வயிற்றிலே துன்பமும் பிறந்தது. இந்த முப்பது நாளும் நல்லதாகக் கழிந்து பொங்கலும ஆனந்தமாகச் சென்றுவிட வேண்டுமேயென்று நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்தாள். 'தமிழ் வருஷத்தில் மார்கழி ஏன் வருகிறது?' என்று புரியாத கேள்வியைத் தெரியாத பதிலுக்கு ஒலிப்பதிவுசெய்து, செய்து பார்த்தாள்.

அவள் நினைத்தது வீண்போகவில்லை.

மார்கழி வந்து ஐம்பத்தாறு நாழிகை இருக்கும். தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த கண்ணன், அலறி விழித்தான். விசையோடு எழுந்தாள் தாயம்மா விளக்கைப் பெரிதாக்கினுள். அவள் அம்மா தொட்டிலிலிருந்த கண்ணனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டாள்.

அவன் அழுகையை நிறுத்திவிட்டான். ஆனல் அர்த்தமில்லாமல் அவன் பரக்கப்பரக்க விழித்தது பயங்கரமாகயிருந்தது. அவனது சிரித்த முகம் சோர்ந்து தொங்கியது. உடம்பிலே புல்லரித்திருந்தது.

"அப்பொழுதே சொன்னேன், கேட்டியா? பிறந்த முடியை நம் மொட்டைக் கோபுரத்தானுக்கும் கொடுத்துவிட வேண்டும் என்று தலையிலே அடித்துக்கொண்டேன். இரண்டு வருஷமா நீ காதுகொடுத்துக் கேட்கவில்லை. அவன் வேலை தான் இது!" என்று மகளைக் கடிந்துவிட்டு, "முனியையா, அறியாமல் செய்ததை மன்னித்துவிடு. பிள்ளைக்கு ஒன்றும் செய்யாதே. தை பிறந்ததும் முடியிறக்கி, உனக்கு நிலைமாலை சாற்றுகிறேம்" என்று கூறி, மஞ்சள் துணியொன்றில் ஒன்றேகால் பணத்தை முடிந்து வைத்தாள்.

'தீர்ந்துபோகும்' என்று நினைத்தாள் அமமா.

அந்த நினைப்பில் தாயம்மாவுக்கு நம்பிக்கையில்லை. அவள் வெந்த புண்ணுக்கு மருந்துபோட்டுக் குணமாக்கும் நிலையிலேயில்லை. வெந்த புண்ணிலே குச்சியை எடுத்துக் குத்தும் உணர்விலே கலந்துவிட்டாள்.

"தன் வாழ்க்கையிலே இரண்டாவது கரும்புள்ளி விழுந்துவிடுமா?"— குமுறினள்.

பறித்துப்போட்ட ரோஜாச்செடி வதங்குவதைப் போல கண்ணன் வாட்டம் கண்டுவிட்டான். இரண்டு மூன்றுமுறை அடுத்தடுத்துப் பேதியாகியது.

எழுந்தவன் படுத்தான். படுத்து முப்பதுநாட்களாகிவிட்டன. இன்னும் அவன் எழுந்து உப்பு வியாபாரம் செய்யவில்லையே! வீடே களையிழந்திருந்தது.

"வீட்டிலே இந்த வருஷம் பொங்கல் நடக்கும். 'பொங்கலோ பொங்கல்' என்று கண்ணன் கூறுவானு?"

போன ஆண்டு பால் பொங்கவில்லை.

அதற்கும் முதல் ஆண்டாவது பால் பொங்கியதுண்டா?

'என் இத்தனை பெரிய கேள்விக்குறி!'

தாயம்மாவுக்குக் கல்யாணமாகிப் பத்து மாதங்களாயின. பத்துமாதத்திற்கப்புறம் வரும் பொங்கலுக்காக எப்பொழுதிருந்தோ அவளும், துரையும் சண்டைபோட்டுக்கொண்டார்கள்.

"சர்க்கரைப் பொங்கல் பானைக்கு நான்தான் அடுப்பெரிப்பேன். முதலில் என் பானைதான் பால் பொங்கும்" என்பான் துரை.

"வெண்பொங்கற் பானைகள் இரண்டையும் நான் முதலில் பொங்க வைக்கிறேன், பாருங்கள்! எனக்குப் பரம்பரைப் பழக்கம்!" என்பாள் தாயம்மா.

"பரம்பரையைப் பரம்படிக்கிறேன், பார்!"

"வயிற்றுப் பிள்ளைக்காரி. அப்படியெல்லாம் செய்யாதீர்கள். பாபமில்லையா?"

"இப்பொழுதே 'பயல்' பேரைச் சொல்லிப் பிழைக்கப் பார்க்கிருய்!"

"என் 'சிறுக்கி'யாக இருக்கக்கூடாதோ?"

"ஐயர் சொன்னல் சொன்னது தான். பொறுத்துப்பார்த்தால் தெரிகிறது."

இப்படியெல்லாம் யார் பானை முதலில் பொங்கும் என்ற போட்டியுடன், புதிதாக வரவிருக்கும் 'சிறுக்கியோ, பயலோ' பேச்சுடன் நாளும் நகர்ந்தது, நல்ல திருநாளும் வந்தது.

தாயம்மாவின் பிறந்த வீட்டி விருந்துசீராக வந்த பொங்கல் திருநாள் பானைகள் பொங்கலுக்காக ஏற்றி வைக்கப்பட்டிருந்தன அடுப்புகளிலே. சரிகைப்புடவை, பிள்ளைத்தாச்சியின் பொலிவுற்ற உடம்பிலே மினுக்கிக்கொண்டு கிடந்தது.

துரை நடுவிலிருந்த சர்க்கரைப் பானைக்குப் பதறிப் பதறி அடுப்பெரித்துக்கொண்டிருந்தான் — முதலிலே தன் பானை பால் பொங்க வேண்டுமென்ற துடிப்புடன். புண்

னகையுடன் பதருமல் வெண்பொங் கற்பானைகளுக்கு நெருப்பெரித்துக் கொண்டிருந்தாள் தாயம்மா.

தாயம்மாவின் பானைதான் முன் ஞல் நுரை கட்டிக்கொண்டு வந்தது. பாலும் பொங்கவிருந்த சமயத்தில்,

"போங்கள் சீக்கிரம்! பால் பொங்குவதற்குள் தேங்காயை உடைத்து வாருங்கள்!" என்று மஞ் சள் பூசித் தேங்காயை அவன் கையில் கொடுத்தாள்.

தேங்காயை வாங்கிக்கொண்டு வா காய் உடைப்பதற்கு அரிவாளை எடுக் கக் குதிர்ச் சந்துக்குள் கையை விட் டான்.

"ஐயோ!" என்ற அலறல்.

தாயம்மா துடித்து ஓடி வந்தாள். துரை கீழே விழுந்து கிடந்தான். குதிர் ஓரமாய் நல்லபாம் பொன்று படமெடுத்துக்கொண்டிருந்தது.

கொளையடிப்பவன் வந்தான்; மந்திரக்காரன் வந்தான். பய னில்லை! துரை மீளாத உலகுக்குப் போய்விட்டான்! பரிட்சையிலே, போட்டியிலே வெல்லாத பள்ளிக் கூடத்துப் பிள்ளை தற்கொலையில் தன்னைப் பணித்துக்கொள்வதைப் போல, போட்டியிலே வெல்லாத அவன் பாம்புக்கென்றே தன்னைப் பணித்துக்கொண்டானு?

தாயம்மா அடித்துக்கொண்டாள். தலைமயிரைப் பிடித்துக்கொண்டாள். ஆவதென்ன?

பால் பொங்கவில்லை. தாயம்மாள் பொட்டிட்ட இடத்திலே நெருப்பை எற்றிக்கொண்டாள்.

பொங்கல்சீர் கொண்டுவந்த தாயம் மாவின் அப்பர், மாப்பிள்ளை ஏறிப் போன பாடைக்குக் கழுத்தைக் கொடுத்தார்.

இருபது வயதுக்குள்ளேயே உணர்ச்சிக்கு உறைபோட்டுக் கட்டி வைத்துவிட்டு, சோற்றுப் பிண்ட மாய், உறங்கும் ஆந்தையாய், அழுது அழுது சாகும் கூண்டுக்கிளியாய் திரிந்தாள்—மனிதர்கள் வாழ வேண்டுமென்பதற்காகவே படைத்த இந்த உலகத்திலே.

அப்பா சீராகக் கொடுத்த கட்டில் அக்கு அக்காகப் பிரிந்து மூலையிலே தூங்கியது. சுருட்டிய மெத்தை விரிக் கப்படவில்லை. மலர் சிந்திய அந்த மெத்தையிலே பூச்சியும், எறும்பும் இப்பொழுது.

இரண்டு மாதங்கள் மண்ணுளிப் பாம்பாய் நெளிந்து சென்றன.

இரண்டையும் கூட்டி, அந்தக் கூட்டலிலே பெருக்கல் வாய்ப்பாடு சேர்த்த குரல் ஒன்று சின்னஞ்சிறு அறையிலிருந்து கேட்டது. கண் ணன் பிறந்தான்.

தாயம்மாவின் தாய்மை மனைவிக் கோலத்திலிருந்து கிடைத்த மாற்றத் தைச் சிறிது மறக்கச் செய்தது.


## தமிழ் இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

**விலை ரூபாய் 5—0—0**

**தையல் கட்டிங் & மானுவல்!**

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

**விலை ரூபாய் 2—8—0**

**பீதாம்பர ஜாலத்திரட்டு**

*(MAGIC BOOK)*

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக் கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

**விலை ரூபாய் 2—4—0**

**VANI BOOK DEPOT (P)**

*No. 260 Esplanade, ஜி. T. Madras*

கண்ணன் வளர்ந்தான்.

அடுத்துவந்த பொங்கலைக் கொண்டாடவில்லை. மறுத்துவிட்டாள்.

கண்ணன் நடந்தான்.

மீண்டும் ஒரு பொங்கல். எதிர்கொண்டழைக்கவில்லை தாயம்மா. உள்ளத்திலே பயம். பொங்கலை நினைக்கவே பயந்தாள்.

மூன்றாவது ஆண்டுப் பொங்கல்!

தாயின் பிடிவாதம், தகப்பனாரின் கெஞ்சல். கார்த்திகை மாதத்திலேயே 'இருக்கும் ஒன்று'க்காவது பொங்கல் வைக்க உடன்பட்டுவிட்டாள்.

வாக்குறுதி தந்த பத்தாவது நாள் கண்ணன் படுக்கையில் படுத்துவிட்டானே!

"என் குல தெய்வமே, என் குலக்காயைக் காப்பாற்று. அவனைக் காப்பாற்றிவிட்டால் உன் ஞாபகார்த்தமாக முனீஸ்வரன் என்று..."— அந்த இடத்தில் நிறுத்திவிட்டு யோசித்தாள்.

"முனீஸ்வரன் என்று யாருக்குப் பெயர் சூட்டுவது? ஐயோ, என் ஆசைத் துரையே!..."—விக்கி விக்கி அழுதாள். மன நரம்பு முறுக்கிக் கொண்டு அறுந்துவிடுமோ? துக்கம் உயிரைப் பிடிக்கிறதே!

பால் பொங்கப்போகிறது. தேங்காயை உடை, தாயம்மா!" என்று உள்ளிருந்து தாய்க்கிழவி குரலிட்டாள்.

சிலும்பிக்கொண்டு எழுந்தாள். மஞ்சன் தேங்காயை உடைக்க இப்பொழுது அரிவாளை எடுக்கப்போகவில்லை. அம்மிக்கல்லை நோக்கிப் போய் தேங்காயை உடைக்க ஓங்கினாள்.

"முனியாண்டவா, விபரீதத்தை நீயே எடுத்துக்கொள். தாங்கச் சக்தியில்லை. எனக்குக் கண்ணனை எனக்குத் தா!" என்றாள்.

தேங்காய் கல்லை நோக்கிச் செல்ல முனைந்தது.

அந்தச் சமயத்தில்—

"மண்ணை வாரிக்கொட்டிப்போய் விட்டானே!" என்று அலறும் சத்தம் கேட்டு அறையினுள் ஓடினாள்.

அங்கே—

தாய்க்கிழவி கண்ணனின்மேல் விழுந்து ஓலமிட்டுக்கொண்டிருந்தாள்.

என்ன?

கண்ணன் கண்ணை மூடிவிட்டான்!

தாயம்மா கண்ணனை அப்பிக்கொண்டு குப்புற விழுந்தாள்! அவளின் அழுகைச்சத்தம் கேட்கவில்லை.


முதல் பொங்கல் மூளியாக்கியது.

இரண்டாவது பொங்கல் இருந்த ஒன்றையும் எடுத்துக்கொண்டு சென்றது.

வெளியிலே "பொங்கலோ,பொங்கல்!"

இங்கே—

பால் பொங்கிவரும்போது தேங்காய் கண்டு, தீபாராதனை ஏற்றுவரும் இந்தத் தமிழ்நாட்டுப் பொங்கற்பானை, தன்பாலைக் கவனிப்பாரற்றுக் கீழே வழியவிட்டுக்கொண்டிருந்தது. ★



இலக்கிய விமரிசனம்.

# எச். ஜி. வெல்ஸ்

கா. அப்பாத்துரை

6

### இயந்திர மனிதர்

செவ்வாய் உலக மக்களின் தலை பெரிது. கண் இன்னும் பெரிது. தலையை ஒட்டிக் கை கால்கள் பல இருக்கின்றன. வயிறு மிகக் குறைவு. நில உலக மக்கள் போன்ற ஒரு விலங்கு செவ்வாயில் மனித நாகரிகம் அடையாமல் குரங்குகள் போலிருக்கின்றன. இந்த 'மனிதர்'களின் குருதியே செவ்வாய் மக்களின் உணவு. அவர்கள் உண்ணல், வாழ்தல் எல்லாம் கருவியாலேயே. உடலுக்கும் நிலையான ஒரு கவசமாக இவ்விமானத்தை ஆக்குகின்றனர். அவர்கள் வாழ்வு ஒரே இயந்திர வாழ்வு; அதில் மனித உணர்ச்சியே கிடையாது.

இங்கிலாந்தில் இறங்கி செவ்வாய் உலக மக்கள் நில உலகத்தின் மீது தாக்குதல் போர் தொடங்குகின்றனர். உலகம் கண்டிராத அவர்கள் புது ஆயுதங்களின் முன் நம் பீரங்கிகள், குண்டுகள் பயனற்றவை ஆகிவிடுகின்றன. மேனாட்டு ஆயுதங்களின் முன் நிற்கமுடியாது. அழியும் பழங்கால உலகம்போல, நிலவுலகம் ஆகிவிடுகிறது. பிரிட்டனின் மிகப் பெரும் பகுதியும் செல்வாய் உலக மக்கள் வேட்டைக் காடாகிறது. லண்டன், ஆக்ஸ்போர்டு முதலிய நகரங்கள் கிட்டத்தட்ட இடுகாடாகின்றன. செவ்வாய் உலக மக்களின் பாரிய 'முக்காலி விமானங்களும்' அதன் நீண்ட அழிவு ஒளிக்கதிர்களுக்கும் அஞ்சி நில உலக மாந்தர் ஓடிப் புதர்களிலும் சதுப்பு நிலங்களிலும் பதுங்குகின்றனர், காட்டில் வேடன் துப்பாக்கிக்குப் பயந்தோடிப்பதுங்கும் முயல்கள் போலவும், நரிக்குப் பயந்து பதுங்கும் நண்டுகள் போலவும்!

### மனித நாகரிகம் பிழைத்தது?

அறிவுலகத்தின் அறிவு ஆற்றல் இயற்கையின் அழிவாற்றலால் தான் தடைப்பட்டு அழிவுறுகின்றது. வானைக் கடக்கும் அளவுக்கும் நிலத்தை கடக்கும் அளவுக்கும் அவர்கள் முக்காலி விமானம் கடலைக் கடக்க முடியவில்லை. அதன் பாரிய உருவமும் நீண்ட இயந்திரக் கைகளும் கடலில் ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் இறங்குகின்றன. ஒளிக் கதிர்கள் பின்னும் நெடுந்தொலை அழிவு செய்கின்றன. ஆனால் அவர்கள் பிரிட்டனில் இறங்கியதனால், அத்திசையைக் கடந்து செல்லவில்லை. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மட்டுமே மனித நாகரிகம் இருக்கிறது. ஆனால் தற்செயலாக ஒரு பீரங்கி ஒரு முக்காலி விமானத்தின் உச்சியினுள்ளே செவ்வாய் மனிதத் தலையை உடைக்கிறது. நில உலகிலுள்ள சில நோய்களை மற்றச் செவ்வாய் மனிதன் பற்றிக்கொண்டு ஒவ்வொருவராகத் தாமாகச் சாகின்றனர்.

மனித நாகரிகம் பிழைத்து மீண்டும் எழுகிறது.

வெல்ஸின் பயங்கரக் கற்பனைக் கனவு மறைகிறது.

இந்நூலில் கற்பனைக் கதை முற்றிலும் நம் செய்தித்தாள்களின் நடையில், செய்தித்தாள்களின் பாணியில், கிட்டதட்டச் செய்தித்தாள்களைப்போல நம்மை முற்றிலும் நம்ப வைக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது.

### அறிவியல் உலகுக்கோர் எச்சரிக்கை

'உலகங்களின் போர்' இக்கால அறிவியல் உலகத்துக்கு ஓர் எச்சரிக்கை. அழிவுக் கருவிகளின் பெருக்கமும், நாகரிகத்தையே

அழிக்கவல்ல போர்களும் நம்மை எந்த நிலைக்குக் கொண்டு செல்லக் கூடும் என்பதை அது காட்டுகிறது. அத்துடன் அழிவுப் போரில் மேம் பட்டவர்கள் நாகரிக் உணர்ச்சிகளில் எவ்வளவு கீழ்ப்பட்டவர்கள் என் பதைச் செவ்வாய் மக்கள் காட்டுகின் றனர். அவர்களுக்குச் சொல்லத் தெரியும்; வேறு எதவும் தெரியாது.

தவிர, போர்களில் வல்லரசுகள் படைகளைத்தான் காக்க ஏற்பாடு செய்ய முடியும். மக்களைக் காக்க முடியாது. அணுகுண்டால் முழு நாடுகளை அழிக்கமுடியும். ஒரு நாட் டைக்கூடக் காகக முடியாது என் பதை நாம் இப்போது அறிகிறோம். எதிர்பாராத செவ்வாய் உலக மக்கள் தாக்குதல் ஏற்பட்டபோது, உலக வல்லரசு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் பிரிட்டனின் மக்கள் எலிகள் பூனைகள் பட்டபாடு படுகின் றனர்! வாசிக்கிறவர் ஆங்கிலேயரல் லாதிருந்தால், நாகரிக உலக மனித ரல்லாமலிருந்தால், இது சிரிப்புக் கிடமானது. ஆனால் எலிகளின் அழிவு கண்டு பூனைகள் சிரிக்கலாம், எலிகள் சிரிக்குமா?

உலகங்களின் போர் நல்ல விரு விருப்பான கதை. நாடங்களின் வியப்பும் மலைப்பும் அதில் மிகுதி உண்டு. அதே சமயம் மனித வகுப் பையே சிந்திக்கவைக்கிறது.

'பயங்கரக் கனவு'

செவ்வாய் உலக மக்களின் போர் எதிர் காலம் பற்றி ஒரு கனவு. அது எதிர் காலத்தில் நிகழாது என்று நாம் தேறுதல் அடையலாம். ஆனல் அக்கனவின் ஒரு பகுதி உண்மையாகலாம், உண்மையாகியுள் ளுள்ளது. 1942ல் ஜெர்மானியர் வானில் பறந்து குண்டு வீசியபோது

"அலைகடல் ஆளுக பிரித்தானியா!
பிரித்தானியர் என்றும் அடிமை
களாகமாட்டார்!"

என்று இறுமாந்து பாடிய பிரிட் டன் மக்கள் கண்ட புது அனுப வத்தை வெல்ஸ் கதை நினைவூட்டு கிறது.

(மேலும் கட்டுரைகள் வரும்)


# பொன்னி

(மாதமிருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா — ரூ. 6-0-0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா — ரூ. 7-0-0

**ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0-4-9 தபால் தலை அனுப்பவேண்டும்.**

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது, உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

★

# மாட்டு வண்டியில்...

'லேனு'

"உணவை உண்டாக்கிய பஞ்சைகள் நாங்கள் பட்டினியால் இறக்க, நீங்கள் மட்டும் உண்டு உண்டு கொழுப்பது நியாயமா?"

"பார் முழுதும் ஏர் முனையிலே—உழவன்
பாட்டினில் கொண்டாட்டம் போடுது"

ஆழ்ந்த கருத்துள்ள இந்த இன்னிசை கேட்டு ஆதவனும் எழுந்தான். அது கண்டு அவனியும் எழுந்தது. பகலவன் ஏறஏற இருள் நீங்கி, பார் முழுதும் தன் பணியைத் துவக்கியது. இன்னிசை வந்த திசையை நோக்கிப் பறவைகள் பறந்து வந்தன மேயச் சென்ற பசுக்கூட்டம் இன்னிசையைக் கேட்டு அந்தந்த இடத்தில் அங்கேயே நின்றன.

இன்னிசையின் இனிமையில் மயங்கி, சிந்தனை இழந்து செயலற்று நின்றான் சண்முகம், வாயில் வைத்த பல் குச்சியுடன். இசை ஒலியை மேலும் மேலும் பெரிதாக்கித் தங்கள் வேலையை உற்சாகத்துடன் செய்தார்கள் உழவர்கள், இசையை ஆமோதிப்பது போல. 'எங்களால்தான் இந்த உலகம் வளமாகிறது' என்ற இறுமாப்புடன் தங்கள் தலைகளைத் தூக்கிக் கம்பீரமாகச் சென்றன, ஏர்களை இழுத்துச் சென்ற காளைகள்.

"மாப்பிள்ளை" என்ற குரல் கேட்டு சண்முகம் திரும்பினான். அவனுடை மாமனார் சட்டைநாத பிள்ளை வந்துகொண்டிருந்தார். "சரி, நீங்கள் வீட்டுக்குப் போங்கள். பன்னிரண்டு மணிக்கு வண்டியை அனுப்புங்கள்" என்றார் மிராசுதார் சட்டைநாத பிள்ளை. சண்முகம் பக்கத்தில் ஓடிய வாய்க்காலில் முகம் கழுவினான் சாலையிலே நின்ற வண்டியை நோக்கி வந்தான். சண்முகம் வண்டியில் ஏறிக்கொண்டதும், 'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலியுடன் வண்டி புறப்பட்டது. வண்டிச் சக்கரம் முன்னோக்கிச் சுழல்வது போல, சண்முகத்தின் சிந்தனைச் சக்கரம் பின்னோக்கிச் சுழன்றது.

## 2

அன்று சண்முகம் அனாதை. அவன் பிறந்ததுமே தந்தையை இழந்தான். தாய்தான் இரண்டு ஸ்தானத்திலும் இருந்து வளர்த்தாள். அவனுடைய பத்தாவது வயதில் தாயும் அவன் தந்தையைப் பின்பற்றிச் சென்றாள் அன்று முதல் சண்முகம் அநாதையானான். அவனுக்குள்ள படிப்பின் ஆர்வத்தைக் கண்ட தலைமை உபாத்தியாயர், மேலிடத்தில் சிபாரிசு செய்து, சம்பளமும், உணவும் இலவசமாகப் பெற்று அவனுடைய படிப்புக்கு ஏற்பாடு செய்தார். சண்முகத்தின் மாளிகை வீதியின் மேடைகளே. வீதியைப் பிரகாசிக்கச் செய்யும் விளக்கின் கம்பத்தடியே அவன் படிப்பறை. அவனுக்கு உணவளிக்காத வீடே இல்லை. மிக்க சிரமத்துடன் பத்தாவதுவரைப் படித்துத் தேர்வும் பெற்றான். அதற்குப் பின் படிக்க இயலவில்லை. ஏதாவது வேலை செய்யலாமென வேலை தேடி

ஞன். எங்கு சென்ருலும் ‘ இல்லே, இல்லே, இல்லே!.’ பெரிய சிபாரிசு இருந்தால்தான் வேலே கிடைக்கும் என்ற நிலேமையில் அனுதை சண் முகத்தை யார் கவனிப்பார்கள்?

சண்முகத்துக்கு நகர வாழ்வு கசந் தது. தன்னுடைய கிராமமான மணலூருக்குச் சென்ருன். மண லூருக்கு வந்தும் அவன் மன வேதனே தீரவில்லே. ஆனல் மண லூரின் இயற்கை அழகு மனத் திற்குச் சிறிது சாந்தி கொடுத்தது.

வழக்கம்போல் இயற்கைஅழகைப் பருகியபடியே தோப்பில் உட்கார்ந் திருந்தான் சண்முகம். “ ஆ, ஐயோ” என்ற குரல் கேட்டுத் திடுக்கிட் டான். அங்கே ஒரு எருது ஒரு பெண்ணேப் பாய வந்தது. பெண் வீறிட்டுக் கதறினள். ஒரு கணத்தில் சண்முகம் ஓடினன். எருதினிட மிருந்து பெண்ணேக் காப்பாற்றி ஞன். அந்தப் பெண் வாய் திறக்கா மல் கண்ணினலேயே நன்றி தெரி வித்தாள். அந்த நான்கு விழிகளும் ஒன்றையொன்று கலந்து உரை யாடின. சண்முகத்தின் கம்பீரப் பார்வையைக் காண நாணித் தலே குனிந்தாள் நங்கை.

“ தனியே இப்படி வரலாமா? நான் மட்டும் இல்லாதிருந்தால்...” என்று ஆரம்பித்த பேச்சு எங்கேயோ சென்று, கடைசியில் தன் நிலேமை யையும் சொன்னன் சண்முகம். அந்தப் பெண்ணின் பேச்சிலிருந்து, அவள் அந்த ஊர் மிராசுதார் சட்டைநாத பிள்ளேயின் ஒரே செல் வக் குமாரி சரஸா என்பதை அறிந்தான். மறுநாள் அவர்கள் வீட்டுக்கு வரும்படியும், தன் தந்தை யிடம் சொல்லி வேலேகொடுக்க ஏற்பாடு செய்வதாகவும் சொல் லிச் சென்ருள் சரஸா. கண்ணடிக் கன்னத்தைக் காட்டி அவள் உள் ளத்தைப் புண்ணக்கிப் போனள் அந்தப் பூங்கொடியாள். அவள் செல்லும் திசையையே பார்த்து மெய்மறந்து நின்ருன் சண்முகம்.

## 3

மிராசுதார் சட்டைநாதப் பிள்ளே யிடம் வேலேயில் அமர்ந்தான் சண் முகம். அவனுடைய வேலே வயலில் வேலேசெய்யும் பாட்டாளிகளே மேற்பார்வை பார்ப்பது. சில சமயம் அவனும் அவர்களுடன் வேலேயில் கலந்துகொள்வான். அவ னுக்கு மாதச் சம்பளம் பதினைந்து ரூபாய். “அதற்குமேல் தர முடி யாது; இஷ்டம் இல்லாவிட்டால் போகலாம்” என்ருர் சட்டநாதர். சரஸாவின் அழகில் உள்ளம் பறி கொடுத்த சண்முகம் பதினைந்து ரூபாய்க்காகப் பின் வாங்கவில்லே.

காலச் சக்கரம் சுழன்றது!

சண்முகம் தன் கடமையை ஓயாது உழைத்துச் செய்துவந்தான். நேரம், காலம் இன்றி உழைத்தான். அதற்குச் சட்டைநாதரிடமிருந்து கிடைத்த பரிசு சிடு சிடுப்பும், சீற்ற லும்தான். இதனல் நொந்துபோன அவன் உள்ளத்துக்குச் சரஸாவின் இன்மொழிகள் தேறுதல் சொல்லும். சரஸாவுக்காகவே, அவளின் அன்புக் காகவே, அவளுடைய நிலவை யொத்த முகத்தில் தோன்றும் புன் னகைக்காகவே சண்முகம் அந்த வெறுப்புள்ள வேலேயில் உழைத்து வந்தான்.

சரஸா — சண்முகத்தின் உள்ளங் கள் ஒன்ருகின. நாட்கள் வளர் வது போல, அவர்கள் அன்பும் வளர்ந்துவந்தது. “உன் பகைவர், என் பகைவர்” என்று இருவரும் எண்ணினர். சண்முகத்தின் தேவைக்கான பொருள் வசதிக்கு மறைமுகமாக உதவி செய்தாள் சரஸா. அவர்களுடைய காதல் திரைமறைவில் இருந்தாலும், சட்டைநாதருக்குச் சிறிது சந்தேகத் தைக் கொடுத்தது. இருவரிடையே யும் அவருடைய கண் காணிப்பு பலத்தது. அதனல் காதலர் இரு வரும் சந்தித்துப் பேசுவதற்கு இயலவில்லே.

றான் சண்முகம். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த சரஸா பஞ்சணையில் படுத்து விசித்து விசித்து அழுதாள்.

## 4

**வீ**தியில் அலைந்துகொண்டிருந்த சண்முகத்துக்கு இரவாகி வெகு நேரமானதும் தெரியவில்லை. மனம போனபடி சென்றுகொண்டிருந்தான். இரவு பதினொரு மணி ரயிலும் ஊதிவிட்டுச் சென்றது. அப்பொழுதுதான் மறுநாள் தன் வாழ்வுக்கு என்ன செய்வது என்று எண்ணலானான். 'அந்தக் கல் நெஞ்சன் புறக்கணித்தாலும், தன் கண்மணி புறக்கணிக்க மாட்டாள்' என்று அவன் உள்ளம் சொல்லிற்று. ஆனால் எப்படி அவளைப் பார்ப்பது? அங்கு ஏதாகிலும் நேர்ந்தால்......? எது வந்தாலும் சரி. சரஸாவைப் பார்ப்பது என்று உறுதிகொண்டான். மிராசுதாரின் வீட்டை நோக்கி நடந்தான். சுற்றுச்சுவர் வாசல் திறந்திருந்தது. சண்முகம் உள்ளே சென்றான்.

முன் பக்கத்திலிருந்த அறைதான் சரஸாவினுடையது. அறையில் வெளிச்சம் இருந்தது. கனகமணிக் கட்டிலிலே கண்கவரும் மெத்தையிலே அவன் கண்மணி சாய்ந்து கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தாள்.

"சரஸா" என்றான்.

"நீங்களா" என்று சுற்றுப்பக்கம் பார்த்தபடியே வெளிவந்தாள் சரஸா. இருவரும் இருளில் மறைந்தனர். சண்முகத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் சரஸா. சண்முகம் அவளைத் தேற்றினான். "கொஞ்சம் இருங்கள் சாப்பாடு கொண்டு வருகிறேன்" என்று நகர்ந்தாள்.

"அட, அயோக்கிய நாயே" என்ற வார்த்தை அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அவர்கள் எதிரே சட்டைநாதர் கோபாவேசத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

"ஆ" என்று இருவரும் ஒரே குரலில் கத்தினார்கள். "அற்பப் பதரே, உனக்கு இவ்வளவு துணிச்சலா" என்று உறுமினார் மிராசுதார். அதைத் தொடர்ந்து 'டண்' என்று ஓர் அடி சண்முகத்தின் மண்டையில் விழுந்தது. சண்முகம் கீழே விழுந்தான்.

"அப்பா" என்று கதறிய சரஸா மூர்ச்சையானாள்.

சண்முகத்துக்கு மூர்ச்சை தெளிந்தபொழுது, தான் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதை உணர்ந்தான். மிராசுதார் தன்மீது திருட்டுக் குற்றம் சாட்டியிருக்கிறார் என்பதை அறிந்ததும் அவமானத்தால் குன்றிப் போனான். இன்ஸ்பெக்டரிடம் நடந்ததைச் சொன்னான். பணத்தின் முன்பு பாரியின் பேச்சு எடுக்குமா? அடியும் உதையும்தான் அவனுக்குக் கிடைத்தன.



சண்முகத்துக்குப் பணம் தேவைப் பட்டது. சரஸாவிடமிருந்து உதவி வராததால், சாப்பாட்டுக்குச் சரி யானபடி பணம் கொடுக்க முடிய வில்லை. அதனல் அவனுக்குச் சாப் பாடு போட மறுத்துவிட்டார்கள். சட்டைநாதரிடம் விவரத்தை விளக்கி உதவி கேட்டான். அவ் வளவுதான்! சட்டைநாதர் ருத்திர மூர்த்தியானர்.

"தரமுடியாது; சம்பளம் தவிர வேறெதுவும் கிடையாது" என்று கர்ஜித்தார்.

"எனக்கு இனும் வேண்டாம். இப்பொழுது பணம் கொடுத்தால் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளலாம்" என்ருன் சண்முகம் உருக்கமாக.

"ஒன்றும் கிடையாது. போ வெளியே" என்று உறுமினர் மிராசுதார். சண்முகம் மேலும் கெஞ்சினன். கேவலமாகப் பேசினர் சட்டைநாதர். கதறினன் பாட் டாளி. கடுகடுத்துப் பேசினர் அந் தக் கல் நெஞ்சு படைத்த முதலாளி.

"ஐயா, கோபம் வேண்டாம். உண்ண உணவில்லை. நான் உங்க ளால் மடிகிறேன். சிறிது கருணை காட்டுங்கள்."

"கருணை வேண்டுமா? அது இங்கு கிடையாது."

"நீங்கள் உண்ணும் உணவை உண்டாக்கிய வர்கள் என்னைப் போன்ற பாட்டாளிகள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உணவை உண்டாக்கிய நாங்கள்— பஞ்சைகள் பட்டினியால் இறக்க நீங்கள் உண்டு உண்டு கொழுப்பது நியாயமா?"

சட்டைநாதர் வெகுண்டெழுந் தார்.

"உதைத்துத் தள்ளுங்கள் இந்தக் கழுதையை" என்று சீறினர்.

ஆட்கள் ஓடிவந்தனர்.

"கொஞ்சம் நில்லுங்கள்" என் ருன் சண்முகம். அவன் வார்த் தைக்கு அடிமைப்பட்டது போல ஓடிவந்தவர்கள் நின்ருர்கள்.

"ஐயா, மிராசுதாரரே, பார்த் தீரா அன்பின் மகிமையை. 'சிற் ரூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப் படுத்தி நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத் தோள் களெல்லாம் இந்தப் பாட்டாளியின் தோள்கள்' என்பதை அறியாது என்னை உதைத்துத் தள்ளச் சொன் னீர். நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே வெளிச்சென்



## 5

வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. சண்முகம் திருடினன் என்பதற்குச் சாட்சிகள் பல காட்டி நிரூபித்தார் மிராசுதார். சண்முகம் நீதிபதியினிடம் நடந்தவற்றைச் சொல்லி நீதி வேண்டுமெனக் கெஞ்சினன். தனக்குச் சாட்சி சரஸா ஒருத்தி தான் என்றும் உரைத்தான். சண்முகத்தின் வார்த்தையில் உண்மையுள்ளதென்று நீதிபதி உணர்ந்தார். சரஸா வரவழைக்கப்பட்டாள். சண்முகத்தைக் கூண்டில் பார்த்ததுமே கதறினள். ஆரம்பம் முதல் அன்று வரை நடந்தவைகளைக் கூறினள் சரஸா. "சண்முகம் நிரபராதி; அவரை விடுவிக்க வேண்டும்" என்று வேண்டினள் நீதிபதியினிடம்.

நீதி மன்றத்தில் குழுமியிருந்தவர்கள் அனைவரும் மிராசுதாரை ஏளனமாகப் பார்த்தார்கள். அவர்களுடைய பார்வை மிராசுதாரின் மனத்தைக் கூசச் செய்தது. தன் தவறை உணர்ந்தார்; தலை குனிந்தபடியிருந்தார். நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

"சண்முகம் நிரபராதி. அவனை விடுதலை செய்கிறேன். சண்முகத்தின்மேல் பொய் வழக்குக் கொண்டு வந்து, அவன் வாழ்வைப் பாழ்படுத்த வேண்டுமென்று எண்ணிய சட்டைநாதருக்கு மானநஷ்ட தாவா விதிக்கிறேன். அவர் சண்முகத்தை வாழ்நாள் பூராவும் ஆதரிக்க வேண்டும்".

தீர்ப்பைக்கண்டு நீதிமன்றமே குதூகலத்தால் ஆரவாரம் செய்தது. நீதிமன்றம் கலைந்து எல்லோரும் வெளிச்சென்றனர்.

சட்டைநாதர் தலைகுனிந்தபடியே உட்கார்ந்திருந்தார். சண்முகம், சரஸா இருவரும் அவர் அருகே சென்றனர். "அப்பா" என்றழைத்தாள் மகள். இருவரையும் அணைத்துக்கொண்டார் மிராசுதார்.

ஒரு குறிப்பிட்ட நாளில் சண்முகம் சரஸாவின் வாழ்க்கைத் துணைவன் ஆனன். அத்துடன் மிராசுதாரரின் பணியிலும் துணைவன் ஆனன்.

## 6

"வீட்டுக்கு வண்டி வந்து வெகு நேரமாகியும் இறங்காமல் என்ன சிந்தனை செய்கிறீர்கள்" என்ற சரஸாவின் குரல் சண்முகத்தின் சிந்தனையைக் கலைத்தது.

"உம்...ம். ஒன்றுமில்லை" என்று சொல்லிக்கொண்டே வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்றான் சண்முகம்.

"என்ன விஷயம், என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று கெஞ்சினள் கோமளாங்கி.

"நடந்துபோன சம்பவத்தை நினைத்தேன். மெய்மறந்து விட்டேன்" என்று சொல்லி அவள் கண்ணாடிக் கன்னத்தைத் தட்டினன் சண்முகம். புன்னகையுடன் பின் தொடர்ந்தாள் சரஸா. ★

---

## நன்றி

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்கட்கு என் நன்றி.

'புரட்சியகம்'
சேலியமேடு,
கடலூர் என். டி.

வாணிதாசு

---

# தாய்மையும் குழந்தை நலப் பாதுகாப்பும்

டாக்டர் **ஆர். விசாலாட்சி** எம். பி. பி. எஸ்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்பது புறநானூற்றின் பொன் மொழி. சேயைப் பெற்றெடுக்கும் தாயின் கடமையுணர்ச்சி, இச் சொற்றொடரால் இனிது விளக்கப்படுகிறது. பிள்ளையைப் பெற்றெடுத்து, அதனைப் பாதுகாத்து, நோயற்ற முறையில் வளர்த்து உலகிலே வாழவிடுதல் தாயினுடைய தலையாய கடமையாகும் என்பது பழங்காலந்தொட்டே வலியுறுத்தப் பட்டு வந்திருக்கிறது.

குழந்தை ஒன்று பிறக்கும் போது அதனைப் பெருமகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் வரவேற்கும் பண்பு, பிற நாடுகளைப் போலவே இந்நாட்டிலும் காணப்படுகிறது. ஆனால், அந்தக் குழந்தை வருங்கால முக்கிய பிரஜைகளில் ஒன்று என்பதைப் பற்றியும், சமூகம் அப்படிப்பட்ட குழந்தைக்கு எந்த வகையில் கடமைப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் நாம் அவ்வளவாக உணருவதில்லை.

1951-ம் ஆண்டில், சென்னை மாகிலத்தில் மட்டும் மொத்தம் 15,70,800 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அவைகளில் 1,86,300 குழந்தைகள், ஓராண்டுக் காலம் முடிவதற்கு முன்பே இறந்திருக்கின்றன. இவை தவிர, 18,000 குழந்தைகள் இறந்தே பிறந்திருக்கின்றன. சுமார் பதினாறு லட்சம் குழந்தைகளில், சுமார் இரண்டு லட்சம் குழந்தைகள் ஓராண்டு முடிவிற்குள் இறந்து விடுகின்றன. நமது நாட்டின் புள்ளி விவரங்களை நோக்கும் போது, மொத்த இறப்புகளில் 100க்கு 50 இறப்புகள் பத்து வயதுக்கு உட்பட்டவர்களிடையே ஏற்படுகின்றன. அந்த இறப்புகளில் சரிபாதி ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாக இருக்கின்றன. அதாவது மொத்த இறப்புகளில் 25 சதவிகிதம் ஓராண்டுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புகளாகும். இந்த நிலை சமூகத்தின் சீரழிவையே காட்டுவதாகும். ஆரோக்கியமுள்ள சமூகம் ஒன்றை, நாட்டில் நிலை நாட்ட வேண்டுமாயின், ஒவ்வொரு குழந்தையின் உயிரையும் பாதுகாத்து ஓம்புதலே, அந்த நாட்டின் முக்கிய கடமையாகும்.

கருத்தரித்த காலத்திலிருந்தே ஒரு குழந்தை உயிருள்ள தொன்றாகையால், கர்ப்பிணிக்குக் கொடுக்கும் பாதுகாப்பு முறைகள், வயிற்றிலுள்ள குழந்தையின் நலத்திற்கும் இயல்பாகவே பயனளிப்பதாகின்றன. அதுபோலவே, சுற்

றுப்புறச் சூழ்நிலைகளைவிட தாயி னுடைய பழக்க வழக்க நடவடிக்கைகள் குழந்தையினுடைய உடல் நிலையை அதிகமாகப் பாதிக்கின்றன. ஆகவே, ஒரு தாய், உடல் நலமும், நல்ல பழக்க வழக்கங்களும் உடையவளாக இருப்பதோடு, குழந்தை வளர்ப்பு முறைகளை அறிந்தவளாகவும் இருக்க வேண்டும். தாய்–சேய் நலத்திற்கான வசதிகள் எளிதில் எல்லாத் தாய்மார்களுக்கும் கிடைக்கும்படி, சமூகம் பாடுபட்டால்தான், தாய் ஆரோக்கியமுள்ளவளாகவும், தாய்மைப் பண்புகளில் தேர்ச்சி பெற்றவள்ாகவும் இருக்க முடியும். இப்படிப்பட்ட வசதிகளை வழங்குவதற்காகவே தாய்மை–குழந்தை நலப்பாதுகாப்பு நிலையங்கள்(Maternity and child welfare centres) ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கின்றன.

தாய்மை–குழந்தை நலப்பாதுகாப்பு நிலையங்கள், தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் நோய் தீர்க்கும் முறைகளைவிட நோய் தடுப்பு முறைகளையே மிகவாகக் கையாளுகின்றன. குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுப்பதே, தாய்மை–குழந்தை நலப் பாதுகாப்பு வேலையில் முக்கிய நோக்கமாகும். அறியாமை, வறுமை, பிணியுடைமை, அலட்சியம் ஆகியவற்றின் காரணமாக அவதியுறும் தாய்மார்களுக்கு, தாய்மை – குழந்தை நலப்பாதுகாப்பு இலாகா, சுகப் பிரசவத்திற்கான வசதிகளையும், குழந்தை வளர்ப்புக்கான வசதிகளையும் அளிக்க முன்வருகிறது. இத்தகைய வசதிகளால், பிள்ளைப்பேறு காலத்தில் தாய்மார்கள் அச்சம் நீங்கி, உள்ள வலிவும், உடல் வலிவும் பெறுகின்றனர்.

தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு இலாகாவின் முக்கிய நோக்கங்கள் என்னவென்றால்,

1. தாய்–குழந்தை ஆகியோரின் உடல் நலத்தைப் பேணி வளர்த்துத் தாய் மரணம், குழந்தை மரணம் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் குறைக்கப் பாடுபடுதல்.

2. கர்ப்பிணி பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு பற்றிய தகவல்களைத் தெரிவித்தல்.

3. தாய்–குழந்தை ஆகியோரின் தேவைகளையும், குறைபாடுகளையும் தனித்தனியே நன்றாகத் தெரிந்து கொள்ளுதல் ஆகியவையாகும். இப்படியாக தாய்மை–குழந்தை நலப் பாதுகாப்பு இலாகா, ஒவ்வொரு தனிப்பட்டவரின் உடல் நலத்தையும் தாய் வயிற்றில் கருவுற்றிற்கும்போதிலிருந்து தொடங்கிப் பிள்ளை பிறக்கும்போதும், பிறந்த பிறகும், பச்சிளங் குழந்தையாக இருக்கும் போதும், பள்ளி புகாப்பிள்ளைப் பருவம் வரையிலும் கண்காணிப்பு செய்கின்றது. குழந்தையின் ஐந்தாண்டு வயது நிறைவில், இந்த இலாகாவின் பொறுப்பு தீர்ந்து, நல்ல தேக ஆரோக்கிய நிலையுடன், பள்ளிச் சுகாதார அதிகாரி வசம் குழந்தை ஒப்படைக்கப்படுகிறது. தாய்மை — குழந்தை நலப் பாதுகாப்பு இலாகா, குழந்தைகளின் நலத்தை இங்ஙனம் பாதுகாப்பதன் மூலம்,

சமூகத்தின் நலத்தையே பாது காக்கின்றது. இந்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சென்னை நகரத்திலும், சென்னை மாநிலத்தின் பிற இடங்களிலும் தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுப் பணியாற்றி வருகின்றன.

இந்த ஆண்டில் சென்னை மாநிலமெங்கும் அரசாங்கத்தின் பொருளுதவியோடு பணியாற்றி வரும் தாய்மை–குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்கள் 511 இருக்கின்றன. இவைகளில் 54 நன்ருக அமைக்கப்பட்ட பிரசவ விடுதிகளாகும். இவைகளில் 313 நிலையங்கள் கிராமங்களிலும் 198 நிலையங்கள் நகரங்களிலும் பரவிக்கிடக்கிடக்கின்றன. இவை தவிர தனிப்பட்ட குழுவினர் (Voluntary Agencies) முயற்சியால், இன்னும் 70 நிலையங்கள் சுகாதார இலாகாவின் ஆலோசனைகளைக் கேட்டு, ஒத்துழைத்து வருகின்றன. ஆண்டுக்கு ஆண்டு பிரசவ விடுதியின் தேவை அதிகமாக உணரப்பட்டு, அத்தகைய பிரசவ விடுதியின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, அவைகளின் வேலை முறைகளும், வேலை செய்பவர்களின் தன்மையும் வளம் பெற்றுச் சிறப்படைந்து வருகின்றன. சுகாதார இலாகாவைச் சேர்ந்த அலுவலாளர்கள் தாய்—சேய் நலத்திற்காக வீடு தோறும் சென்று பார்வையிடுகிருர்கள். இந்த முறையினல் தாய் தந்தையரை நேரில் காணவும், அவர்களுக்குக் கர்ப்பிணிப் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு பற்றிய குறிப்புகள் ஆகியவற்றைத் தெளிவாக விளக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. அடிக்கடி ஏற்படும் இத்தகைய தொடர்பால், தற்குறிகளாக இருக்கும் பெற்ருேர்கள், குழந்தையை வளர்க்கும் முறைகளைத் தெரிந்து கொள்ளவும், அதனுல் பயன் பெறவும் முடிகிறது. குழந்தை வளர்ப்பில், தாயைப் போலவே, தந்தையும் கடமைப் பட்டவனுகிருன். தாய் நோய் வாய்ப்பட்டிருக்கும் போதும், பிழைப்புக் காரணமாக வேலைக்குப் போயிருக்கும் போதும், அவளுக்கு ஓய்வு கொடுக்க வேண்டிய நேரத்திலும், அவள் இறக்க நேரிட்டிருந்தாலும், தந்தை குழந்தையை வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. குழந்தைக்கு எப்படி ஆடை அணிவித்தல். உணவு கொடுத்தல், குழந்தையை எப்படி குளிக்கப்படுத்துதல், உறங்க வைத்தல், ஒழுங்கான பழக்க வழக்கத்தில் கொண்டு வருதல் போன்ற சாதாரண விதிமுறைகளை, ஒவ்வொரு தாய் தந்தையர்க்கும், வீடு தோறும் சென்று சுகாதாரப் பார்வையாளர்கள் (Health Visitors) சொல்லிக் கொடுக்கிருர்கள். இம்மாதிரியான சுகாதார போதனை புரிவது, தாய்மை–குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்களின் முக்கியப் பணிகளில் ஒன்ருகும். சென்னை மாநிலத்தில் வீடு தோறும் சென்று பார்வையிட்டுச் சுகாதாரக் கல்வியளிக்கும் சுகாதாரப் பார்வையாளர்கள் (Health Visitors) 133 பேர் இருக்கிருர்கள். தாய்மை குழந்தை நல இலாகாவில் இவர்களே முக்கியமான பணியாற்றுபவராவார்கள். ஒவ்

வொரு வீட்டிற்கும், சுகாதார நிலையத்திற்கும் நெருங்கிய தொடர்பை இவர்கள் ஏற்படுத்துகிறார்கள். எனவேதான், இவர்கள் பணி இன்றியமையாத ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

இப்படிப்பட்ட சுகாதாரப் பார்வையாளர்க்குப் பயிற்சி யளிக்க 'அரசாங்கப் பயிற்சிப் பள்ளி' ஒன்று சென்ற 14 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்தச் சுகாதாரப் பார்வையாளர்கள், தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்புப் பணிக்கு மட்டும் அல்லாமல் சுகாதார இலாகாவின் இதர வேலைத் திட்டங்களான க்ஷய ரோகம், குஷ்டம், கிரந்தம் முதலியவற்றின் தடுப்பு வேலைகளிலும் பாடுபட வேண்டும்.

வீடுதோறும் சென்று பார்வையிடுதலும், சுகாதாரப் போதனை புரிதலும், தாய்மை—குழந்தை நல வேலைமுறைக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் குழந்தை பிறக்கும் நேரத்தில், தேர்ச்சி பெற்ற மருத்துவச்சிகளின் உதவியைப் பெறுதலும் ஆகும். நம் நாட்டில் பெருவாரியான பெண்கள், பிள்ளைப்பேறு காலத்தில், நல்ல வசதியுள்ள பிரசவ ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றோ, அல்லது டாக்டர்களின் உதவியைக் கொண்டோ, பிள்ளைப்பேறு பார்த்துக்கொள்ளும் அளவுக்கு, முன்னேற்றம் அடையாததால், பயின்ற மருத்துவச்சிகளின் உதவி, அவர்களுக்கு வீட்டிலேயே எளிதில் கிடைக்குமாறு, சுகாதார இலாகா ஏற்பாடுகள் செய்திருக்கின்றன. நாட்டில் ஏற்படும் தாய் மரணங்களில் சுமார் 50 சதவிகிதம் கர்ப்பிணியாக இருக்கும்போது போதுமான பாதுகாப்பு இன்மை, பிரசவ காலத்தில் நாட்டு மருத்துவச்சிகளால் இழைக்கப்படும் தவறுகள், மூடப்பழக்க வழக்கங்கள், பிள்ளை பிறந்தவுடன் கவனிப்பு இன்மைபோன்ற தடுக்கக்கூடிய அற்ப காரணங்களால், ஏற்படுகின்றன. ஆகையால், பயின்ற மருத்துவச்சிகள் ஆங்காங்கு நியமிக்கப்பட்டிருப்பதன் காரணமாகத் தாய்க்கும் சேய்க்கும் அறியாமையால் கேடு பல விளைவிக்கும் நாட்டு மருத்துவச்சிகளின் உதவியை நாடும் பழக்கம், நம் நாட்டில் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைப்பேறு காலத்தில், தாய்க்கு ஏற்படக்கூடிய விலிப்பு, மயக்கம், உதிரப் போக்கு முதலிய விபத்துகளால் தாய் மரணம் ஏற்படாமல் பாதுகாக்கப் பயின்ற மருத்துவச்சிகளால்தான் முடியும் என்பதை மக்களும் அதிகமாக உணர்ந்து வருகின்றனர்.

சென்னை மாநிலத்தில் 51 ஆஸ்பத்திரிகளில் மருத்துவச்சிகளுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கும் தாய்மை-குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்களில் மட்டும் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பயின்ற மருத்துவச்சிகள் வேலை செய்து வருகின்றனர். இருந்தபோதிலும், இப்பொழுது இருந்துவரும் நாட்டு மருத்துவச்சிகளின் திறமையை வளர்ப்பதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

> குழந்தைகள்தாம் பண்பு வாய்ந்த நாரிகப் பேர்வழிகள். அவர்கள் பிறர் காரியங்களில் தலையிடுவதில்லை: அநாகரிகமான ஆவல்கள் அவர்களுக்கு இல்லை. பொய் பேசவும், பிறர் பின்னுல் வம்பளக்கவும் அவர்களுக்குத் தெரியாது.
>
> — அநுத்தமா

லேடி டாக்டர்கள் வைத்தியத் துறையில் எவ்வளவு அவ்சியமாகக்கருதப்படுகிருர்களோ அதைவிட அதிகமாகச் சுகாதார இலாகாவில் வேலை செய்யத் தேவைப்படுகிருர்கள். தனித்த முறையில் வைத்தியத் தொழில் அதாவது (Private Practice) செய்யக்கூடாத காரணத்தாலும், கஷ்டமான வேலை நிபந்தனைகளுள்ள காரணத்தாலும் போதுமான அளவு ஊதியமும், நல்ல பென்ஷனும் கிடைக்காத காரணத்தாலும், லேடி டாக்டர்களுக்கு இந்தச் சுகாதாரத் துறையில் அதிகக் கவர்ச்சிகள் இல்லை. மேலும் தாய்மை-குழந்தை நலப் பாதுகாப்பு வேலையில் அவ்வ்ளவு உற்சாகம் இருக்கும் என்று அவர்கள் கருதுவதில்லை. தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் பணிவிடை செய்வதைவிடப் பெண்களுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய வேலை வேறு என்ன இருக்க முடியும்? நிர்வாகத் திறமையும், மருத்துவத் திறமையும், பேச்சு வன்மையும், எழுத்து வலிவும் ஒருங்கே நிறைந்த லேடி டாக்டர்களுக்கு இந்தத் துறையில் உற்சாகம் தரக்கூடிய வேலைகள் ஏராளம் இருக்கின்றன. கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளித்தல், கல்வியறிவு அற்ற தாய்மார்கள் இடையே சுகாதார அறிவைப் பரப்புதல் போன்ற பணிகளில் தங்களை ஈடுபடுத்துவதிலேயே இவர்கள் இன்பம் காணலாம். கிராமப்புறங்களில் சுற்றித் திரிந்து வேலை செய்வதால் ஏற்படும் உடல் கஷ்டங்களையும், அசந்தர்ப்பங்களையும், அவ்ற்ருல் ஏற்படும் மனச் சோர்வையும் சகித்துக்கொள்ளும் தன்மை இத்துறையில் வேலை செய்யும் லேடி டாக்டர்களுக்கு அவசியம் வேண்டும். ஆகையால் சமுகத்தின் முன்னேற்றத்திற்குத் தாங்கள் செய்யக்கூடிய இன்றியமையாத கடமைகளில் ஒன்ருக, இந்தத் தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு வேலையைக் கருதி, அதிலிருந்தும் நீங்க அவர்கள் நினைக்கக் கூடாது. இப்போது நம் நாட்டில், இங்ஙனம் இந்தத் துறையில் வேலை செய்யும் லேடி டாக்டர்களின் எண்ணிக்கை 115 ஆகும்.

தாய்—குழந்தை சுகாதாரம் பற்றியும், பெற்ருேர்கள் உணர்ந்து நடந்துகொள்ளும் நிலையில் இல்லாததாலும் நோய் தீர்க்கும் வசதிகள் மிகச் சொற்பமாகவே இருக்கின்ற காரணத்தாலும், நோய் தடுக்கும் சுகாதார முறையே நாடெங்கும் வேண்டப்படும் பணியாகவே இருந்து வருகின்றது. தாய்மார்கள் — குழந்தைகள் நலம் கருதி, அவர்கள் சார்பாகக்

கோரப்படும் எந்தக் கோரிக்கையையும், உலகிலுள்ள யாரும், அவ்வளவு எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அப்படி எழும் கோரிக்கை மிக மிக முக்கியமானதாகும்.

சென்னை மாநிலத்தில் 100க்கு 82 பேர்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களில் 100க்கு 60 பேர்கள் பிள்ளை பெறும் பருவத்திலுள்ள பெண்களாகவும், 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாகவும் இருக்கின்றனர். இவர்கள் எளிதில் பாதிக்கக் கூடிய உடல்நிலை உள்ளவர்களாதலால், இவர்களின் சுகாதாரம், முக்கியமாகத் தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்களின் மூலம் காப்பாற்றப் படவேண்டும். பொது சுகாதார வேலை முறைகளிலிருந்து, தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு வேலையைத் தனியே வேறுபடுத்தக் கூடாது. பொது சுகாதார வேலைகளாகிய சத்தான உணவளித்தல், அசுத்தம் அகற்றுதல், தொத்து நோய் தடுத்தல் ஆகியவற்ருேடு, தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்பு வேலையும் இணைந்தே பணியாற்ற வேண்டும். மேலும், நோய் தடுப்பு முறைகளோடு, சிறிதளவாவது, நோய் தீர்க்கும் முறைகளையும் கையாண்டால், நிலையான நல்ல பல பலன்களை நாம் நீண்ட நாட்களுக்குப் பெறமுடியும். தாய்மை—குழந்தை நலப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு நடத்தும் சுகாதார இலாகா, பொது மக்களின் அக்கரையையும், அனுதாபத்தையும் அதிகமாகப் பெறவேண்டிய தொன்ருகும். நாட்டில் எதிர்கால நல்வாழ்வைக் குறித்து, இந்த இலாகாவிற்குப் பெருந் தொகையான பொருளுதவி ஒதுக்கப்படவேண்டியது முக்கியமானதும், முதன்மையானதுமாகும். இந்த இலாகா குறிப்பிட்ட தொத்து நோய்களைத் தடுத்தல், பல்வேறு வைத்திய வசதிகளை அளித்தல், பிள்ளைப் பேறு மருத்துவம் பார்த்தல் முதலிய வேலைகளோடு, மக்களின் சமூக, சுகாதார, உணவு நிலை உயர்வுக்காகவும் பாடுபட்டு வருகிறது.

சுகாதாரம் என்பது நோயற்ற வாழ்வு நடத்துவது என்பது மட்டுமல்ல; நல்ல உடல் வலிவும், உரமும் அமையப் பெற்று, சமூகத்தில் நல்ல நிலையில் இருப்பதும் ஆகும்.

ஒரு நாட்டின் உண்மையான செல்வம், அந்த நாட்டின் நீர் வளமோ நிலவளமோ அல்லது, காடுகளோ கனிகளோ அல்லது ஆட்டின் ஈட்டமோ மாட்டின் கூட்டமோ, அல்லதுபொன்னோ மணியோ அல்ல—சுகாதாரமும் மகிழ்ச்சியும் கொண்ட மக்களே யாவார்கள்.

[சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட இப்பேச்சை உரிமை பெற்றுப் பிரசுரித்திருக்கிருேம்]

# ஒற்றை ரோஜா

எஸ். ஆறுமுகம்

## ஒன்பதாம் அத்தியாயம்

## "மாயா !"

'அழகோவியம்!'

புன்னகையும் புது நிலவும் கைகோர்த்து 'சடுகுடு' ஆட்டம் விளையாடுவதைப் போல, பொன்வெயிலில் அந்தப் பொன் எழுத்துக்கள் பொன்னொளி பெற்றுப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. இயற்கையின் நியதி அது; உதயம் மலர்ந்து சில மணி நேரமே ஆன ஆனந்த வேளை அது. சுற்றுச்சார்பு அப்படி; இன்ப உணர்வைப் பாய்ச்சிடும் படத் தயாரிப்பாளர் பங்களா அது; அதுவே சினிமா ஸ்டுடியோவுங்கூட. பின் கேட்பானேன்...?

மண்ணில் பூத்ததற்குப் பயன் கண்டு பூக்கள் பூத்திட்ட பூங்கொடிகள் சிரித்துக்கொண்டிருந்தன. ஒரே சரத்தில் தொடுக்கப்பட்ட கதம்ப மலர்களென ஆங்காங்கு பல பல வண்ண மலர்கள் வாய்மூடி மௌனிகளாக நின்று, பார்ப்பவரையும் போதையில் வாய்மூடி மௌனிகளாகிவிடச் செய்துகொண்டிருந்தன. இயற்கையின் அனுபவிப்பும் ஏறக்குறையக் கள்வெறி போலத்தானே...?

உள்ளே —

திரைப் படங்களில் பார்க்கிறோமல்லவா, அதேபோலப் பகட்டும் பளபளப்புமான முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய அறையில் நாகரிக உடை உடுத்துக்கொண்டு சுழல் நாற்காலியில் சுற்றிய வண்ணம் சிந்தனை வசப்பட்டிருந்தார் டைரெக்டர். உதட்டுடன் உதடாக உறவு பேசிக்கொண்டிருந்த 'பனாமா'வின் தேய்வுக்குக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. புகைச்சுருள் விண்ணைச் சாடவில்லை; மண்ணைச் சாடவில்லை; அவரது கண்களைச் சாடிக்கொண்டிருந்தது. அவர் கண்கள் தேக்கி வைத்திருந்த நீர்ப்பெருக்கை நெட்டித்தள்ளின. அவர் சிந்தையுங் கூட அப்படிப்பட்ட நிலையில்தான் இருந்தது. இல்லையென்றால் இதழ்பிரித்து இதழ் சேருவதற்குள் அவர் கண்கள் ஏன் அப்படிக் கலங்கி அழவேண்டும்? அவர் நெஞ்சம் ஏன் அப்படிப் பெருமூச்சுவிட்டுத் தேம்ப வேண்டும்?

ஒவ்வொரு தனிமனிதனின் சொந்த வாழ்வுமே ஒரு வாழ்க்கைச் சரித்திரம்போலத் தான். அப்படித்தான் அமைந்து விட்டது அந்த டைரெக்டரின் வாழ்க்கையும்! அவர் வாழ்க்கை அப்படி; சரிதம் அப்படி. வாழ்க்கைச் சரித்திரம் அது! இறந்த காலமும் நிகழ் காலமும் கூட்டணியாகித் தீட்டிய துயரக் கதை அது. பாசமும் பிணைப்பும் துண்டிக்கப்பட, அதன் விளைவில் சொட்டிய ரத்தக்கண்ணீர் பாடிய துன்பக்காவியம் அது. உயிரும் உயிர்ப்புமாகப் பூண்டொழுகிய இளங்காதலர்களது தாம்பத்தியம் பிளவு காண, அந்தப் பிளவு சொல்லிய சோகக் காதையும் அதுதான்.

ஆனந்தமயமான அமுதச் சூழ்நிலையிலே, மனங்குமையும் வேதனைப் புலம்பல். விந்தை தான்!

நினைவு அலை மறுபடியும் மனக்கரையைச் சிறித் தாக்கியது.

டைரெக்டர் மேஜைடிராயரை இழுத்துஉள்ளேயிருந்துஎடுத்த படத்தை உள்ளங் கையில் வைத்துப் பார்த்தான். அவன் உள்ளம் உணர்ந்துகொண்ட தவறுக்குப் பிராயச்சித்தமாக வடித்தெடுத்த நீர்த்துளிகள் படத்தின்மேல் படிந்து சாட்சி சொல்லி நின்றன. அடுத்த தடவை மீண்டும் டிராயருக்குள் கையைத் திணித்தான். இம்முறை உறைக்கடிதம் ஒன்று வந்தது. அதன் விலாசத்தைப் பார்த்தான். பல இடங்களில் சிவப்பு மையினுல் கிறுக்கப்பட்டு, விலாசதாரர் இல்லாமையால் எழுதிய அவனுக்கே கடிதம் திரும்பிவிட்டிருந்தது. அவனது நடுங்கும் விரல்கள் கடித உறைமீது தவழ்ந்தன. இமைப்பில் கண்ணீரைக் காணிக்கையாக்கித் தீட்டிய ஒரு இதய ஒலிக் கடிதம் அவன் முன் பேசத் தொடங்கியது.

“அன்பு பூமா,

நீ என் அன்பின் தெய்வம். என்றோ உணர்ந்ததுண்டு இந்த உண்மையை; இன்றும் உணர்கிறேன். ‘இருந்துமா என்னைத் துண்டித்துவிட்டீர்கள்?’ என்கிறுயா, கண்ணே? அதற்குத் தண்டனையை நான் அல்லும் பகலும் அனுபவிக்கிறேனே, இதை உன்னிடம் யார் வந்து சொல்லப் போகிருர்கள்? நீ என்னைப் பிரிய, நான் உன்னைப் பிரிய, இணைஉயிர் இணைஉடலைப் பிரிய நேரிட்ட இதனை விதியின் சிரிப்பு என்பதா?...நடந்துமுடிந்ததற்கு விளக்கவுரைப் போட்டி எதற்கு, நடப்பதற்கேற்ற காரண காரியங்கள் குறித்து...? மெய்தான்...! கண்பறிக்கும் ஒளி சிந்தும் கடல்முத்து எந்தக் கடலின் அடி வயிற்றினுள் தஞ்சம் புகுந்துகொண்டதோ?—


கடந்ததெல்லாம் கண்ணீருடன் கழியட்டும், கனவாய், பழங்கதையாய். கொண்டவன் இழைத்த கொடுமைக்குப் பரிகாரம் கோருகிறுன். தயை காட்டு பெண் என்ற உயிர்ப் பண்பில் நின்று, பெண் எனில் இரங்கும் தயாநிதி என்ற தியாக நோக்கில் உன்னை நிறுத்தி. உன்னைக் காண, உன் இன்முகங்காண, உயிர்க் காவியம் புனையும் உனது காவியக் கண்களைக் காண, ரகசியத்தைக்

கணத்துக்குக் கணம் தோற்றுவித்து, மறைத்து, என்னை வெறியனுக்கிய அந்த உன் துடிக்கும் செவ்வதரங்கள் காண என் ஆவி, உயிர், உடல் எல்லாம் இரவு பகலாகத் துடிக்கிறது. விபரங்கள் குறித்து மறுதபாலில் தயைசெய்து பதில் எழுதுவாயா?

ராஜேந்திரன்"

குமுங்கும் நெருப்புக்கும், அதன் மீது உறங்கிக் கிடக்கும் சாம்பல் திரைக்கும் இடையேயுள்ள உறவுநிலைபோல அமைந்திருந்தது அப்போதய அவனது உள்ளமும், உள்ளத்தின் எதிரொலியாக—உள்ளத்தின் உள்ளமாகக் கிடந்த அந்தக் கடிதமும். ஆனுல் நினைவுகள் மட்டும் நீறுபூத்த நெருப்பாகி விடமாட்டேன் என்கின்றனவே!

'பூமா, நீ என் உயிர்த்துணை; உயிர்ப்பின் உயிர். என்ருலும் அபாக்கியவதியாகிவிட்டாய். நான் உன்னை அப்படி ஆக்கிவிட்டேன். நான் அல்ல—என்னுள் ஏதோ ஓர் சக்தி—ஏதோ ஓர் வெறி என்னை ஆட்டிப்படைத்தது. மனச்சாட்சியின் வேதனை தாங்கமாட்டாமல் அப்படி அன்று உன்னை அடித்துப் போட்டேன். நான் இதயமற்ற பாவி. எனக்கு மன்னிப்பே இருக்கமாட்டாது. 'என் உயிருள்ளபரியந்தம் நான் உன்னைக் கண்போலக் காப்பாற்றுகிறேன்' என்று அக்கினி சாட்சியாகத் தாலி கட்டிய நான் கடைசியில் உன்னைக் கைவிட்டுவிட்டேன், நான் எழுதிக் கையெழுத்திட்டுத் தந்த வாழ்க்கைச் சாசனத்தையும் காற்றில் பறக்கவிட்டு. ஆனுல் நான் இதோ காற்றில் பஞ்சாய்ப் பறக்கிறேன். ஆனுல் அந்த ஒன்றிரண்டு நாட்களின் போக்கு மாத்திரம் நெடுக நீடித்திருந்தால்... நான் பிரமைபிடித்து அலைந்திருப்பேனே என்னவோ? பித்



துப் பிடித்துத் தெருவெல்லாம் பேயாய்ச் சுற்றித் திரிந்திருப் பேனே என்னவோ?... ஆனல் சம்பவங்கள் வாழ்க்கைக்குத் திரும்பு புள்ளிகள். அன்று மாத்திரம் அச்சம்பவம் நிகழ்ந் திராது போனல்...'

தவறுகள் செய்வது மனித இயல்பு. செய்த தவறுகளே உணரும் கட்டமும் வாழ்வின் புனித வேளேபோலத்தான். ஆனல் இந்த விதி எல்லோ ருக்குமே கட்டுப்படுவதில்லேயே. ஏன், இந்த டைரெக்டர் கூட அப்படித்தான். ஆம்; இந்த டைரெக்டர்தான் ராஜேந்திரன்! ஆனல் அதே ராஜேந்திரன் தன்னேப்பற்றிய உணர்வில், தன் தவறுகளுக்கு—அவன் தன் துணைவி பூமாவுக்கு அநீதி யாக, அநியாயமாக விளேத்த இன்னல்களுக்கு, தீவினே களுக்கு இப்போது வருந்தி ஞன். அவன் விழிச் சிமிழ்களில் கண்ணீர் இருந்தது, இதயம் பிறப்பித்த உணர்வினது பிரா யச் சித்தச் சின்னமாக.

கோவையில் 'அழகோவியம்' ஸ்டுடியோவின் உரிமையாள ருக்கு ராஜேந்திரன் பெரிதும் கடமைப்பட்டவன். ஸ்டுடியோ டைரெக்டர் சந்திரமௌளலி கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டதிலிருந்து, ஸ்டுடியோவின் முழுப் பொறுப் பையும் டைரக்டா பதவியி லிருந்து கவனித்துவரும் உரி மையை சந்திரசேகரன் ராஜேந் திரனுக்குக் கொடுத்தார்.


சந்திரமௌளலியின் மேற்பார் வையில் வெளியான முதல் படம் 'அன்னேபூமி'. முதலதே முழுவெற்றியாகப் பரிணமித் தது. அது தேடித் தந்த புகழி லும் பணத்திலும் அடுத்த படத்திற்கான பூர்வாங்க ஏற் பாடுகளில் ஈடுபட்டிருந்தான் ராஜேந்திரன்.

அடுத்ததாக எடுக்கப்படவி ருக்கும் படத்திற்காக உரிமை யாளர் சந்திரசேகரன் இரண்டு முறை பம்பாய் முதலிய இடங் களுக்குப் பிரயாணம் செய்து திரைப்பட நுணுக்கங் கள் பலவற்றை அறிந்துவந்தார். புதுப்படத்திற்கான கதைக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து அன்றைக்குக் கடிதம் எழுதிவிட் டான். அதில் ராஜேந்திரனுக்கு முழுநிம்மதி. அந்தக் கடிதம் மாத்திரம் நல்ல பதிலேக் கொண்டுவந்துவிட்டால்...? அப்புறம் படத்தின் வெற்றிக் குக்கேட்கவே வேண்டியதில்லே யல்லவா?...ஆகா...!

எதிரே காட்சி தந்துகொண் டிருந்த ஒரு 'செட்' டைரெக்டரின் கருத்தைத் தன்வயப்படுத்திக் கொண்டிருந்தது. 'அன்னேபூமி' படத்தின் கடைசிக்காட்சிக் கான அலங்காரப் பந்தல் அது. காதலர்கள் ஒன்றுகூடி 'டுயட்' பாடி மகிழுதற்கான இயற்கைப் பின்னணியுடன் அழகாக அமைக்கப்பட்டிருந்த காட்சி அது. இன்னும் அப்படியே நின்றது.

விழிவட்டம் சாய்ந்தது.

கண்கவரும் அலங்கார மேடை அது. 'அன்னேபூமி' உள்ளடக்கிக் கொண்டதுதான் அதுவும். காதலர்களின் களிப் புக்குப் பொழுபோக்கு வேண்டு மல்லவா? அதற்கான நடன மேடை அது. 'அழகோவியம்'



உரிமையாளர் சந்திரசேகரனின் புதல்வி பூங்குழலியின் நடனம் அதில் தான் நடந்து படமாக்கப் பட்டது. அன்றொரு நாள் பட்டணத்தில் மயிலை ஒளவை அனாதை விடுதியின் வளர்ச்சிக்கென பூங்குழலி இலவச நடனம் ஆடினாள் அல்லவா? அதே நடனம்தான் 'அன்னைபூமி'யிலும் இடம் பெற்றிருந்தது. அடி நாளில் பூங்குழலியின் நடனத்தைக் காணமுடியாது போய் விட்ட ராஜேந்திரன் அன்று அவளது எழில் நடனத்தைக் கண்டு ரசித்தான்; மகிழ்வு பெற்றான்.

நினைவுகள் ஏடு புரண்டன; காலம் தடம் புரண்டது.

ராஜேந்திரனின் உணர்வு சடக்கென்று ஒரு இடத்தில் நிலைபெற்றது, 'பிரேக்' போட்டதும் சடுதியில் நிற்கும் 'பிளஷர்' போல. கடந்த நிகழ்ச்சி நிகழ் காலத்தின் எல்லைக் கோட்டில் வந்து நின்றது. அவன் எண்ணினான்; எண்ணத் தூண்டியது உள்மனம். 'காரம்போர்'டில் அடுக்கப்பட்டிருக்கும் விளையாட்டுக்காய்கள்போல, திரைப் படக்காட்சிகள்போல நினைவுகள் அருகருகாகப் பிறந்தன. நினைவுகள் பிறக்கின்றனவென்றால், ஏன் இப்படி அவன் உடல் கனிந்த தணலாகி விடுகிறது? அப்படியென்றால் ஏன் அத்தகைய நினைவுகள் பிறக்க வேண்டும்...?

பூமாவை அடித்துப் போட்டுவிட்டுப் புறப்பட்ட ராஜேந்திரன், எங்கோ கால் இழுத்த போக்கில், மனம் வகுத்த வழிக் கோட்டில் நடந்தான். அவனைச் சுற்றிப் பூமாவும், மல்லிகாவும் நிழலாகத் தொடர்ந்து அவன் நெஞ்சைத் தூண்டில் முள்ளிட்டு இழுத்து முடுக்கிக் கொண்டிருந்தார்கள். அவன் உணர்ந்தான்; உணர்வின் வேதனை அவனை நெஞ்சுலரச் செய்தது. ஒரு பக்கம் அவன் கைவிட்ட மல்லிகா; மறுபக்கம் கைவிடப்பட்ட அபலை மனையாள் பூமா. மல்லிகா அவனைக் கொல்லாமல் கொன்றாள். ஆம்; அவள் நினைவின் உரு அப்படி அவனைச் செய்தது. அவன் துடித்தான், உயிர்த்துடிப்பே நின்றுவிட்டதுபோல. இரண்டுங்கெட்டானாகப் பித்துப் பிடித்தவனாக ராஜேந்திரன் ஓடினான்; ஓடிக்கொண்டிருந்தான், கும்பிருட்டிலே, குமையும் மனத்துயரைத் தாங்கிக் கொண்டு. வழிமறைத்திருந்தது எதிர்காலம். அவன் ஓடிக்கொண்டுதான் இருந்தான். அவன் நினைவு அவனுக்கு இல்லை. ஏதோ ஓர் மயக்கம், பித்தம், உள்ளக் குமட்டல் — எதுவும் அல்ல; வெறிதான்!

நடை, பஸ், ரயில், டிராம் — ராஜேந்திரன் சுழன்றான். பர்

ஸில் தங்கின சில்லரைகள் செல்லத் தயாராகின. அவனுக்குத் தெரியமாட்டாது.

அவன் நிமிர்ந்தான்.

அலேகடல் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. தகடு விரிந்து விம்மி வீங்கியெழும் அலேகள் மீது நிலவுக் கதிர்கள் கொஞ்சி விளேயாடிக்கொண்டிருந்தன.

ராஜேந்திரன் சமுத்திரத்தை வெறித்துப் பார்த்தான். இரவில், பார்க்கப் பயங்கரமாக உருமிக் கிடந்தது கடல். பொங்கும் கடல்முன் பொங்கும் உள்ளத்துக்குத் துளி நிம்மதி வேண்டி நின்ருனே, என்னவோ! ஆனல் மாலே என்ருல் அலேகடல், எத்தனே எத்தனே உள்ளங்களே அலே ஓய்ந்த கடலாக்கி, சாந்தியையும் சீதனமாகக் கொடுத்தனுப்புகிறது...? அவனுக்குப் புல்லரித்தது. பொழுது போய்க் கொண்டிருந்தது. அவன் மனநிலே எங்கோ போய்க்கொண்டிருந்தது.

"யார் அங்கே?"

குரலில் ஏன் இத்தனே வேகம்? இதயம் ஒலிக்கவில்லேயே?

மறுபடியும் அதே கேள்விக் குறி.

தன்னே யாரோ உலுக்குவது போலிருந்தது; உணர்வு உடலுக்குள் புகுந்துகொண்டது; திரும்பினன். ஒரு போலீஸ்காரன் சட்டத்தின் பிரதிநிதியாக, அங்கு தோன்றினன்.

'போலீஸ்! நான் தற்கொலே செய்துகொள்ளப் போவதாகத் துப்புச் சொல்லி, என்னேக் கைதுசெய்து, தண்டனே விதிக்க செக்ஷன் வகுத்திருப்பானே? ஆம்; அப்படியிருந்தாலும் தேவலாம். சிறைக் கம்பிகளின் நடுவே பூமா — மல்லிகா இருவரின் பெயர் பஜனேயிலேயே என் மனம் அமைதி காணுமே. அமைதி! ஹஹ்ஹா......என் வாழ்க்கையும் அத்துடன் அமைதி பெற்றுவிடும். ஒரே அமைதி......'

"யார் அது?"

அவன் உயிர் செத்துவிட்டது.

அடுத்த விநாடி, அங்கு ஒரு கார் வந்து நின்றது. கார் கக்கி நின்ற ஒளிப்பிழம்பில் அவன் காரிலுள்ளவர்களேப் பார்த்தான். ஆ...!

"ராஜேந்திரஞ?"

"............"

சில நிகழ்ச்சிகள் சில சமயங்களில் நிகழவேண்டுமென்று எதிர்பார்க்கிருேம். ஆனல் அவை அப்படி நிகழாமல், எதிர்பாராத சமயத்தில், என்ருே எதிர்பார்த்த சம்பவம் ஏற்படும்போது மனம் காணும் மலேப்புக்கு அளவிருக்காது. அப்படித்தான் அன்றும் ஏற்பட்டது. ராஜேந்திரனுக்கு அது கனவு போலவே தெளிவற்றிருந்தது. சந்திரசேகரன், அவரது மகள் பூகுங்ழலி, அவள் அத்தான் டாக்டர் குணசீலன், டைரெக்டர் சந்திரமௌலி ஆகியவர்கள்



இருந்தார்கள். இவர்களையெல்லாம் ஒன்றுசேரக் காண்பது உண்மையாகவே அவனுக்குக் கனவாகத்தான் தோன்றியது.

"மிஸ்டர் ராஜேந்திரன், என்ன இப்படிப்பார்க்கிறீர்கள்? மழையில் கொட்டக் கொட்ட நனைந்துவிட்டீர்களே? மழை பெய்ததை நீங்கள் அறியமாட்டீர்களா? ஏன் இப்படி அடியோடு நீங்கள் மாறிவிட்டிருக்கிறீர்கள்...?"

அவ்வளவு பேர்களிலும் பூங்குழலி முதன்முதலில் அன்புடன், குழைவுடன் ராஜேந்திரனுடன் பேசினாள். அவள் பார்வை அவன்மீது மொய்த்திருந்தது.

மேகம் விலகிய மங்கிய நிலவில் அவர்கள் அத்தனை பேரையும் ராஜேந்திரன் புதிதாகப் பார்ப்பதுபோலப் பார்த்தான். அந்தப் போலீஸ்கார நண்பரும் புன்னகைத்தார். டைரெக்டர் சந்திரமௌலி முறுவலித்துக் கொண்டிருந்தார். அவரை அவன் நன்றாக அறிவான். அவன் காலேஜில் நடத்திய நாடக விழாவுக்குப் பட்டணத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சந்திரமௌலிதான் தலைமை தாங்கினார். ராஜேந்திரனது நாடக வெற்றியைப் பாராட்டிப் போற்றினார் அவர்.

ராஜேந்திரனுக்கு அப்பொழுதுதான் தன் நினைவு வந்தது. இதுவரை மழை கொட்டியிருக்கிறதென்பதும், மழையில்தான் தெப்பமாக நனைந்திருப்பதையும் அவன் உணரலானான்.

"ராஜேந்திரன், தயவுசெய்து என்னுடன் வாருங்கள். வழியில் இந்த போலீஸ் நண்பரைச் சேர்த்துவிட்டு நேரே நம் ஸ்டுடியோவுக்குப் போவோம். அங்கு வந்ததும் உங்களைப்பற்றிச் சொல்லவேண்டும். உங்கள் தோற்றம், போக்கு, பாவனை எனக்கு அச்சம் விளைவிக்கிறது. தற்செயலாக இங்கு திரும்பியது கார். இல்லாதுபோனால் உங்களை நாங்கள் சந்தித்திருக்கவே முடியாது...மறந்து விட்டேனே...ஆமாம்; உங்களுக்கு பூங்குழலி—குணசீலன் கல்யாணப்பத்திரிகை கிடைத்ததல்லவா? நாளை மறுநாள் இங்கு பட்டணத்தில் திருமணம். அதற்காகத்தான் எல்லோரும் கோயமுத்தூரை விட்டுப் பட்டணம் வந்து விட்டோம்...நல்ல சந்தர்ப்பத்தில்தான் உங்களையும் காண முடிந்திருக்கிறது."

பூங்குழலி—குணசீலன் திருமணம்பற்றிய தகவல் ராஜேந்திரனுக்கு மிக்க மகிழ்வைத் தந்தது. ஆரம்பத்திலிருந்து அவன் எதிர்பார்த்திருந்ததுவும் அதுவேதானே...! பூங்குழலிக்கும் தனக்குமிடையே நிலவிய நட்புப் பாசத் தொடர்பற்றியஞாபகங்கள் அவன் உள்ளத்தில் தோன்றின. சந்திரசேகரன் நீட்டிய திருமண அழைப்பைப் பார்த்தான். ஏற்கனவே ராஜேந்திரனுக்கு மதுரை முகவரிக்கு ஒரு அழைப்பு அனுப்பப்பட்டு விட்டதல்லவா?

ராஜேந்திரன் அவர்களிடம் தன் மகிழ்வைச் சொன்னான். பூங்குழலியும் குணசீலனும் ஒருவரையொருவர் குறும்புடன் பார்த்துக்கொண்டார்கள். பூங்குழலியின் மண வைபவத்துக்குத் தான் இருக்கும் வாய்ப்பு

கனிந்ததில் ராஜேந்திரன் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

சந்திரசேகரனிடம் ஒருநாள் உள்ளத்தில் உள்ளதைச் சொன்னான் ராஜேந்திரன். அவர் புரிந்துகொண்டார். டைரெக்டர் சந்திரமௌலிக்கும் அவன்பேரில் மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது.

கோவை ஸ்டுடியோவில் அவனுக்கு வேலை கிடைத்தது. சென்னையில் சிலநாள் தங்கிவிட்டு அவன் புறப்பட்டான். பட்டணத்தில் ஒரு நாள் கூட அவன் வெளியே செல்லவில்லை. தன் அண்ணன் — அண்ணியைக்கூட மறந்து போனான். கோவை சென்று வேலைக்குள் தன்னைத் திணித்துக்கொண்டபோதுங்கூட, அவன் சித்தப் பிரமை பிடித்தவன் போலத்தான் காணப்பட்டான். டைரெக்டருக்கு அந்த ரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றும் வேலை அவனுக்குரியது.

காலப்பெண் அமைத்த முள் வேலியில் மாதச் செடிகள் சில அடக்கமாயின.

மனித உள்ளம் ஓர் விசித்திர உலகம். உள்ளத்திலே பல ஆசைக் கனவுகள் தோன்றலாம். ஆனால் உலகிலே அந்த ஆசைக் கனவுகளில் ஒன்றாகிலும் என்றோ ஓர் நாள் பூர்த்தி பெறுவது உண்டு. அப்படிப்பட்ட நிலை ராஜேந்திரனுக்கும் வாய்த்தது, பொன்னான வாய்ப்பாக, பொருள் பொதிந்த வாய்ப்பாக.

'சாலப் பற்பல நற்பகற் கனவில் தன்னை மறந்த லயந்தனனில்' நாட்கள் ஓடின.

ராஜேந்திரன் உதவி டைரக்டர் ஆனான். கல்லூரி நாட்களில் நடக்கும் நாடகங்கள் அனைத்தும் பெரும்பாலும் அவனது டைரக்ஷனில்தான் நடந்தேறும். அந்நாளில் ஊறிய ஆர்வம் பெருகி வளர அற்புத வாய்ப்புக் கிட்டியது. பிஞ்சுப் பிராயத்தில் மணல் வீடு கட்டி விளையாடும் சிறு நிகழ்ச்சி தானே, பிறகு வாழ்க்கையின் அச்சாணி மண்டபமாக அமையவும் அடிகோலுகின்றது...!

மீண்ட சுவர்க்கம்; ஆனால் அதுவே இழந்த சுவர்க்கமானால்...

ராஜேந்திரன் சுயநினைவு பெற்றான். நிரம்பி வழிந்த கண்களைத் துடைத்துவிட்டுக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். அனுதினமும் இப்படித்தான் அவன் மனம் மாய்ந்து போவான். அவன் இதயம் அலைகடலாக, உருகும் எரிமலையாகிவிடும். அவன் மனப்பாம்பு படமெடுத்துப் பயங்காட்டும். தாயைப் பறிகொடுத்த சேய் தனிமையில் கிடந்து ஏங்கி அழுவது போல, அவன் கண்ணீரை மாலை மாலையாகப் பெருக்கித் தள்ளினான்.

இப்படிப்பட்ட நிலை கடந்த சில மாதங்களாகவே அவனிடம் இருந்து வந்தது. அவன் நெஞ்சத்தின் நெஞ்சம் அப்படி. ஆனால் ராஜேந்திரனது வெளி அழகையும் ஆடம்பரத்தையும் கண்டவர்களுக்கு அவன் அகத்தின் நிலை எப்படித் தெரியும்? பார்க்கப் பகட்டாகக் குழைந்தாடுகிறது தாழம்பூ. ஆனால் அதனுள்ளே நெளிந்து ஊறுகிறதே பூநாகம், அதைப் பற்

றிய ரகசியம் யாருக்குத் தெரிய முடிகிறது?

பூமா நிரபராதி என்பதை ரரஜேந்திரன் என்றும் அறிந்தவன். சாதாரண நாளாக நல்ல மனசுடன் இருந்திருந்தால் அவன் அப்படி அன்று பூமா—விஜயா—அவள் அத்தான் குமார் இவர்களுடன் சினிமாப் பார்க்கப் போய்வந்ததற்கு ஒன்றும் சொல்லியிருக்கவே மாட்டான். ஆனால் அந்த நாட்களில் இனம் விளங்காத ஒரு குறை—மனம் புரியாத ஒரு குற்றம் அவனுக்குள் உருப்பெற்று, அந்தக் குற்றம் மனச்சாட்சி வடிவில் அவனை இன்னல் செய்தது. அனைத்திற்கும் காரணம் மல்லிகாவின் நினைவு. மல்லிகாவை மறந்து வேறொருத்தியைக் கலியாணம் செய்துகொண்டது ஏதோ பெரிய இமாலயத் தவறு ஒன்றை மல்லிகாவுக்கு இழைத்துவிட்டதாகக் கருதினான் அவன். அவன் மனம் அப்படி இடித்துக் காட்டியது. நாள் விடிந்து நாள் பிறந்தால் சதா சர்வ நேரமும் அவனுக்கு மல்லிகாவின் ஞாபகமே வாட்டிப் பிழிந்தது. சொல்லுக்குப் புறம்பானதொரு சஞ்சலம்—மீளவும் அதைப்பற்றிச் சிந்தித்து, மல்லிகாவுக்கு அவன் நிஜமாகவே துரோகமா செய்தான் என்பது குறித்து ஆராய்ந்து முடிவுகட்ட முடியாததொரு சிக்கல்—இப்படிப்பட்ட வேதனைகள் அவனைச் சூழ்ந்துகொண்டன. மல்லிகாவுக்குத் தான் செய்தது துரோகமே என்ற முடிவான தீர்ப்புச் சொல்லிவிட்டது அவன் இதய சாட்சி. இதயம் விந்தை வடியும் ஒரு விசித்திரச் சட்டப் புத்தகம். பிறகு......? அவன் மருண்டு போனான்; மதி புரண்டது. அப்பொழுதுதான் பூமாவை அவன் அடித்துப் போட்டுவிட்டு வீட்டைத் துறந்து, துணையைத் துறந்து, துணை சுமந்த கருவைத் துறந்து இரவுடன் இரவாகப் புறப்பட்டான்!



இயற்கை ஓவியன் முகில் திரையில் உயிர்ச்சித்திரங்கள் சிலவற்றைத் தீட்டி அழகு பார்த்துக்கொண்டிருந்தான்.

மேஜையில் கவி தாகூரின் 'கீதாஞ்சலி' சிரித்துக்கொண்டிருந்தது. ராஜேந்திரனின் பார்வை அதில் அமைந்தது. பிச்சைக்காரி ஒருத்தி வீடு வீடாய்ப் பிச்சை எடுக்கிறாள். வழியில் மன்னவனைப்போல ஒரு உருவம் தெரிகிறது. அவளுக்கு ஒரு ஆசை, அவனிடம் ஏதாவது பிச்சை கிடைக்குமென்று. அண்டினாள். ஆனால் அந்த மன்னர் மன்னன் பிச்சைக்காரியிடம் கைநீட்டி யாசகம் கேட்கிறான். அவள் திகைப்புடன் பையிலிருந்து சிறு நெல் மணி ஒன்றை எடுத்து நீட்டுகிறாள். அவள் மாலையில் பையைப் பிரித்தபோது பையில் அழகிய பொன்மணி இருந்தது. 'நீ கை நீட்டி என்னிடம் யாசகம் கேட்ட போது என்னிடமிருந்த அத்தனையையும் உனக்குக் கொடுத்துவிட எனக்கு மனம் இருந்திருக்கக் கூடாதா?......'

என்று பிச்சைக்காரி ஏங்கினாள்.

உதட்டோரத்தில் புன்னகை நின்றது அவனுக்கு.

'பூமா!'

அவன் இதயம் அழைத்தது.

அவள்...?

பூமாவைத் தேடிப்பிடித்து அழைத்துவர வேண்டுமென்பதாக ராஜேந்திரனுக்குச் சில தினங்களாக நினைவு தூண்டியிருந்தது. அதற்காகவே அவன் அவளுக்குக் கடிதமும் எழுதினான். ஆனால் அவள் இல்லாமையால் திரும்பிவிட்டது. இது அவனுக்கு மாளமாட்டாத வேதனையையும், மீளாத பயத்தையும் தந்தது. வந்த ஆரம்பத்திலேயே ஸ்டூடியோ உரிமையாளர் சந்திரசேகரனும் பூங்குழலியும் பூமாவைத் தன்னுடன் வரவழைத்துக் கொள்ளவேண்டி எவ்வளவோ எடுத்துக் சொன்னதுண்டு அவனிடம். சில மாதங்கள் தனிமை தேவை என்றும், அப்பொழுதுதான் அவன் மனம் பழைய நிலைமைக்கு வரமுடியும் என்றும் கூறவே, 'சரி' என்று இருந்துவிட்டார்கள்.

'பூமா கர்ப்பவதியாயிருந்தாளே...' என்ற மின்னல் பளிச்சிட்டது அவனுக்கு. அவன் நிலை அதிர்ந்துபோனான்.

'பூமா!......தெய்வமே, பூமா பெற்றுப் பிழைத்துக் குழந்தையுடன் சுகமாயிருப்பாளல்லவா? ஏன் இப்படி என்னைக் கொல்லாமல் கொல்கிறாய்?......தனியே வெந்துமடியும் அவல நிலைக்கு ஆளாகாமல் அன்றே நான் நினைத்தபடி என் வாழ்வு முடிந்திருந்தால்...!'

வாழ்க்கைப் பயணத்தின் கடைசிக்கோட்டில் நின்ற அவனை, வாழ்வின் புதிய அத்தியாயத்தின் தலைவாயிலில் கொணர்ந்து நிறுத்திய சம்பவம் அவனை மறுபடியும் ஆட்கொண்டது.

பூமாவை எப்படியும் தேடிக் கண்டுபிடித்து, அவளிடம் மன்னிப்புப் பெற்று, புதுவாழ்வு தொடங்கவேண்டுமென்ற ஆசைக் கனவில் ராஜேந்திரன் மிதக்கத் தொடங்கினான். டைரெக்டர் சந்திரமௌலி உடல் தேறியதும், ஸ்டுடியோப் பொறுப்புகளை அவர் வசம் ஒப்புவித்துவிட்டுப் புறப்பட வேண்டுமென்று திட்டம் வகுத்தான். எதிர்காலம் கனவுலகமாகக் காணப்பட்டது. அந்தக் கனவுலகிலே அவன், பூமா, பிஞ்சுக்குழந்தை — அத்துடன் இன்னொரு உருவம்...! நினைவு படர்ந்தது. இன்னொரு உருவம்...! அப்படியே நடந்துவிட்டால்...கனவு மாளிகை பெரிதாக உயர்ந்தது.

'இன்னொரு உருவம்...!'—

அவன் பெருமூச்சு உதிர்த்தான். அவனது துடித்த விழிகளைச் சுற்றிலும் கண்ணீர்—ஆனந்தக் கண்ணீர்! அவன் மனத்தடியில் அமைதி கரை காட்டி நின்றது.

"ஸார், தபால்" என்று சொல்லி, ப்யூன் அன்றைத் தபால்களைத் தட்டில் கொண்டு

வந்து மேஜைமீது வைத்துச் சென்ருன். அவைகளையெல்லாம் மேலெழுந்தவாரியாகக் கண்ணேட்டமிட்ட டைரெக்டர் ராஜேந்திரன் குறிப்பிட்ட சில தபால்களை மாத்திரம் முதலில் உடைத்துப் பார்க்கலானுன். அவைகள் அழகான புகைப் படங்களைத் தாங்கி வந்திருந்தன.

அடுத்து எடுக்கவிருக்கும் படத்திற்கு 'புதுமுகங்கள் தேவை' என்று நாளிதழில் விளம்பரம் செய்திருந்தார்கள். அதற்குப் பேட்டிக்குப் போட்டியிட்டு வந்தவை இவை.

அந்த ஒரு புகைப்படத்தை ராஜேந்திரன் பார்த்ததும், காண்பது கனவா, நனவா என்ற நிலை எழுந்ததுபோல, அப்படிச் சிலையாக மலைத்து உட்கார்ந்துவிட்டான். படத்தின் அடியில் எழுதியிருந்த 'மாயா' என்ற எழுத்துக்களைப் படித்த அவனுக்கு எதுவுமே தோன்றவில்லை. படத்தைப் பார்த்த கணம் நிலவியிருந்த அமைதி, படத்தின் பெயரைப் பார்த்த மாத்திரத்தில் நிலை பெயர்ந்து அழிந்துபோனது.

"மாயா!"

பேழையில் பதிக்கப்பட்ட நித்திலம்போல, பூலோகத்தில் இடம்மாறிக் குதித்துவிட்ட தேவகன்னிகை ரம்பைபோல, தவழும் பால் நிலவில் மின்னல் படருகையில் ஒளிரும் மயக்க எழில்போல அவள் உருவம் காணப்பட்டது. மாயமோகினியாகவே இருந்தாள் அவள்.

தன் மனைவி பூமாவை அப்படியே வடித்தெடுத்ததுமாதிரியிருந்தது மாயாவின் தோற்றமும். முகவரியைப் பார்த்தான்; நடிகை ஒருத்தியின்மேற்பார்வை விலாசமிருந்தது.

ரேடியோவில்வெளிநாட்டுஒலிப் பரப்பில் ஐரோப்பிய சங்கீதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. எந்த நினைவும் அற்றவன் போல ராஜேந்திரன் சுழல் நாற்காலியில் சுழன்றவாறு ஒன்று, இரண்டு, மூன்று இப்படிப் பல முறைகள் மாயாவின் படத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். பூமாவைப் படம்பிடித்தது போல மைந்த மாயாவின் உருவம் அவனுக்கு மாயையாகவே தென்பட்டது. படத்தையே வைத்த கண்வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த அவன் மனப்புதிர் விடுபடவில்லை. படைப்புப் புதிருக்கே முதலில் விடை காணமுடியவில்லையாம்; மனப்புதிர் விடுபட்டுவிடுமா...?

அயன் ஓர் கலைஞன்; கலாவிற்பன்னன்—ஒரே வார்ப்பில் ஒரே அச்சாக இரண்டு உருவங்கள் சமைத்துவிடுவான் போலும்! இரட்டையர் அபூர்வப் பிறவிதான். ஒரே சாயலில் இரண்டு உருவங்களைப் படைத்து விந்தை புரிவதுதான் அவன் ஆக்கத்தின் அந்தரங்கமோ? அதுவேதான் அவனது கலை நுணுக்கத்தின் வெற்றிச் சின்னமோ? இது வாழ்க்கைப் புதிரா? அல்லது மனப்புதிர் தானே...?

(தொடரும்)

# பொழுது போக்கு

ராதா

## பணம்

'மணமக'ளுக்குப் பிறகு நாட்டுக்கும் சமூகத்திற்கும் நலம் பயக்கக்கூடிய நல்லதொரு சமூகப்படத்தை 'பணம்' என்ற கவர்ச்சிகரமான பெயரில் தமிழ் நாட்டுக்கு அளித்திருக்கின்றார் கலைவாணர் என். எஸ். கே. பணத்திலே, ஆண்களுக்குச் சூடுகொடுக்கும் விதத்தில் பெண் உரிமை பேசப்படுகிறது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், உலகத்திருமறையாம் திருக்குறளைப்பற்றிப் பிரசாரம் செய்யப்படுகிறது. இன்றையத் தமிழ் நாட்டு நிலையைப் பணத்திலே பார்க்க முடிகிறது. படக்கதை பழைய வரதட்சிணைக் கொடுமையைச் சித்தரித்துக் காட்டுவதாயிருப்பினும், ஆங்காங்கே சீர்திருத்தக் கருத்துக்களும், பகுத்தறிவுப் பிரசாரங்களும் பளிச்சிடுகின்றன.

'பணம், பணம்' என்று சதாத் துதி பாடும் ஆடியபாத முதலியார் தன் சொந்த மகன் உமாபதிக்கு, வைத்தியர் கந்தசாமியின் மகள் ஜீவாவை மணமுடிக்கிறார். ஆனால், கந்தசாமி தருவதாகச் சொன்ன ஐயாயிரத்தைத் தராததால், ஜீவாவை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டு, ஜமீந்தார் சாம்பசிவத்தின் மகள் கோமதியை, உமாபதிக்கு இரண்டாவது மணம் செய்விக்கிறார். கோமதி, ஏற்கெனவே சுந்தரத்தைக் காதலித்து வருகிறாள். இதை பள்ளியறையில் உமாபதிக்குக் கூறிவிடுகின்றாள் கோமதி. அக்கணமே வெளியேறிவிடுகின்றான் உமாபதி.

இன்ஸ்பெக்டர் ஈஸ்வரன் ஜீவா மீது காதல்கொண்டு அவளை அடைய எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல், சூழ்ச்சியால், அவளை ஓர் தனி அறையில் பூட்டி பலவந்தம் செய்கிறான். அதே சமயம் கந்தசாமியை ஒரு காட்டிற்கு அழைத்துச் சென்று, ஜீவாவைத் தனக்கு மணமுடிக்குமாறு கேட்க, கந்தசாமி கோபமடைந்து, அவனைத் திட்டி, அடித்துக் கீழே தள்ளிவிடுகின்றார். சீற்றமடைந்த ஈஸ்வரன் கந்தசாமியைச் சுட்டுவிடுகின்றான். இக்காட்சியை காமிராப் பைத்தியம் கான்ஸ்டபிள் ஆளவந்தார் படமெடுத்துவிடுகின்றான் எதிர்பாராதவிதமாக. அங்கு ஜீவாவைத் தேடிவந்த உமாபதியின் மேல் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, கைதிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றான். ஆனால் ஆளவந்தார் எடுத்த போட்டோ சமயத்தில் உதவியதால் உமாபதி விடுவிக்கப்பட்டு, ஜீவாவும் உமாபதியும். கோமதியும், சுந்தரமும் ஒன்று கூடுகின்றார்கள்.

படம் மூன்று மணிநேரம் ஓடிய போதிலும், அலுப்புத்தட்டாத வகையில் ஓடுகின்றது.

படத்தின் ஆரம்பமே ரசிக்கும் விதத்தில் நூதன முறையில் அமைந்திருக்கின்றது. பண ஆசை இருக்க வேண்டும், ஆனால் பேராசை இருக்கக்கூடாது என்று என். எஸ். கே.



கூறும்போது நாமும் அதை ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறோம்.

நடிப்பிலே முதலிடம் ஆடியபாதமாக வரும் தங்கவேலுக்குத்தான். அவர் பார்க்கும் ஒவ்வொரு பார்வைக்கும், ரசிகர்கள் தங்களின் மகிழ்ச்சியைக் கைதட்டல் மூலம் தெரிவித்துவிடுகிறார்கள். சிவாஜி கணேசன் குறை சொல்ல முடியாதபடி நடித்திருக்கிறார். படத்தின் முடிவில் தந்தையிடம் வாதாடும் கட்டத்தில், நடிப்பின் உச்சிக்கே வருகின்றார் பராசக்தி கணேசன். கோர்ட் சீனில், ரசிகர்கள் கணேசனைக் கண்டதும், பிரமாதமான வசனங்களை அவரிடமிருந்து எதிர்பார்த்து, ஏமாந்தனர். பத்மினியின் நடிப்பு சில கட்டங்களில் கண்ணீரை வரவழைத்து விடுகின்றது. வி. கே. ராமசாமி, பந்துலு, டி. கே. ராமச்சந்திரன் முதலியோரெல்லாம், வழக்கம்போலவே நன்கு நடிக்கிறார்கள். என். எஸ். கே. வேலைக்கார துரையாக வருகின்றார். தன் மீசைக்கு பில்டர் மீசை என்று பெயர்வைத்து, அவர் தரும் விளக்கமும், பணத்தைத் தேடி அவர் பாடும் பாட்டும் ரசிக்கத் தக்கவையாகும்.

கருணாநிதியின் வசனங்கள், படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. பாடல்களெல்லாம், எளிய நடையில் இருக்கின்றன. “தீனா, மூனா, கானா”, “பணமே உன்னைத் தேடி” போன்றவை எளிதில் மக்கள் மத்தியில் பிரபலமடையக் கூடியவை!

படத்திலே வரும், கனவுக் காட்சி பிரமாதமான முறையில் அமைந்திருக்கின்றது. காட்சி அமைப்புக்களெல்லாம் வாஹினியின் தரத்திலுள்ளன. ஒளி, ஒலிப்பதிவுகளிலும் குறைசொல்ல முடியாது.

படம் ஆபாசமற்று, எல்லோரும் பார்த்துப் பயனடையும் வகையில் எடுக்கப்பட்டிருப்பதால், குடும்பத்துடன் சென்றும் கண்டு களிக்கவேண்டிய படம் ‘பணம்’! ★


## சர்ஜீவன் சிலாஜித லேகியம்

எல்லாக் காலங்களிலும் பலத்தை அளிக்கிறது.



இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம் இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும், தாது விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்று வலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகு மூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை:- 44 நாட்கள் டப்பி ரூ. 5-4-0 | தபால் செலவு
22,, ,, ரூ. 3-4-0 | இனாம்

நீலகிரி டிப்போ, அக்கிப்பேட்டை சவுக், பெங்களூர் சிட்டி.

NILGIRI DEPOT, AKKIPET SQ., BANGALORE CITY.



*Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd. at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21. Editor: K. Appadurai M. A.*